# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 257 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆடி 25, செவ்வாய்க்கிழமை 09.08.2016


போரில் உடைந்த வீடு களை மட்டு மல்ல இன உறவையும் சீர் செய்வது அவசியம்

பக். 02

# ஐரோப்பிய ஒன்றியம் கொழும்புக்கு அழுத்தம்

## பயங்கரவாதச் சட்டத்தை நீக்கினால்தான் ஜி.எஸ்.பி. வரிச் சலுகை என்பதில் விடாப்பிடி

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 9

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கான ஏற்றுமதி வரிச் சலுகையை (ஜி.எஸ்.பி. பிளஸ்) இலங்கை விரைவில் மீளப் பெற்றுக் கொள்ளவேண்டுமாயின் உடனடியாகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கித் தேசிய பாதுகாப்புக்கு உரித்தான புதிய சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். அல்லது அதில் காணப்படும் முக்கிய சரத்துகளையாவது நீக்கவேண்டும். இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியம் அழுத்தம் கொடுத்து வருவதாக இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கான ஏற்றுமதி வரிச் சலுகை (ஜி.எஸ்.பி.பிளஸ்) நீக்கப்பட்டது. இதனால் இலங்கையிலிருந்து பொருள்களை ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்ய முடியாமல் போனது.

அண்மையில் ஐரோப்பாவுக்கான மீன் ஏற்றுமதித் தடை நீக்கப்பட்டது. இதனால், மீண்டும் மீனை ஏற்றுமதி செய்யும் வாய்ப்பை இலங்கை பெற்றது.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை இலங்கைக்கு பக். 25

## ‘கைதிகளை விடுதலை செய்’




தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரியும் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. வெலிக்கடைச் சிறைக்கு முன்பாகவும், யாழ்.மைய பேருந்து நிலையம் முன்பாகவும் மக்களும் அரசியல்வாதிகளும் போராட்டத்தில் ஈடுபட்டனர். கொழும்பில் நடந்த போராட்டத்தில் குரல் எழுப்பும் பௌத்ததுறவி. (விரிவு: பக்கம் 08)

## பன்னாட்டுக் கடிவாளம் 2017 மார்ச்சுடன் நீங்கும்

### அமைச்சர் ராஜித நம்பிக்கை



கொழும்பு, ஓக. 9

இலங்கைக்கு எதிராக எழுந்துள்ள அனைத்துப் பன்னாட்டு அழுத்தங்களும் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துடன் முடிவுக்கு வந்துவிடும். அப்போது நடக்கும் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்துடன் பன்னாட்டுக் கடிவாளத்தில் இருந்து இலங்கை விடுபட்டுவிடும்.

இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார். வடக்கு -கிழக்கு இணைப்பு, பன்னாட்டு விசாரணை தொடர்பாக வடக்கு மாகாண முதலமைச்சர் பக். 25

## ஜனாதிபதியின் கொள்கைக்கு எதிராகச் செயற்படுகிறது சு.க.

### கூறுகின்றார் நாமல் எம்.பி.

யாழ்ப்பாணம், ஓக. 9

மகிந்த ஆதரவு அணியின் பாத யாத்திரையில் பங்கேற்றவர்களுக்கு எதிராகச் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாயின், அது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கொள்கைக்கு எதிராக அமையும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

நிதிமோசடிக் குற்றச்சாட்டுத் தொடர்பிலான வழக்கு விசாரணைக்காக கொழும்பு - புறக்கோட்டை நீதிவான் மன்றத்தில் நாமல் ராஜபக்ச நேற்று முன்னிலையானார். இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலே மேற்கண்டவாறு பக். 23

## பசிலுக்குப் பிணை

கொழும்பு, ஓக. 9

நிதி மோசடிக் குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்படிருந்த முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சவைப் பிணையில் விடுவிக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது, பக். 25

## வான்முட்டும் அரோகராவுடன் நல்லூரில் நேற்று கொடியேற்றம்



யாழ்ப்பாணம், ஓக. 9

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த பெருந்திருவிழா ஆயிரக் கணக்கான பக்தர்களின் அரோகரா கோசத்துடன் நேற்று முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

காலை 9 மணிக்கு வசந்த மண்டபப் பூசை ஆரம்பமாகி, விநாயகப் பெருமான் மற்றும் முருகப் பெருமான் வள்ளி, தெய்வயானை சமேதராக எழுந்தருளிக் கொடித்தம்ப பூசைகள் நடைபெற்றன.

சிவாச்சாரியார்கள் திருமந்திரங்கள் ஓத, கந்தனின் கண்டாமணி ஒலிக்க, தம்பத்தை நோக்கி பக். 25

## பொலிஸ் சந்தேகநபர்களை உடன் கைது செய்யப் பணிப்பு

### மல்லாகம் நீதிமன்றம் அதிரடி

யாழ்ப்பாணம், ஓக. 9

கைது செய்யப்பட்டு சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்ட இளைஞன் பின்னர் கிளிநொச்சிக் குளத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பில் மூன்று வாரங்களுக்குள் சந்தேகநபர்களான பொலிஸ் அதிகாரிகளை கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு மல்லாம் நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது கடுமையாகத் தாக்கப்பட்டதாலேயே சிறிஸ்கந்தராசா சுமணன் என்ற (வயது 21) அந்த இளைஞன் உயிரிழந்தார் என்று அவருடன் கைது பக். 23

# தமிழ்க் கூட்டமைப்பு நல் முன்னுதாரணம்

## முஸ்லிம் அரசியல் தலைவர்களுக்கு அமைச்சர் பைசர் முஸ்தபா அறிவுரை

கொழும்பு, ஓக. 9

முஸ்லிம் அரசியல் தலைவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முன்னுதாரணமாகக் கொண்டு செயற்படவேண்டும்.

இவ்வாறு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

இலங்கை வானொலி முஸ்லிம் சேவை நூல் வெளியீட்டு நிகழ்வு கொழும்பு பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொள்ளாவிட்டாலும், ஒற்றுமையாக இணைந்து மக்களுக்கான சேவையை பக். 23

## லசந்த கொலைக்கு மகிந்தவே காரணம்

### சந்திரிகா நேரடியாகக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 9

ஊடகவியலாளர் லசந்தவின் கொலைக்கு முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்தவே காரணம் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் அத்தனகல பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத்தெரிவித்தார்.

“பெண்கள் உள்நுழையத் தடைவிதிக்கப்பட்டுள்ள இந்தியாவின் கோவில் ஒன்றுக்குள் மகிந்தவின் மனைவி சிரந்தி உள்நுழைந்தமையால் அந்தக் கோவிலானது பல வாரங்கள் மூடப்பட்டு சுத்தம் செய்யப்பட்டது. இந்தத் தகவலை தனது பத்திரிகையில் வெளியிட்ட லசந்தவை மகிந்த தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுத்தார், பக். 25

## போராளிகளுக்கு விச ஊசி அமைச்சரவையின் கவனத்துக்கு

### அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 9

புனர்வாழ்வின்போது முன்னாள் போராளிகளுக்கு விசஊசி ஏற்றப்பட்டுள்ளதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை அமைச்சரவையின் கவனத்துக்குக் கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு சிறைச்சாலை மறு சீரமைப்பு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் ‘உதயன்’ பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

இறுதிக்கட்டப் போரின்போது படையினரிடம் சரணடைந்த முன்னாள் போராளிகளுக்குப் புனர்வாழ்வின்போது விசஊசி ஏற்றப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டுப் பரவலாக முன்வைக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர், “உரிய ஆதாரத்துடன் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட வேண்டும். நடவடிக்கைக்குச் செல்வதாக இருந்தால் அது உறுதிப்படுத்தப்பட வேண்டும். மேற்படி குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுமானால், அது பக். 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரில் உடைந்த வீடுகளை மட்டுமல்ல இன உறவையும் சீர் செய்வது அவசியம்

## மனித உரிமை ஆணையாளர் வலியுறுத்தல்

வவுனியா, ஓக. 9

30 ஆண்டுகாலப் போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களைக் கட்டியெழுப்பும் முயற்சியின்போது, உடைந்துபோன வீடுகளையும் தொலைந்துபோன சொத்துக்களையும் மட்டுமல்ல, சமூகங்களுக்கும் இனங்களுக்கும் இடையே உடைந்துபோன உறவுகளையும் சீர்செய்வது முக்கியம். இவ்வாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்தார்.

மனித உரிமைகள் மற்றும் நல்லாட்சி என்னும் கற்கைநெறிக்கு தெரிவு செய்யப்பட்ட 200 க்கும் மேற்பட்ட இளைஞர், இளம்பெண்களுக்கான வரவேற்பு நிகழ்வு கடந்த சனிக்கிழமை வவுனியாவில் இடம்பெற்றது. இந்த நிகழ்வுக்காக விடுத்த செய்தியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அதில் தெரிவித்ததாவது:

30 வருடப் போரால் பாதிப்புக்களையும், இழப்புக்களையும் சந்தித்த இலங்கையின் எல்லாச் சமூகங்களிலும் இளைஞர்கள் பெரும் இடர்களையும் உரிமை மீறல்களையும் சந்தித்துள்ளார்கள்.

போர் முடிவடைந்த பின்னர் நாம் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கையையும் உடைந்துபோன சமூகங்களையும் மீளக்கட்டியெழுப்பும் முயற்சியில் ஈடுபடும் இந்த வேளையில் இளைஞர்களின் பங்களிப்பு அவசியமாகின்றது.

ஒவ்வொரு குடிமகனுக்கும் தனதும் தனது குடும்பத்தினதும் நலனுக்கு மட்டுல்லாது, சமூகத்தினதும் நாட்டினதும் நலனுக்காகவும் பங்களிக்கக் கடமையுள்ளது. ஆனால் கடந்த காலங்களில் பல காரணங்களால் இந்தக் கடமை அரிதாகவே காணப்பட்டது.

உலகளாவிய ரீதியில் தற்போது போர் மற்றும் வன்முறை பரவலாகக் காணப்படுகின்றது. இவை சிறுவர்கள் மற்றும் இளைஞர்களின் வாழ்க்கையில் பாரதூரமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. போரினால் உயிர் இழப்பவர்கள் பெரும்பாலானோர் சிறுவர்களாகவே காணப்படுகிறார்கள். போராளிகளில் பெரும்பாலானோர் இளைஞர்களாகவே உள்ளனர். இதனால் இவர்கள் இளவயதிலேயே அமைதியான வாழ்க்கையை அனுபவிக்க முடியாமல் பெரும் மன அதிர்ச்சி, உளவியல் தாக்கங்களால் பாதிக்கப்படுகிறார்கள்.

இலங்கையில் 2015ஆம் ஆண்டு நாம் பல அரசியல் மாற்றங்களைக் கண்டோம். அத்தோடு மனித உரிமைகள் பாதுகாப்பிலும் சில மாற்றங்களைக் கண்டோம். ஆனாலும் சட்டங்களை முழுமையாகச் செயற்படுத்துவது, சட்டங்களின் பாதுகாப்பைக் குடிமக்கள் முழுமையாக அனுபவிப்பது ஆகியவற்றில் இன்னும் பல மாற்றங்களைக் காணவேண்டியுள்ளது.

இதை அடைவதற்கு இளைஞர்களின் பங்களிப்பு மிகவும் முக்கியம். ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் மதிக்கும் சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஜனநாயகக் கொள்கைகளை நாம் ஒவ்வொருவரும் உள்வாங்கிக் கொள்வது மிக அவசியம்.

இளைஞர்களிடையே மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவதற்கு எமது கல்வித் திட்டங்களிலும் பலமாற்றங்களைக் கொண்டுவர வேண்டியுள்ளது. பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் பாடத் திட்டங்களில் மனித உரிமைகளை உள்ளடக்குவது மிகவும் முக்கியமானது. இந்த விடயத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழுவும் அரசிடம் பரிந்துரைகளைச் செய்து அழுத்தம் கொடுக்கும் -என்றுள்ளது. (த-21)

### நல்லூரில் இன்று

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழா நேற்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இதனை முன்னிட்டு ஆலயச் சூழலில் தெய்வீக இசை நிகழ்ச்சிகள் மற்றும் ஆன்மிக உரைகள் என்பன நடைபெற்று வருகின்றன.

இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள இரண்டாம் நாள் திருவிழாவில் நல்லூர் முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் கந்தபுராண சிந்தனைகள் என்னும் தலைப்பில் சைவப்புலவர் பாலச்சந்திரனின் தெய்வீகச் சொற்பொழிவு மாலை 5 மணி முதல் இரவு 7.30 மணி வரையும், நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் துர்க்காதேவி இல்லத்தின் அனுசரணையில் தெய்வீக இசையரங்கில் திருமுறைக் கச்சேரி மாலை 6.45மணி முதல் இரவு 8 மணிவரையும், நல்லை ஆதீன மண்டபத்தில் மொடேர்ண் சர்வதேச இந்து ஆகம கலை கலாசார நிறுவனத்தின் தெய்வீக இசைச்சங்கமம் இரவு 7 மணிமுதல் 8 மணி வரையும் நடைபெறவுள்ளது. (த-ரி)

## 41 தேக்கு மரக் குற்றிகளை ஏற்றிவந்த லொறி சிக்கியது

### அதிலிருந்தோர் தப்பிச் சென்றனர்



பல லட்சம் ரூபா பெறுமதியான 41 தேக்கு மரக் குற்றிகளை ஏற்றிச் சென்ற லொறி ஒன்றை மடக்கிப் பிடித்துள்ளதாகப் பளைப் பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன் இந்த லொறிக்கு முன்னால் விறகு மற்றும் முதிரைக் குற்றிகளுடன் வந்த படி ரக வாகனம் ஒன்றையும் முதிரை மரக் கடத்தலுக்கு வேவு பார்க்க வந்தது என்ற சந்தேகத்தில் கைது செய்துள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் பளை எழுதுமட்டுவாழ் பகுதியில் இடம்பெற்றது.

நேற்று அதிகாலை 5. 30 மணியளவில் கிளிநொச்சிப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த லொறி ஒன்றை வீதிக் காவலில் ஈடுபட்டிருந்த பொலிஸார் இடைமறித்தனர். இதன்போது வாகனத்தில் இருந்தவர்கள் கதவுகளைத் திறந்து கொண்டு தப்பிச் சென்றனர்.

சந்தேகமடைந்த பொலிஸார் வாகனத்தைச் சோதனை செய்தபோது அதில் 41 தேக்குமரக் குற்றிகள் காணப்பட்டன. இவை பலலட்சம்ரூபாபெறுமதியானவை. வாகனம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

தப்பிச் சென்றோர் தொடர்பாக விசாரணை நடத்தப்படுகின்றது. சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதும் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர். அத்துடன் அதே இடத்தில் வைத்து விறகு மற்றும் முதிரைமரக்குற்றியை ஏற்றிச்சென்ற படி ரக வாகனம் ஒன்றும் இடைமறிக்கப்பட்டது. அந்த வாகனச் சாரதி கைது செய்யப்பட்டார். தேக்கு மரக் குற்றிகளை கடத்தும் முயற்சிக்கு வேவு பார்ப் பதற்காக இந்த வாகனம் வந்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் விசாரணை மேற்கொள்ளப்படுவதாகப் பளை பொலிஸார் கூறினர். (த-21-ரி3)

### வித்தியா கொலை: பெண்ணுக்கு மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 9

வித்தியாவின் தாயாரை அச்சுறுத்தினார் எனக் குற்றம் சுமத்தப்பட்ட பெண்ணை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் எம்.எம்.றியால் உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது.

வித்தியாவின் தாயாரை அச்சுறுத்திய இரு பெண்களில் ஒருவரான சிவதேவன் செல்வராணி என்பவருக்கே இவ்வாறு விளக்கமறியல் நீதிவானால் நீடிக்கப்பட்டது. அச்சுறுத்திய குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மற்றொரு பெண்ணான மகாலிங்கம் தவநிதி அண்மையில் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் உயிரிழந்திருந்தார். (த-5-4)

## சந்தேகநபர்களுடன் சேர்ந்து உலா வருகின்றது பொலிஸ்

### பருத்தித்துறை நீதிவான் எச்சரிக்கை

பொலிஸார் சந்தேக நபர்களுடன் சேர்ந்து உலாவ, முறைப்பாட்டாளர்கள் நடு வீதியில் அலைகின்றார்கள். பொலிஸாரின் இத்தகைய செயற்பாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது. இவ்வாறு எச்சரித்தார் பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் பெ.சிவகுமார்.

கூரிய ஆயுதத்தினால் இளைஞர் ஒருவர் வெட்டப்பட்டமை தொடர்பான வழக்கு நேற்று நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். அவர்களில் ஒருவர் பொலிஸ் உத்தியோகத்தர். வழக்கு விசாரணையின்போது சாட்சியமளித்த வெட்டுக் காயங்களுக்கு உள்ளான இளைஞனின் தந்தை, பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் என்னால் கொடுக்கப்பட்ட வாக்குமூலம் மாற்றிப் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனது சாட்சியங்கள் முறையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்த வேண்டிய தேவை இருக்கின்றது என்று [illegible] பார். மன்றில் இதன்போது குறுக்கு விசாரணையும் இடம்பெற்றது.

சந்தேக நபர்கள் மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப் பெறும்போது பொலிஸார் முறையாகச் செயற்பட வேண்டும். பொலிஸார் சந்தேக நபர்களுடன் சேர்ந்து உலாவ, முறைப்பாட்டாளர்கள் நடு வீதியில் அலைகின்றனர். இவ்வாறான நடவடிக்கைகளில் பொலி[illegible] கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்தார். (த-5-ரி-109)

## 2 கிலோ கேரளக் கஞ்சா பிடிபட்டது தாவடியில்

### 23 வயது இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 9

தாவடிப் பகுதியில் மதுவரித் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட திடீர்ச்சுற்றிவளைப்பில் 2 கிலோ கேரளக் கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டன.

இவற்றை வைத்திருந்தார் என்ற சந்தேகத்தில் 23 வயதான இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார். இந்தத் தகவலை மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி சிறிமான தெரிவித்தார்.

மதுவரித் திணைக்கள அதிகாரிகள் நேற்றுமுன்தினம் திடீர்ச் சுற்றிவளைப்பு மேற்கொண்டனர். இதன்போதே மேற்படி நபர் கஞ்சாப் பொதிகளுடன் கைது செய்யப்பட்டார் என மதுவரித் திணைக்களத்தினர் தெரிவித்தனர். சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-5-109)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலை.ஊழியர் போராட்டம் நேற்றுடன் முடிவு

கொழும்பு, ஓக. 9
பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களால் நாடுதழுவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட பணிப்புறக்கணிப்பு நேற்றுடன் நிறைவுக்கு வந்தது.
கல்விசாரா ஊழியர்களின் ஒருசில கோரிக்கைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டதால் குறித்த பணிப்புறக்கணிப்பு நிறைவுக்கு வந்தது என்று பல்கலைக் கழக கல்விசாரா ஊழியர்கள் சங்கம் தெரிவித்தது.
யாழ். பல்கலைக்கழகம் உட்பட நாட்டின் அனைத்துப் பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்கள் கடந்த மாதம் 27ஆம் திகதியிலிருந்து ஏழு கோரிக்கைகளை முன்வைத்து பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வந்தனர், கடந்த 12 நாள்களாக அவர்கள் பணிகளுக்கு செல்லாது போராட்டத்தை நடத்தி இருந்தனர்.
இந்த நிலையில் குறித்த ஊழியர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் சில நிறைவேற்றப்படும் என அரசு உறுதியளித்துள்ளது.
இதனை அடுத்தே கல்விசாரா ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பை கைவிட்டு இன்று முதல் பணிக்குத் திரும்புவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-21)

# கொக்கிளாய் உவர்த் தடுப்பணை எதிர்ப்பால் திட்டம் இடைநிறுத்தம்

### கட்ட விடமாட்டோம் என்கின்றனர் தெற்கிலிருந்து வந்த மீனவர்கள்

முல்லைத்தீவு, ஓக. 9
கொக்கிளாய் உவர்த் தடுப்பணைத் திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. தெற்கிலிருந்து வந்து கொக்கிளாய்க் கரையோரத்தில் தங்கியிருந்து மீன்பிடியில் ஈடுபடுபவர்கள் இந்தத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதால், அவர்களுடன் கலந்துரையாடி ஒரு முடிவுக்கு வரும்வரையில் திட்டத்தை நிறுத்தி வைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.
கொக்கிளாய் விவசாய நிலங்கள் உவராகிக் கெட்டழிவதில் இருந்து அவற்றைப் பாதுகாப்பதற்கான தடுப்பணை அமைப்பதற்காக இடர்முகாமைத்துவப் பிரிவு 35 லட்சம் ரூபாவை ஒதுக்கியது. தடுப்பணையை அமைப்பதற்கான விலைமனு விவசாயத் திணைக்களத்தால் கோரப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடம் பணி ஒப்படைக்கப்பட்டது. ஒப்பந்தகாரர் பணியை ஆரம்பித்தபோது அங்கு தங்கியுள்ள சிங்கள மீனவர்கள், தடுப்பணைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். ஒப்பந்தக்காரர் இது குறித்த முறைப்பாட்டை அடுத்து முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சம்பவ இடத்தினை நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.
“800 மீற்றர் நீளமான தடுப்பணையை அமைப்பதற்கு இடர் முகாமைத்துவ அமைச்சு நிதி ஒதுக்கியது. அதனடிப்படையில் பணியை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தோம். தடுப்பணை உடனடியாக அமைக்கப்பட்டால் 170 ஏக்கர் நிலம் உவரடையாது. ஏனைய நிலங்களையும் பாதுகாக்க முடியும். இதனை மேற்கொள்ளவிடாது தடுத்தவர்களுடன் நானும், இடர்முகாமைத்துவ உதவிப் பணிப்பாளரும் பேசினோம். தடுப்பு அணை அமைக்கப்பட்டால் தாம் தொழில் செய்யும் பிரதேசம் பாதிக்கப்படும் என்று அவர்கள் கலைப்படுகின்றனர். இதனால் தடுப்பணைக்கு அனுமதிக்க மாட்டோம் என்று குறிப்பிட்டனர். இந்த விடயத்தில் இறுதி முடிவு எடுப்பதற்காக 22ஆம் திகதி கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது” என்று மாவட்ட விவசாயத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஆலகுலன் தெரிவித்தார். (உ-5,101)

## வடக்குப் போக்குவரத்துச் சட்டம் சனியன்று முதல் நடைமுறைக்கு

யாழ்ப்பாணம், ஓக. 9
வடக்கு மாகாண போக்குவரத்து நியதிச் சட்டம் கடந்த 6ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வந்துள்ளது. வடக்கு மாகாண ஆளுநர் நியதிச் சட்டத்துக்கான அங்கீகாரம் வழங்கியதைத் தொடர்ந்து, அது நடைமுறைக்கு வந்தது என வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார். இதன் மூலம் 100 தொடக்கம் 150 பேருக்கு தொழில்வாய்ப்பை வழங்க முடியும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டது.
வடக்கு மாகாணத்தில் போக்கு வரத்தை ஒழுங்குபடுத்தும் பொருட்டு இந்த நியதிச் சட்டம் உருவாக்கப்பட்டது. அதில் ஆளுநர் சில திருத்தங்களை முன்வைத்தார். அவற்றை மாகாண சபை ஏற்றுக் கொண்டது. திருத்தப்பட்ட நியதிச் சட்டத்துக்கு ஆளுநர் ஒப்புதல் வழங்கினார்.
“வடக்கு மாகாணத்தில் மாணவர்கள், மாற்றுத் திறனாளிகளை பேருந்துகள் ஏற்றுவதில்லை என்று தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன. தற்போது எமது நியதிச் சட்டத்துக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. முதல் நடவடிக்கையாக மாணவர்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும் உரிய அங்கீகாரம் வழங்காத பேருந்துகளின் அனுமதிகள் பறிக்கப்படும். எதிர்காலத்தில் வடக்கு மாகாணப் போக்குவரத்தைப் பார்த்து இலங்கையின் ஏனைய மாகாண சபைகளும் பின்பற்றக் கூடிய நிலமை உருவாக்கப்படும்” என்று வடக்குப் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார். (உ-5)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பில் உள்ள கைதிகளிடமும் கிளம்புகிறது விச ஊசி சர்ச்சை

முன்னாள் போராளிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது அவர்களுக்கு விச ஊசி ஏற்றப்பட்டது என்று கூறப்படுவது பெரும் சர்ச்சையாக மாறியுள்ள நிலையில் அனுராதபுரம் சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதி ஒருவரின் மனநிலை பாதிக்கப்பட்டதற்கும் ஊசி ஏற்றப்பட்டமை காரணமாக இருக்கும் என்று சக கைதிகளால் சந்தேகம் கிளப்பப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வரணியைச் சேர்ந்த இராசையா ஆனந்தராசா2006 ஏப்ரல் மாதம் கைது செய்யப்பட்டார். ஆறு ஆண்டுகளின் பின்னர் அவர் 2012 விடுவிக்கப்பட்டார். ஆதே ஆண்டு நவம்பர் மாதம் மீண்டும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அனுராதபுரம் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்.

விடுவிக்கப்பட்ட தன்னை மீண்டும் கைது செய்ததை எதிர்த்து 2016 ஆண்டு ஜுன் மாதம் 5ஆம் திகதி உணவு தவிர்ப்பு போராட்டம் நடத்த ஆரம்பித்தார் ஆனந்தராசா. 12 நாள்கள் அவரது போராட்டம் நீடித்தது. உடல் நிலையில் பாதிக்கப்பட்டு மயக்கமடைந்தார்.

அனுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவருக்கு ஊசி போடப்பட்டது என்றும் ஊசி போடப்பட்ட சில நாள்களில் அவருடைய உடலில் பல மாற்றங்கள் ஏற்பட்டன என்றும் உடல் மெலிந்து, நெஞ்சு, கால், முகம் போன்றன கறுத்து உருத் தெரியாத அளவு ஆள் மாறிப் போனார் என்றும் சக கைதிகள் தெரிவிக்கின்றனர்.

20016 ஜுலை மாதம் 18ஆம் திகதி அவருக்கு மீண்டும் ஒரு ஊசி ஏற்றப்பட்டது என்றும் அதன் பின்னர் இவரது இயல்பான நடத்தையில் மாற்றங்கள் ஏற்பட்டன என்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர் போன்று நடந்துகொள்கிறார் என்றும் சக கைதிகள் மேலும் தெரிவித்தனர்.

நேற்று அனுராதபுரம் சிறைக்குச் சென்ற வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனிடமும் அரசியல் கைதிகள் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டினர்.

“அரசியல் கைதிகளுடன் பேசினேன். ஊசி போட்டதால் பாதிக்கப்பட்ட அரசியல் கைதியையும் அவர்கள் அடையாளம் காட்டினார்கள். அவர், ஒரு விடயத்தைக் கதைத்து கொண்டிருக்கும்போதே திடீரென வேறு விடயங்களைக் கூறுவார், பின்னர் அங்கிருந்து எழுந்து சென்றுவிடுவார், மீண்டும் வருவார், சிறுது நேரத்தில் மீண்டும் எழுந்து செல்வார், அவரது செயற்பாடுகள் இயல்பான மனிதர்களைப் போன்றதாக இருக்கவில்லை” என்று உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர். (உ-21)

# எனது மகனைக் கடத்தியதை ஒப்புக் கொண்டது ஈ.பி.டி.பி.

## அவரை மீட்டுத் தர வேண்டும் என்று கருத்தறியும் செயலமர்வில் தாய் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.9

2007 ஆம் ஆண்டு கடையில் வைத்து சிவில் உடையில் வந்தவர்களால் எனது மகன் பிடிக்கப்பட்டார். நாம்தான் கூட்டிவந்தோம், விசாரணையின் பின்னர் விடுகின்றோம் என்று ஈ.பி.டி.பியினர் கூறினர். அவ்வாறு ஒத்துக்கொண்டவர்களிடமிருந்து எமது பிள்ளைகளை மீட்டுத் தருவதற்கு செயலணிகள் ஆவன செய்ய வேண்டும்.

இவ்வாறு தாய் ஒருவர் மக்கள் கருத்தறியும் செயலணியிடம் கோரிக்கை விடுத்தார்.

நல்லிணக்கம் தொடர்பாக மக்கள் கருத்தறியும் செயலணியின் அமர்வு கடந்த சனிக்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது–

எமது பெயர்களோ, படங்களோ ஊடகங்களில் வெளிவருவதைநாம்விரும்பவில்லை. குரலை வெளியிடலாம். எமது பெயர் வெளிவருவதை நாம் இன்னும் விரும்பவில்லை.

எனது மகன் 2007 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 21 ஆம் திகதி யாழ்.நகரில் உள்ள கடையில் பணியாற்றிக் கொண்டிருந்தார். அங்கு இரண்டு மோட்டார் சைக்கிள்களில் சென்ற நால்வர் மகனைப் பிடித்துச் சென்றனர். பிடித்துச் சென்றனர் என்று அன்று மாலை எமக்குத் தகவல் தெரிந்து, மறுநாள் நான் ஈ.பி.டி.பி. முகாமுக்குச் சென்று விசாரித்தேன். அங்கிருந்த ஒரு முக்கியஸ்தர் எனது மகனைத் தாமே அழைத்து வந்தார் என்றும் விசாரணை முடிந்த பின்னர் அவரை விடுவிப்போம் என்றும் கூறினார். அவ்வாறு கூறியவர் இன்றும் இங்கு உள்ளார். அவர்களிடம் நீதியான விசாரணைகள் எவையும் இடம்பெறவில்லை. அவர்கள் சுதந்திரமாகத் திரிகின்றனர். எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது?

இவ்வாறு இனம்காட்டியவர்கள் மீதே எந்த சட்ட நடவடிக்கையும் இடம்பெறாத நிலையில் எவ்வாறு நல்லிணக்கம் ஏற்படும்?. அல்லைப்பிட்டியை சொந்த இடமாக கொண்ட நாம் இடப்பெயர் வால் யாழ்ப்பாணத்தில் அலைகின்றோம். இவற்றுக்கு வழியேற்படுத்த நீங்கள் முன்வரவேண்டும்.– என்றார். (ரு-4,10)

**தவறிவிட்டது**

5ஆம் வட்டாரம், வேலணையைச் சேர்ந்த கனகலிங்கம் ரிஷிகேசன் என்பவரது சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் என்பன கடந்த 04.08.2016 அன்று யாழ் நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்

தொடர்பு 077 066 6592

**பெயர் மாற்றம்**

கைதடி மேற்கு கைதடியைச் சேர்ந்த ராணி விஸ்வலிங்கம் ஆகிய நான் எனது பெயரை புஸ்பராணி விஸ்வலிங்கம் என மாற்றம் செய்வதோடு இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்ப மிடுவேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்.

புஸ்பராணி விஸ்வலிங்கம்

**வீடும், காணியும் விற்பனைக்கு**

பருத்தித்துறை கிராமக் கோட்டடியிலுள்ள 2 ½ பரப்பு காணியில் வீட்டுடன் கூடிய நிலப்பரப்பு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு 076 569 2483

**பரிசுத்த ஆவிக்கு செபம்**

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நானடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட் கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரையும் நான் மன்னிக்க அருள் புரிபவரே. என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்துக்கும் நன்றி கூறித்துதிக்கின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாயிருப்பினும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவிலா மகிமையில் பங்கு பெற வேண்டுகின்றேன்.- ஆமென்

அடியார்.

**உடனடி வேலைவாய்ப்பு**

இலகு ரக வாகன/ பாரவூர்தி சுத்திகரிப்பு மற்றும் அலுவலக சுத்திகரிப்பு போன்ற சேவையில் முன்னனுபவம் உள்ளவர்கள் தேவை.

சம்பளம் தங்களின் தகைமை மற்றும் அனுபவத்திற்கேற்ப பேசி தீர்மானிக் கப்படும். தகுதியுடையவர்கள் கீழ் குறிப்பிட்ட முகவரிக்கு நேரில் வரவும்.

கீன்வெல் (பிறைவேட்) லிமிட்டெட்
இல.154, 1 ஆம் குறுக்கு தெரு,
யாழ்ப்பாணம்,

# கனகாம்பிகை அம்மன் ஆலய காணியில் விகாரை அமைப்பதை நிறுத்தவேண்டும்

## அகில இலங்கை இந்துமா மன்றம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 9

கிளிநொச்சி கனகாம்பிகை அம்மன் ஆலயக் காணியில் விகாரை அமைப்பதை உடன் தடுத்து நிறுத்த வேண்டும். இராணுவத்தினரையும் கோயில் வளாகத்தில் இருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அகில இலங்கை இந்துமா மன்றம் கோரிக்கை விடுத்தது. அகில இலங்கை இந்துமாமன்றம் அனுப்பியுள்ள ஊடகச் செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது–

கனாம்பிக்கை அம்மன் ஆலயத்துக் சொந்தமான 5 ஏக்கர் நிலம், போரின் பின்னர் இராணுவத்தினரால் ஆக்கிரமிக் கப்பட்டது. அங்கு முகாம் அமைக்கப்பட்டுள்ளது. மிகப்பெரிய விகாரை அமைக்கும் நோக்குடன், சுற்று மதில் அமைக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இதற்கு வன்மையான கண்டனத்தை இந்துமாமன்றம் தெரிவித்துக் கொள்கின்றது. வடக்கு – கிழக்கு மாகாணங்களில், தமிழர்களின் பாரம்பரிய பிர தேசங்களில் இராணுவத்தினரால் விகாரைகள் அமைக் கப்பட்டு வருவதை நாம் ஏற்கனவே ஜனாதிபதி, பிரதமர் உட்பட அமைச்சர்கள், எதிர்கட்சித் தலை வர் ஆகியோரது கவனத்திற்கு கொண்டு வந்திருந்தும் தமிழர் தாயகப் பிரதேசங் களில் விகாரைகள் அமைக்கப்படுவது நிறுத்தப்படவில்லை. கனகாம்பிகை அம்மன் ஆலயத்துக்குச் சொந்தமான காணியில் இராணுவம் குடிகொண்டது மட்டுமல்ல அங்கு பௌத்த விகாரையை அமைப்பதை எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழர் பாரம்பரிய பிரதேங்களில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுவது எவரது தேவையை நிறைவேற்ற எனவும் கேட்க விரும்புகின்றோம்.

'நீங்கள் எவரேனும் எந்தவித ஆட்சேபனையை முன்வைத்தாலும் எமது சமய வெறிக் கொள்கையை நாம் மாற்ற மாட்டோம்' என்று நல்லாட்சி அரசும் கூறு வதை அந்த ஆட்சி அமையப் பங்களிப்புச் செய்த தமிழர்கள் ஏற்றுக் கொள்ள மாட் டார்கள். இவ்வாறான விதண்டாவாதக் கொள்கையை நல்லாட்சி அரசு கைவிட உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். எதிர்க் கட்சி தலைவர் உள்பட மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாவரும் ஒருங்கிணைந்து கனகாம்பிகை அம்மன் ஆலயக் காணியில் விகாரை அமைப்பதை உடன் தடுத்து நிறுத்த வேண்டும். இராணுவத்தினரையும் கோயில் வளாகத்தில் இருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுப்பார்கள் என்று மிகுந்த நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றோம்.

'ஒரு சமயத்தின் மீது பிறசமய ஆதிக்கம் ஒழிக்கப்படும்' என்ற ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனம் உறுதி செய்யப் படுவதையும் எதிர்பார்த்து நிற்கின்றோம் - என்றுள்ளது. (ரு-5)

# சூழ்ச்சிக்காரரோடு இணைந்தே நான் ஆட்சியை நடத்தினேன்

## மகிந்த எம்.பி. கூறுகின்றார்

சூழ்ச்சிக்காரர்களுடன் இணைந்தே நான் ஆட்சி செய்தேன் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

தென்கொரியாவின் சியோல் நகரில் இலங்கையர்களைச் சந்தித்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது–

எனது ஆட்சியின் கீழ் அமைச்சர்களாக பதவி வகித்தவர்கள் இந்த அரசிலும் அமைச்சுப் பதவி வகிக்கின்றனர். என்னுடன் இருந்து ஒளிப்படம் எடுத்துக் கொள்ள முயற்சித்த சில அமைச்சர்கள் இன்று மைத்திரியுடன் ஒளிப்படம் எடுத்துக் கொள்ள முயற்சிக்கின்றனர். நான் பெற்றுக்கொண்ட கடன்கள் நாட்டின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதை நாட்டைப் பார்க்கும்போது புரிந்து கொள்ள முடியும். நாம் ஒன்பது பில்லியன் ரூபா கடன் பெற்றுக் கொண்டோம் என்று தற் போதைய ஆட்சியாளர்கள் குற்றம் சுமத்துகின்றனர். நாம் பெற்றுக் கொண்ட கடன் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக் காட்டப்படுகின்றது.

தற்போதைய அரசு அதனை விடவும் அதிகளவு கடனை குறுகிய காலத்தில் பெற்றுக் கொண்டுள்ளது. இந்தக் கடன் தொகைக்கு என்னவாயிற்று எனக் கேட்டால் வாங்கிய கடனை செலுத்தி வருகின்றோம் என்று கூறுகின்றார்கள்.

வேலை செய்ய முடியாவிட்டால் அனைத்து குற்றங்களும் ராஜபக்ச மீதான குற்றச்சாட்டுக்களாக மாறுகின்றன.

நாம் நாட்டுக்கு நேர்மையாக கடமையாற்றியுள்ளோம், பொய் சொல்லவில்லை. நாம் செய்த பணிகளில் ஒரு துளியேனும் இந்த அரசு செய்யவில்லை – என்றார். (ரு-5)

**பொது அறிவித்தல்**

அருள் விளங்கு யாத்திரை செல்லப்பிள்ளையார் திருக்கோயில் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும்

**இடம்:** யாத்திரை செல்லப்பிள்ளையார் திருக்கோயில் மண்டபம்
**காலம்:** 23.08.2016 செவ்வாய்க்கிழமை

மேற்படி விடயம் தொடர்பாக வருகின்ற 23.08.2016 ஆம் திகதி பொதுக்கூட்டமும்,நிர்வாக சபைத் தெரிவும் நடைபெறவுள்ளது. மேற்படி கூட்டத்துக்கு பொதுச் சபை உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் சமூக ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்
யாழ். வீதி, காங்கேசன்துறை. திருப்பணிச் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஒருபோதும் இணைக்கக்கூடாது

## கிழக்கு முஸ்லிம் சிவில் அமைப்புக்களின் சம்மேளனம் தீர்மானம்

அம்பாறை, ஓக. 9
இலங்கை தொடர்ந்தும் ஒற்றையாட்சி நாடாக இருக்க வேண்டும். வடக்கு – கிழக்கு மாகாணம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இணைக்கப்படக் கூடாது.
இவ்வாறு கிழக்கு முஸ்லிம் சிவில் அமைப்புக்களின் சம்மேளனம் தீர்மானம் நிறைவேற்றியது.
கிழக்கு முஸ்லிம் சிவில் அமைப்புக்களின் சம்மேளன மாநாடு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கல்முனை ஆசாத் மண்டபத்தில் நடைபெற்றது. அதிலேயே இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
அதில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:
இலங்கை தொடர்ந்தும் ஒற்றையாட்சி நாடாக இருத்தல் வேண்டும். ஜனாதிபதி நேரடியாக மக்களால் தெரிவு செய்யப்படுபவராகவும் வரையறுக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்டவராகவும் நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூறக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
சிறுபான்மை இனங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் இரண்டு உப ஜனாதிபதிகள் (தமிழ், முஸ்லிம்) நியமிக்கப்படல் வேண்டும்.
நாடாளுமன்றம் இரண்டு அவைகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். அவை மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சபை மேலவை அல்லது செனற் சபை என்பனவாகும். இந்த மேல் சபையில் எல்லா சமூகங்களையும் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற சம அளவிலான எண்ணிக்கையைக் கொண்ட பிரதிநிதிகள் அங்கம் வகித்தல் வேண்டும்.
இலங்கையில் நடைமுறையில் உள்ள ஒன்பது மாகாணங்களும் அதே முறையில் தொடர்ந்தும் அமைந்திருத்தல் வேண்டும். எந்தவொரு மாகாணமும் இன்னொரு மாகாணத்துடன் இணைக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும். அவ்வாறு இணைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குகின்ற 13 ஆம் திருத்தத்தின் 154 ஏ (3) என்ற பிரிவு அகற்றப்பட வேண்டும்.

> கிழக்கு முஸ்லிம் சிவில் அமைப்புக்களின் சம்மேளன மாநாடு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கல்முனை ஆசாத் மண்டபத்தில் நடைபெற்றது. அதிலேயே இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாகாணங்களில் அரசமைப்பால் உத்தரவாதப்படுத்தப்பட்ட சுயாட்சி நிலவ வேண்டும். மாகாண ஆளுநர்களுக்குத் தற்போது வழங்கப்பட்ட அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட வேண்டும். உள்ளூராட்சி மன்றங்களின் சுயாட்சியும் சுயாதீனமும் அதிகரிக்கப்பட வேண்டும். தேர்தல் முறையில் மாற்றம் செய்கையில் சிறுபான்மையினங்களின் விகிதாசாரத்துக்கு ஏற்ப பிரதிநிதித்துவம் உறுதிப் படுத்தப்படும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். முஸ்லிம்கள் தனியான ஒரு சமூகம் என்ற வகையில் எல்லா நிலமைகளிலும் அவர்களது தனித்துவ அடையாளம் பேணப்பட வேண்டும்.
எதிர் காலத்தில் அரச காணிகள் பகிர்வின்போது முஸ்லிம்களுக்குரிய இன விகிதாசாரம் பேணப்பட வேண்டும்.
அரச நியமனங்களில் மாவட்ட இன விகிதாசாரம் பேணப்பட வேண்டும். சிங்களம், தமிழ் என்பன நாட்டின் தேசிய அரச கரும மொழிகளாகவும் ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் இருத்தல்வேண்டும்.
(ற-5-30)

## திருட வந்தவர் வசமாகச் சிக்கினார்

முல்லைத்தீவு, ஓக. 9
முள்ளியவளை சந்தி அம்மன் கோயிலுக்கு அருகாக உள்ள வீட்டில் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் திருடுவதற்காக உள்ளே நுழைந்த சந்தேக நபர், வீட்டாரிடம் வசமாக மாட்டிக் கொண்டார். குறித்த நபர் 'முறையாகக்' கவனிக்கப்பட்ட பின்னர் முள்ளியவளைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.
உடைகள் எதுவுமற்ற நிலையில் வீட்டு வளவினுள் நபர் ஒருவர் புகுவதை வீட்டின் உரிமையாளர் அவதானித்தார். வீட்டினுள் நுழைந்தவரைப் பின்தொடர்ந்து சென்று, அவரைக் கையும் மெய்யுமாகப் பிடித்தார். வீட்டு உரிமையாளர் சத்தம் எழுப்பவே அயலிலுள்ள மக்களும் திரண்டுள்ளனர். அங்கு வந்த மக்கள் மேற்படி நபரை முள்ளயவளைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.
பொலிஸார் கைவிலங்கிட்டு அவரைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்ல முற்பட்டபோது தப்பியோட முயற்சித்தார். எனினும் அவரது முயற்சி வெற்றி பெறவில்லை. (ற-5-ரி7-433)

# செஞ்சோலை படுகொலையின் 10ஆம் ஆண்டு நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஓக. 9
செஞ்சோலைப் படுகொலையின் 10ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.
இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.
முல்லைத்தீவு மாவட்டம் வள்ளிபுனம் பகுதியில் அமைந்திருந்த செஞ்சோலை சிறுமிகள் இல்லத்தின் மீது 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி விமானப் படையினர் நடத்திய குண்டுத் தாக்குதலில் பாடசாலை மாணவிகள் 61 பேர் படுகொலை செய்யப்பட்டனர். 129 பேர் காயமடைந்தனர்.
உயிரிழந்தவர்களை நினைவு கூரும் 10ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். கோட்டைக்கு அருகில் உள்ள முனியப்பர் கோவில் பகுதியில் நினைவேந்தல் நிகழ்வு மாலை 3.30 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.




அனைவரையும் கலந்து கொண்டு படுகொலைக்கு நீதிகோரியும், உயிரிழந்த மழலைகளின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்குமாறு அழைப்பு விடுக்கின்றோம் என்று செ.கஜேந்திரன் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (ற-5)

# பண்ணையில் விபத்து: மூன்று பேருக்குக் காயம்

யாழ்ப்பாணம் - பண்ணைப் பகுதியில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மூவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
நேற்று மாலை 4.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது. கொட்டடியைச் சேர்ந்த வாகீசன் (வயது-40), மண்டைதீவைச் சேர்ந்தவர்களான ரக்ஸன் (வயது-25) மேலும் ஒருவரும் காயமடைந் தனர்.
இளைஞர்கள் இருவரும் ஒரு மோட்டார் சைக்கிளில் யாழ்ப்பாணத்தில் இருந்து மண்டைதீவை நோக்கிச் சென்றுள்ளனர். இதன்போது முன்னால் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை முந்திச் செல்ல முற்பட்டபோதே இந்த விபத்து இடம் பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்த விபத்தில் இளைஞர்கள் சிறிது காயங் களுக்குள்ளானார்கள். குடும்பஸ்தர் காலிலும், தலைப் பகுதியிலும் படுகாயமடைந்தார்.
மூவரும் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்.பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-101)

## சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட ஆளுநர் கௌரவிப்பு

சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்டத்தின் ஆளுநராக ஜப்பானில் பதவியேற்று நாடு திரும்பிய லயன் மருத்துவர் வை. தியாகராஜாவுக்கு 306 பி 1 மாவட்டத்தைச் சேர்ந்த லயன்ஸ் கழகங்கள் வரவேற்பு நிகழ்வு நடத்தின. இந்த நிகழ்வு கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.
யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலில் இருந்து மாவட்ட ஆளுநரும், லயன் சீமாட்டியும் ஊர்வலமாக விழா மேடைக்கு அழைத்து வரப்பட்டனர்.
சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட ஆளுநர், சபையின் பிரதி செயலாளர் லயன் வ.ஸ்ரீபிரகாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் 306 பி1 மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் மாவட்ட ஆளுநர்கள், உதவி ஆளுநர், பிராந்திய வலய தலைவர்கள், மாவட்ட இணைப்பாளர், மாவட்டச் செயலாளர், பிரதிப் பொருளாளர், லயன்ஸ் கழகங்களின் பிரதிநிதிகள் உட்பட பெருமளவானோர் கலந்து கொண்டனர்.
ஜா எல லயன்ஸ் கழகத்தினர் கந்தவேள் வித்தியாலயத்துக்கு கணினி உபகரணங்களையும், மகாபே லயன்ஸ் கழகத்தினர் யாழ்.மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைக்கு வழங்க 3 லட்சம் ரூபா பெறுமதியான கண் பரிசோதனைக் கருவிகளையும், சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் சாவகச்சேரி வைத்தியசாலைக்கான இரத்த அமுக்க பரிசோதனைக் கருவிகளையும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் நந்தகுமாரிடம் கையளித்தனர்.
யாழ். மாவட்டச் செயலரின் கிராமங்களை பச்சைப் பசேலென ஆக்கும் மரம் நடுகைத் திட்டத்துக்காக யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தினர் 10 ஆயிரம் மரக் கன்றுகளையும், சங்கானை லயன்ஸ் கழகம் 5 ஆயிரம் மரக்கன்றுகளையும் லயன்ஸ் கழகங்கள் ஊடாக பொதுமக்களுக்கு வழங்குவதற்காகக் கையளித்தனர்.
அனைத்து லயன்ஸ் கழகங்களும் மாவட்ட ஆளுநரையும், அவரது பாரியாரையும் மலர் மாலை அணிவித்து கௌரவித்தன. நினைவுப் பரிசில்களும் வழங்கின.
(ற-9)


# வீடு புகுந்து மிரட்டியவர்கள் இனங்காணப்பட்டதால் ஓடினர்

## பொலிஸாரால் மூவர் கைது; வாள், கத்திகளும் மீட்பு

யாழ்ப்பாணம், ஓக. 9
அளவெட்டியில் வீடு புகுந்த முகமூடி குழு வாள்களுடன் வீட்டாரை அச்சுறுத்தியபோது அடையாளம் காணப்பட்டதை அடுத்துத் தப்பியோடினர். சம்பவத்தை அடுத்து 3 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து 3 பெரிய கத்தி, வாள் என்பன மீட்கப்பட்டன.
இவ்வாறு இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை அதிகாலை 12.30 மணியளவில் நடந்தது.
அரச உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டுக்குள் முகத்தைக் கறுப்புத் துணியால் மூடிய மூவர் வீட்டுக் கேற்றை உடைத்து உள்ளே நுழைந்தனர். வீட்டின் கதவையும் உடைத்ததுடன், வீட்டிலிருந்தோருக்கு வாள்களைக் காட்டி அச்சுறுத்தியுள்ளனர். அந்தச் சந்தர்ப்பத்தில் முகத்தில் கட்டியிருந்த கறுப்புத் துணி அகன்றதால் அவர்களில் ஒருவர் இனங்காணப்பட்டார். அதையடுத்து அந்தக் குழு தப்பியோடியது என்று தெரிவிக்கப்பட்டது.
இது குறித்து தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டின் பிரகாரம் மூவர் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-4,101,ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவு தினம்



பிறப்பு 22 . 08 . 1964

இறப்பு 23 . 07 . 2015

அமரர் வயிரமுத்து மனரதன்

திதி.சப்தமி


உன்பிரிவால் நெஞ்சம் கனக்கிறது
நினைவுகள் சுடுகின்றன கண்கள் இமைமூட
மறுக்கின்றன மனம் ஏங்குகிறது உறவுகள் நிதம்
தவிக்கின்றனர்.

பிரிவினால் வாடும்.

கொல்லங்கலட்டி,
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**வைரமுத்து கிருஷ்ணபிள்ளை (வேலுப்பிள்ளை)**

திதி: ஸப்தமி

பிறப்பு 15.11.1932

இறப்பு 23.07.2015

அன்புத் தந்தையே நீங்கள் எங்களை தந்தையாகவும்
தாயாகவும் பேணி வளர்த்தீர்கள்
ஆனால் உங்கள் கலையகத்தின் தலைமகனை இழந்ததிலிருந்து
ஒரு நடைப்பிணமாய் இருந்து இவ்வுலக வாழ்வை நீத்தீர்கள்
நீங்கள் சென்ற வானுலகில் நிம்மதியாக வாழ நல்லூர் கந்தனை
வேண்டுகின்றோம்.

23, காரைக்காட்டுலேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## 2,000 ரூபாவுக்கு மனைவியை விற்ற கணவர் கைது

கொழும்பு, ஓக. 9
குருநாகல் மாவட்டத்தில் 2 ஆயிரம் ரூபாவுக்கு மனைவியை விற்பனை செய்த கணவர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர். அந்தப் பெண்ணை வாங்கிய நபரையும் பொலிஸார் விசாரணைக்கு அழைத்தனர்.

குறித்த பெண்ணின் முதல் திருமண வாழ்க்கை தோல்வியில் முடிவடைந்தது. ஒரு பிள்ளை யுடன் அந்தப் பெண் திருமண வாழ்க்கையில் தோல்வியடைந்து வேறு நபர் ஒருவருடன் வாழ்க்கையைத் தொடர்ந்தார்.

இரண்டாவது திருமணம் ஊடாக குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்த பெண்ணின் அந்தத் திருமண வாழ்க்கையும் வெற்றிகரமாக அமையவில்லை. இரண்டாவது கணவர் மீகலாவே பகுதியைச் சேர்ந்த தமது நண்பர் ஒருவருக்கு மனைவியை 2 ஆயிரம் ரூபாவுக்கு விற்றுள்ளார். பிள்ளைகளை விட்டு பெண் அந்த குறித்த நபருடன் வாழ்க்கையை தொடங்கினார்.

பின்னர் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அந்தக் கணவரையும் விட்டு தலகொலவௌ பகுதியைச் சேர்ந்த மற்றுமொரு நபருடன் புதிய வாழ்க்கையைத் தொடர குறித்த பெண் சென்றுள்ளார். அதனால் தமது உயிருக்கு ஏதேனும் அச்சுறுத்தல் ஏற்படும் என்ற அச்சத்தால் அவர் பொல்பித்திகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

இந்த முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். (ந-5)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

திருமதி
**சின்னாச்சி ஆழ்வாப்பிள்ளை**



மலர்வு 24.07.1943

உதிர்வு 10.07.2016

அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணமாய் வாழ்ந்து
எமை அவனியிலே வாழ்வாங்கு
வாழவைத்த தெய்வமே !
நித்தமும் உங்களது ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்

எமையெல்லாம் வாழ்வாங்கு வாழவைத்து கடந்த 10.07.2016 ஞாயிற்றுக்கிழமை எம்மை விட்டுப் பிரிந்த எமது குலதெய்வத்தின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (09.08.2016) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

மேலும் மறைவுச் செய்தி அறிந்து நேரடியாகக் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் பலவழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாப்பா தோட்டவீதி,
இணுவில் மேற்கு, இணுவில்.

பிள்ளைகள்.

## நெஞ்சை விட்டகலா 11 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

**தவராசா சுகந்தன்**

(முன்னாள் காசாளர் - நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை)

தோற்றம் 28.05.1978

மறைவு 13.08.2005

திதி: ஸப்தமி

சொர்க்கத்தில் நிச்சயித்த பந்தமொன்று உடைந்து
வருடங்கள் பதினொன்று கடந்தது இதுவரையில்
பாரிலுள்ளோர் முழுதாய் பாரை அனுபவிக்க - பலனில்லை
படைத்தவன் உயர் சதி இதுவன்றோ ?
புதிய பந்தமொன்று உருவாகி இணைகையிலே
பழைய பந்தமது கைவிட்டு சென்றதேனோ ?
உண்மைகளை மனம் உணர்ந்தாலும் அதை
ஏற்று அமைதிகொள்ள எம்மால் இயலவில்லை
பிறக்கையிலே இறக்கும் நாளதுவும் நெற்றியிலே
எழுதப்படுவது ஏன்தானோ தெரியவில்லை
மேலிருந்தும் எம்மை நீர் ஆசீர்வதிப்பதனை
இதுவரை எம்மனம் உணர்ந்தது நிச்சயமே
இருந்தாலும் அருகில் இருப்பதற்கு நிகர் உண்டோ ?
துன்பங்கள் பறந்திடுமே நிம்மதி நிலைத்திடுமே
இறைவனின் நியதியை உடைத்திட நாம் யார் ?
உன் ஆத்மா சாந்தியடைய வேண்டுகிறோம் - அவனிடத்தே
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !



திருநெல்வேலி.

மகன் : திகழவன்,
அண்ணன் - சுதன்
மனைவி - கார்த்திகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடிகால் சுத்திகரிக்கப்படாததால் மக்களுக்கு பெரும் அசௌகரியம்

## நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ். கொட்டடி சுகாதாரக் குழு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 9

யாழ்ப்பாணம், கொட்டடி சிவன் பண்ணை வீதியின் கிழக்கு பக்கம் பதினெட்டாம் வட்டாரத்தில் அமைந்துள்ள வடிகால் மாநகர சபை சுத்திகரிப்பு ஊழியர்களால் சரியான முறையில் சுத்தம் செய்யப்படுவதில்லை. அதற்குள் ஏராளமாக குப்பை கூளங்கள் தேங்கியுள்ளன. வடிகால்களில் வளர்ந்துள்ள செடிகள், கொடிகள் மற்றும் தேவையற்ற பொருள்களால் மழைகாலங்களில் கழிவு நீர் சீராக வடிந்தோடுவதில்லை.

இவ்வாறு யாழ். கொட்டடி சுகாதாரக் குழுவினர் விசனம் தெரிவித்தனர்.

இது குறித்த முறைப்பாடு எமக்கும் கிடைத்துள்ளது. இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவுள்ளோம் என்று யாழ். மாநகரசபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

சிவன் பண்ணை வீதி நடுப் பகுதியில் வீதிக்குக் குறுக்காக வடிகால் ஒன்று மேற்குப்பக்கமாக தாமரைக் குளத்துக்குச் செல்கிறது. சிவன் பண்ணை வீதி வடிகாலுக்குள் ஒரு வீட்டு வளவினுள்ள கழிவு நீர் விழுகிறது. வடிகாலின் அரைவாசிப் பகுதி இந்தக் கழிவு நீரால் நிரப்பப்படுகிறது. புல் பூண்டுகள் வடிகாலை அடைத்து கழிவு நீர் தாமரைக்குளத்துக்குச் செல்லவிடாமல் தடுக்கின்றன.

அந்தப் பகுதியில் வாழும் மக்கள் மற்றும் தாமரைக்குளத்துக்கு மேற்குப் பக்கமாக உள்ள மக்கள் இரவு, பகல் நுளம்புத் தொல்லைகளால் அவஸ்தைப்படுகிறார்கள். சிறுவர்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

குப்பைகள் தேங்கி உள்ளதால் கழிவு நீர் சீராக அப்பாலுள்ள கற்கட்டுக் குளத்தையும் அடைய முடியாதுஉள்ளது. கற்கட்டுக்குளத்தையும் தாமரைக்குளத்தையும் இணைக்கும் பாதை மேடாக உள்ளது. இந்தப் பாதையின் கீழ் கழிவு நீர் ஓடும் பாதை ஒன்று (போக்) அமைக்க வேண்டும்.

கழிவுநீர் ஓடும்பாதை அமைப்பது பற்றி பல தடவை உரிய அதிகாரிகளுக்குத் தெரிவித்தும் இன்னமும் அவர்கள் அந்த விடயத்தில் அசண்டையீனமாகவே உள்ளார்கள்.

குளத்தின் மேற்குப்புற கழிவு நீர் ஓடிச்செல்லும் வடிகால் அரைவாசிக்கும் மேற்பகுதி புற்களாலும், கற்களாலும், தேவையற்ற பொருள்களாலும் நிரம்பிக் காணப்படுகின்றது. புல், பூண்டுகள் அகற்றப்பட்டு பாதை சுத்தமாக்கப்பட வேண்டும்.

மழைகாலம் அண்மித்துள்ளதால் உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் அக்கறை செலுத்தி இந்தப் பகுதி மக்களின் நலனுக்காக அதனை விரைவில் திருத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்று காதாரக் குழுவினர் தெரிவித்தனர்.

இது குறித்த முறைப்பாடு எமக்கும் கிடைத்துள்ளது. இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவுள்ளோம். தற்போது வேறு குளங்கள் மற்றும் வடிகால்களின் புனரமைப்பு வேலைகள் நடைபெற்றுகின்றன. அவை முடிந்தவுடன் விரைவில் இதற்கான சீரமைப்பு வேலைகளை ஆரம்பிக்கவுள்ளோம். கழிவு நீர் ஓடும் வாய்க்கால்கள் தற்போது அமைக்கப்படுவதில்லை, வீடுகளில் இருந்து வெளியேறும் கழிவுகளை பாதைகளில் விடுவது தடை செய்யப்பட்டுள்ளது. அவர்கள் தங்களுடைய வீட்டு வளவிலேயே கழிவு நீரை விடுதல் வேண்டும். ஆதலால் கழிவு நீர் ஓடுவதற்கு பாதை அமைக்க முடியாது. வெள்ளம் வழிந்தோடுவதற்கு ஏற்றமாதிரியான பாதை வசதிகள் செய்து கொடுக்கப்படும் - என்று யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார். (ற-ரி)

# ஆயுள்வேத வைத்தியசாலையின் சேவையை அதிகரிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 9

நவாலி தெற்கில் இயங்கி வரும் இலவச ஆயுள்வேத வைத்தியசாலையானது கிழமைகளில் 2 நாள்கள் நடைபெறுகின்றது. மேலும் இரு நாள்களுக்கு சேவையை நீடிக்கும் பட்சத்தில் நோயாளர்கள் நன்மையடைவார்கள் என வலி.தென்மேற்கு மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

வடமாகாண சுதேச ஆயுள்வேத அமைச்சின் மாகாணப் பணிப்பாளரின் அனுமதியுடன் நவாலி தெற்கில் அமைந்துள்ள ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலையத்தில் வாரத்தில் திங்கள், வியாழன் உட்பட மாதத்தில் எட்டு நாள்கள் தற்போது ஆயுள்வேத மருத்துவ சேவை இடம்பெறுகின்றது.

அதில் 60 தொடக்கம் 70 வரையான நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். தற்போது இரண்டு நாள்கள் நடைபெறும் அந்த மருத்துவ சேவையை வாரத்தில் நான்கு நாள்களுக்கு நீடித்தால் வலி.தென் மேற்கில் உள்ள மக்கள் அனைவரும் இந்த மருத்துவ சேவையில் நன்மையடைவார்கள் - என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஆயுள்வேத மருத்துவர்களின் எண்ணிக்கை பற்றாக்குறையாக உள்ளது. நவாலி தெற்கில் அமைந்துள்ள ஆயுள்வேத மத்திய மருந்தகத்தில் அதிகரித்த இரு நாள்கள் சேவைக்கு கோரிக்கை விடுக்கப்படுகின்றபோதும் சேவையை அதிகரிக்க முடியாத நிலை உள்ளது. மருத்துவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்போது இந்தக் கோரிக்கை நிறைவேற்றப் படும் - என்று சுதேச ஆயுள்வேத அமைச்சின் வட்டாரங்கள் தெரிவித்தன.

(ற-ரி, 50)

# சங்கானை - பிரான்பற்று வீதியை சரியான முறையில் சீரமையுங்கள்

## அந்தப் பிரதேச மக்கள் கோரிக்கை

சங்கரத்தை - சங்கானை - பிரான்பற்று வீதியின் திருத்த வேலைகள் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படுகின்றன. அவை ஒழுங்கான முறையில் திருத்தப்படவில்லை.

இவ்வாறு அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டினர்.

ஒரு வீதியைத்திருத்திச் சீரமைக்கும் போது அந்த வீதி பொது மக்களின் பாவனைக்கு நீண்ட காலத்துக்கு உதவுவதாக இருக்க வேண்டும்.

ஆனால் இந்த வீதிகள் பள்ளம் உள்ள இடம் நிரவப்பட்டு அதன் மேல் பட்டும்படாமலும் தார் ஊற்றி மெழுகப்படுகின்றது.

பாதையைக் கிளறி, கல் அடுக்கிய பின் நீர்ப் பாய்ச்சி ரோலர் மூலம் மட்டம் செய்யப்படவில்லை. பள்ளங்கள் நிரப்பிய இடம் மேடாகவும், ஏனைய இடம் பதிவாகவும் உள்ளன. சீரான முறையில் வாகனங்கள் செல்ல முடியாத நிலை உள்ளது. கல்போட்டு தார் ஊற்றியபின் அதன் மேல் சிறுகருங்கல் துகள்கள் பரப்பப்படுகின்றன. இந்தத் துகள்கள் வாகனங்கள் செல்லும்போதுசில்லில்அகப்பட்டுத் தெறிப்பதால் சிலருக்குக் காயங்களும் ஏற்படுகின்றன. தார் ஊற்றிச் செப்பனிடப்படும் இடங்களில் வீதியின் கரையில் உள்ள கற்கள் தார் ஊற்றிய மறு நாளே ஒன்றோடொன்று தாரில் ஒட்டாமல் கழன்று வீதியோரம் காணப்படுகின்றன.

ஒரு வீதியைத் திருத்தும்போது முழுப்பாதையையும் முற்றாகக் கிளறி அதனைச் சீரான முறையில் மக்களின் பாவனைக்கு உகந்த வகையில் திருத்தம் செய்ய வேண்டும் - என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் உயரதிகாரிகள் நேரில் வந்து வீதித் திருத்தத்தைப் பார்வையிட்டுக் குறைகளைத் தீர்த்து உரிய முறை யில் பாவனைக் கேற்றவாறு பாதையைச் செப்பனிட வேண்டும் என்று அவர்கள்கோரிக்கைவிடுத்தனர்.

'வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு கிடைத்த மதிபீட்டின் அடிப்படையிலேயே இந்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சங்கரத்தை - சங்கானை - பிரான்பற்று வீதியை முழுமையாகத் திருத்துவதற்கு நிதி ஒதுக்கப்படவில்லை. அந்த வீதியில் காணப்படும் சிறு சிறு பள்ளங்களை மீள் நிரப்புவதற்கே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என வீதி அபிவிருத்தித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ற-ரி, 29)

www.clc.lk



கொமர்ஷல் லீசிங் & பினான்ஸ்

விற்பனைத்துறையில் உச்சத்தை அடைந்திட
எம்மோடு இணைந்து உங்கள் தொழில் பயணத்தை ஆரம்பியுங்கள்

கொமர்ஷல் லீசிங் & பினான்ஸ் பி.எல்.சி

இலங்கை நிதித் துறையில் முன்னணி நிதி நிறுவனமாக திகழும் கொமர்ஷல் லீசிங் & பினான்ஸ் பி.எல்.சி நிறுவனம், 28 வருடங்களுக்கும் மேலான பரந்த அனுபவங்களுக்கு உரிமை கோரும் முதன்மை நிறுவனமாகும். அதாவது, பரவலான சேவைகள், அதியுயர் மூலதன தளம் மற்றும் நாளுக்கு நாள் விஸ்தரிக்கப்படும் 60 க்கும் அதிகமான கிளை வலையமைப்பானது இந்நிறுவனத்தின் அசைக்க முடியாத வளர்ச்சியை உறுதி செய்யும் ஆதாரங்களாகும், அத்தோடு ICRA(SL) 'A' தரப்படுத்தலின் மூலம் இது மேலும் உறுதியாகின்றது.

பணியாற்றக்கூடிய சிறந்த 5 நிறுவனங்களுக்குள் GPW Sri Lanka (2013) மற்றும் SLITAD People's Development Awards இல் வெள்ளி விருதினை வென்ற நிறுவனமாகும்.

விற்பனைத் துறையில் ஆர்வமுள்ள துடிதுடிப்புமிக்க இளைஞர்களே இது எமது நிறுவனம் உங்களுக்கு வழங்கும் அழைப்பிதழ்.

விற்பனை நிறைவேற்று அதிகாரி-நுண்நிதி (Micro Finance Team Lead)

குறைந்தபட்ச தகைமை

- துறைசார் 2 வருட அனுபவம் மற்றும் / அல்லது அங்கீகாரமுடைய பல்கலைக்கழகத்தில் / கல்வி நிறுவனத்தில் பட்டம் பெற்றிருத்தல்.
- செல்லுபடியாகும் ஓட்டுனர் அனுமதிப்பத்திரம்
- 25-30 வயதுக்கிடைப்பட்டவர்கள்

விற்பனை உதவியாளர்-நுண்நிதி (Micro Finance Marketing Assistant)

குறைந்தபட்ச தகைமை

- க.பொ.த உயர்தரம் சித்தியடைந்திருத்தல்
- செல்லுபடியாகும் ஓட்டுனர் அனுமதிப்பத்திரம்

தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு கவர்ச்சிகரமான ஊதியங்கள் மற்றும் கொடுப்பனவுகள்

நேர்முகத் தேர்வுகள் நடைபெறும் திகதிகள் மற்றும் இடங்கள்

கிளிநொச்சி
9ஆம் திகதி ஆகஸ்ட் 2016
கொமர்ஷல் லீசிங் & பினான்ஸ்
கிளிநொச்சி கிளை
இல.470/2, கண்டி வீதி, கிளிநொச்சி.
தொ.பேசி: 021-4923463/4

யாழ்ப்பாணம் மற்றும்
நெல்லியடிக்கிளைக்கான தேர்வுகள்
10ஆம் திகதி ஆகஸ்ட் 2016
கொமர்ஷல் லீசிங் & பினான்ஸ்
யாழ்ப்பாணக்கிளை
இல.46, மகாத்மா காந்தி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பேசி: 021-4922446/7

மன்னார்
11ஆம் திகதி ஆகஸ்ட் 2016
கொமர்ஷல் லீசிங் & பினான்ஸ்
மன்னார் கிளை
இல.89, பிரதான வீதி, மன்னார்
தொ.பேசி: 023-4920328/9

நேர்முகத் தேர்வுகள் நடைபெறும் நேரம்: மு.ப. 9.00 மணிமுதல் பி.ப. 1.30 மணிவரை

கொமர்ஷல் லீசிங் & பினான்ஸ் பி.எல்.சி
இல. 68, பௌத்தாலோக மாவத்தை, பம்பலப்பிட்டி, கொழும்பு 04
தொ.பே: 0114 526 526 பெக்ஸ்: 0114 526 340 ஈ-மெயில்: careers@clc.lk
கொமர்ஷல் லீசிங் & பினான்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகளை விடுவிக்க வலியுறுத்தி நேற்றுக் கவனவீர்ப்பு

**யாழ்ப்பாணம், ஒக. 9**

**தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரியும் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது**







"மைத்திரி வந்தார், மகிந்த போனார், அரசியல் கைதிகளுக்கு மட்டும் விடிவில்லை" என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் முழங்கினர்.

யாழ். மையப் பேருந்து நிலையத்துக்கு முன்பாகவும், கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு முன்பாகவும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அரசியல் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 2012ஆம் ஆண்டு படுகொலைசெய்யப்பட்ட டில்ருக்‌ஷனின் 4ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று. அதனை நினைவு கூர்ந்தும் அதற்கு நீதி கோரியும், ஏனைய அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரியும் கவனவீர்ப்புப் போராட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டன.

மு.ப. 10.30 மணியளவில் யாழ். மையப் பேருந்து நிலையத்துக்கு முன்பாக நூற்றுக் கணக்கான மக்களும், அரசியல் தலைவர்களும் திரண்டனர்.

சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு கோசம் எழுப்பினர். பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்றும் வற்புறுத்தினர்.

'அரசியலில் நல்லிணக்கப் பேச்சு அரசியல் கைதிகளை விடுவிக்க மறுப்பு', 'சிறைச்சாலைப் படுகொலைகளுக்கு நீதி விசாரணைவேண்டும்', 'முன்பு பொதுமன்னிப்பு என்றீர்கள் இன்று மறுப்பதேன்', பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனே நீக்கு, 'இனப் பாரபட்சம் காட் டாதே', 'மைத்திரி - ரணில் அரசே அரசியல் கைதிகளைப் பழிவாங்காதே' போன்ற முழக்கங்கள் எழுப்பப்பட்டன. இவ்வாறான வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏந்தியிருந்தனர். சுமார் ஒரு மணி நேரம் வரையில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.கே.சிவாஜி லிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் ஆகியோரும், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், மயூரன், க.சர்வேஸ்வரன், ச.சுகிர்தன், மார்க்சிச லெனினிசக் கட்சியின் தலைவர் சி.க.செந்தில்வேல் ஆகியோர் உட்படப் பலரும் போராட்டத்தில் கலந்துகொண்டனர். (ற-5-101-106)

# தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்புத் தொடர்பில் தமிழ்க் கூட்டமைப்பு முனைப்புடன் இருக்கின்றது

## நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 9

தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழு மூச்சாகவே செயற்படுகின்றது. கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் ஜனாதிபதி, பிரதமரை அண்மையில் சந்தித்தார். அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு கடுமையான வாதத்தை முன்வைத்தார். இதன்போது நானும் உடன் இருந்தேன். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ். நகரில் நேற்று முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போது அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேசாமலோ அல்லது நடவடிக்கை எடுக்காமலோ இருக்கின்றது என்று கூறினால் அது தவறு. நாம் இன்றுவரை முழு மூச்சாகவே செயல்படுகிறோம். கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஜனாதிபதி மற்றும் பிரதமரைச் சந்திக்கும் போது நானும் உடன் இருந்தேன். சிறையில் வாடும் கைதிகளை இனியும் காலம் தாழ்த்தாது உடன் விடுவிக்க வேண்டும் என்று மிகவும் கடுமையாக வாதாடினார்.

சம்பந்தன் கடும் பிடியாக நின்ற வேளையில் பிரதமர் ரணில் உடனடியாக சட்டமா அதிபரையும் அழைப்போம் என்று தெரிவித்தார். இது சட்டமா அதிபரை வைத்து முடிவு செய்யும் விடயம் அல்ல. சட்டமா அதிபர் இங்கு வந்தால் சட்டத்தை மட்டுமே கூற முடியும். கைதிகள் அனுபவித்த தண்டனை போதும். இதற்கு உடனடியாக அரசியல் ரீதியில் முடிவை மேற்கொண்டு கைதிகளை விடுவியுங்கள். அரசியல் ரீதியில் கைதிகளை விடுவிப்பது என்பது இதுதான் முதல் தடவை அல்ல என்பதனால் அதில் பிரச்சினைகள் எதுவும் இருக்காது எனவும் சுட்டிக்காட்டினார் - என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்ததாவது:

சிறையில் வாடும் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் அரசு தொடர்ந்தும் பல்வேறு சாக்குப் போக்கையே கூறுகின்றது. பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படும் என்றனர். அதுவும் நடைபெறுவதாக இல்லை. பயங்கரவாத தடைச் சட்டத்தில் திருத்தம் மட்டுமே கொண்டு வரப்படும் என்கின்றனர். மாற்றங்களைக் கொண்டு வந்தாலும் அரசியல் கைதிகளை விடுவிப்பார்களா என்பது சந்தேகமாகவே உள்ளது. அரசைப் பொறுத்த மட்டில் கைதிகளை விடுவிப்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் கிடையாது.

இந்தக் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதே தமிழ் மக்களின் ஏகோபித்த முடிவாக உள்ளது. தமிழர் தரப்பு அரசியல்வாதிகளில் நாடாளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்கள் கட்சித் தலைவர்கள் என்று அனைவரும் ஒன்றிணைந்து போராடவேண்டும் - என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்ததாவது:

2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஐ.நா.வில் இடம்பெற்ற இலங்கை தொடர்பான பிரேரணைக்கு இலங்கையும் அனுசரணை அளித்தது. அதில் இலங்கையில் நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவோம் என்று உறுதியளித்தது. அவ்வாறு ஏற்றுக்கொண்டும் காலம் கடந்த சட்டத்தை வைத்துக் கொண்டு தொடர்ந்தும் அரசியல் கைதிகள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் - என்றார். (ற-5-101-106)

## தென்மராட்சி அபிவிருத்திக் கழகங்கள் இணைந்து நடத்திய தென்மராட்சி விழா



தென்மராட்சி, ஒக.9

தாயகம் மற்றும் புலம்பெயர் நாடுகளில் உள்ள தென்மராட்சி அபிவிருத்திக் கழகங்கள் ஒன்றிணைந்து நடத்திய தென்மராட்சி விழா நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் நடைபெற்றது.

கழகத் தலைவர் பேராசிரியர் க.கந்தசாமி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜாவும், மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கமும் கலந்துகொண்டனர். சிறப்பு விருந்தினர்களாக கழக பிரித்தானியா கிளைத் தலைவர் வைத்திய கலாநிதி ஆ.புவிநாதனும், கௌரவ விருந்தினர்களாக தமிழ்நாடு முன்னாள் சட்டமன்றஉறுப்பினர் செல்வப்பெருந்தகை, பிரிட்டிஷ் கவுன்சில் யாழ். கிளை முகாமையாளர் றொபேக்கா ஜோன்சனும் கலந்துகொண்டனர்.

உசன் இராமநாதன் மகா வித்தியாலய மாணவனின் நடனமும், கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி மாணவிகளின் கோலாட்டமும், மிருசுவில் அ.த.க.பாடசாலை மாணவிகளின் கிராமிய நடனமும், கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலய மாணவிகளின் மயில்நடனமும் இடம்பெற்றன.

விழாவை முன்னிட்டு பிரதேச விளையாட்டுக் கழகங்கள், பாடசாலைகளின் அணிகள் ஆகியவற்றுக்கிடையில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும், அண்மையில் நடைபெற்ற மாகாண மட்ட தடகளப் போட்டிகளில் வெற்றியீட்டி தேசிய நிலைப் போட்டிகளில் பங்குபற்றவுள்ள மாணவர்களுக்கும் ஊக்குவிப்புப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய இளைஞர் சேவைகள் மன்ற சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு நேற்று நடைபெற்றது. காலை 8.30 மணிக்கு தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் சம்மேளனத் தலைவர் சி. விமலதாஸ் தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது. முதன்மை விருந்தினராக அனுசரணையாளர் நுணாவில் சுரேஸ் மோட்டர்ஸ் எஞ்சினியேர்ஸ் நிறுவன உரிமையாளர் சுரேஸ் கலந்து கொண்டார். யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரி சண்முகவடிவேல், தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிப் பணிப்பாளர் அ.மனோரஞ்சிதன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர். (ற-9)

# நட்டஈடுகள் வழங்குவதால் நல்லிணக்கம் ஏற்படாது

## மக்கள் கருத்தறியும் செயலணியிடம் மகளிர் அமைப்புகள் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஓக.9
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ்கள் எதிர்காலத்தில் இறப்புச் சான்றிதழாக மாறுமா என்ற நியாயமான அச்சம் ஏற்படுகின்றது.

இவ்வாறு தேசிய நல்லிணக்கப் பொறிமுறைக்கான கருத்தறியும் செயலணியில் கலந்து கொண்ட மகளிர் அமைப்பைச் சார்ந்தோர் தெரிவித்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

நாட்டில் நல்லிணக்கம் ஏற்படவேண்டுமாயின் முதலில் அரசியலில் பெண்களுக்கான பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும். பெண்களால் முடியாது எனக் கூறமுற்படுகின்றனர். எமது பெண்கள் படையணியாகவும், சாரதிகளாகவும், கனரக ஆயுத இயக்குநர்களாகவும், தளபதிகளாகவும் இருந்தவர்கள்.

> நாட்டில் நல்லிணக்கம் ஏற்படவேண்டுமாயின் முதலில் அரசியலில் பெண்களுக்கான பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும். பெண்களால் முடியாது எனக் கூறமுற்படுகின்றனர்.

இங்கு உள்ள முக்கிய கட்சிகள் பெண்களுக்குரிய முக்கியத்துவத்தை வழங்குவதில்லை. எதிர்காலத்தில் பெண்கள் தனித்து செயற்படுவது தொடர்பில் தற்போது ஆலோசிக்கின்றோம். அரசின் நல்லிணக்கம் ஏற்பட வேண்டும். அதன் முன்பு எமது பிரதேசத்தில் உள்ள அரசியல்வாதிகளிடம் நல்லிணக்கம் ஏற்பட வேண்டும்.

வெறும் விசாரணைகள் மட்டும் இடம்பெறுவதே ஒரு பெரும் சலிப்பை ஏற்படுத்துகின்றது. பொட்டு வைப்பதா , தாலியை அணியலாமா என்ற மனக் குழப்பத்தில் வாழ்பவருக்கு நட்ட ஈடுகள் வழங்குவதால் நல்லிணக்கம் ஏற்படாது. கையில் ஒப்படைத்தவர்களை காணாமல் போனவர்கள் என எவ்வாறு கூறமுடியும்?. - என்றனர். (ற-101)

# வவுனியா-குருமன்காட்டில் 7 பவுண் நகைகள் திருட்டு

வவுனியா, ஓக. 9
வவுனியா குருமன்காட்டில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு மூன்று லட்சம் ரூபா பெறுமதியான 7 பவுண் நகைகள் திருட்டப்பட்டன என்று முறைப்பாடு செய்யப்பட்டது.

இவ்வாறு வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

குருமன்காடு 4ஆம் ஒழுங்கையில் ஒரே காணியில் உள்ள இரு வீட்டில் மகனும் அவருடைய பெற்றோரும் வசிக்கின்றனர். நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் தாய், மகனின் வீட்டுக்குத் தொலைக்காட்சி பார்ப்பதற்குச் சென்றுள்ளார். வீட்டின் முன்கதவினை மூடிவிட்டு மகன் வீட்டுக்குச் செல்லும் பின் கதவைத் திறந்து விட்டுச் சென்றுள்ளார்.

தாய், மகனின் வீட்டுக்கு தொலைக்காட்சி பார்ப்பதற்குச் சென்ற வேளை அவரது வீட்டில் மின்குமிழ்களை அணைத்து விட்டுச் சென்றுள்ளார்.

தாயின் அலைபேசிக்கு உறவினர்களின் அழைப்பு வந்தது. அதனால் அவர் வீட்டுக்கு வெளியே சென்று உரையாடியுள்ளார். இரவு 7.40 மணியளவில், அவரது வீட்டின் மின்குமிழ்கள் எல்லாம் ஒளிர்ந்து கொண்டிருப்பதை அவதானித்தார்.

வீட்டுக்குள் சென்று பார்த்த போது வீட்டுக் கதவு திறக்கப்பட்டிருந்தது. அத்துடன் அறைக்கதவுகள், அலுமாரிக் கதவுகள் என்பனவும் திறக்கப்பட்டிருந்தன. அலுமாரியில் இருந்த தாலிக்கொடி, காப்பு என்பன களவாடப்பட்டிருந்தன.

வவுனியாப் பொலிஸாருக்கு உடனடியாக தகவல் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் வீட்டுக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். (ற-5-ரி7)

## தீ விபத்தால் கடை நாசம்

வவுனியா, ஓக. 9
வவுனியா பஸ் நிலைய கட்டடத் தொகுதியில் இயங்கிவரும் அலைபேசி விற்பனை நிலையத்தில் மின் ஒழுக்கால் தீ விபத்து ஏற்பட்டது.



இவ்வாறு வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

தீவிபத்தால் விற்பனை நிலையத்திலிருந்த அலைபேசிகள், திருத்தத்துக்காக கையளிக்கப்பட அலைபேசிகள் என்பன எரிந்து சாம்பராகின.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வியாபார நிலையத்தை இரவு 8 மணிக்கு மூடிவிட்டு உரிமையாளர் சென்றுள்ளார். நேற்றுக் காலை விற்பனை நிலையத்தைத் திறக்கச் சென்ற போது தீயில் எரிந்த மணம் வருவதையும், வயர்கள் தீப்பிடித்துள்ளதையும் அவதானித்துள்ளார். விற்பனை நிலையம் திறக்கப்பட்டு தீ அணைக்கப்பட்டது.

விபத்தால் பெருமளவு பொருள்கள் எரிந்துள்ளன. பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ற-5-ரி7)

# நெல்வயல்கள் பதிவு நாளை

தென்மராட்சி, ஓக.9
தென்மராட்சி தெற்கு மறவன்புலவு கமக்கார அமைப்புக்குட்பட்ட 2016/ 2017 காலபோக நெற்செய்கையில் ஈடுபடும் நெல்வயல்கள் தொடர்பான பதிவுகள் நாளை தொடக்கம் தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறும் நெல்வயல்கள் உள்ளவர்கள் தமது வயல் உறுதிகளுடன் வந்து பதிவை மேற்கொள்ளுமாறும், பின்னர் பதிவுகள் மேற்கொள்ளப்பட மாட்டாது எனவும் அமைப்பின் தலைவர் தெரிவித்தார்.

நாளை புகையிரத வீதி, பொன்னம்பலம் வீதி, கொல்லங்கிராய் மயான வீதி, யாழ்.- மன்னார் வீதி அடங்கிய பகுதிகளும், நாளைமறுதினம் புகையிரத வீதி, சின்னத்தூவில் குள வாய்க்கால், பொன்னம்பலம் வீதி யாழ்ப்பாணம் - மன்னார் வீதி அடங்கிய பகுதிகளும், 12ஆம் திகதி நுணாவில் கிழக்கு எல்லை வீதி, கீரை வாய்க்கால், சின்னத்தூவில் குளவாய்க்கால், யாழ்ப்பாணம் - மன்னார் வீதி ஆகிய பகுதிகளும் பதிவு செய்யப் படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

# இந்த ஆண்டு நிறைவுக்குள் தீர்வு என்ற வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்

## வடக்கு - கிழக்கு முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 9
இந்த ஆண்டு நிறைவடைவதற்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்ற தேர்தல் கால வாக்குறுதி நிறைவேற்றப்படவேண்டும்.

இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள் தெரிவித்தார்.

பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தற்போது தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி என்று பெயர்மாற்றம் செய்யப்பட்டது. அதன் முதலாவது மத்திய குழுக் கூட்டம் திருகோணமலையில் உள்ள அதன் கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை நடைபெற்றது. கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே வரதராஜப்பெருமாள் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

2016 ஆம் ஆண்டு முடிவடைவதற்குள் இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படுத்தப்படும் என்று நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாலும், தற்போதைய அரசாலும் வாக்குறுதி வழங்கப்பட்டது. அது நிறைவேற்றப்பட வேண்டும்.

தற்போதைய அரசு இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தப் போகின்றோம் என்று தெரிவித்திருந்தனர். அதற்கான வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அதை மறுப்பதற்கு இல்லை. ஆனாலும் நல்லிணக்கம் விரைவாக - முழுமையாக ஏற்படுத்தப்பட வேண்டும். அரசு முழுமைச் சாக இந்த விடயத்தில் செயற்பட வேண்டியிருக்கின்றது.

நல்லாட்சி அரசு என்று தெரிவித்தே இந்த அரசு ஆட்சிக்கு வந்தது. ஆனாலும் மக்கள் நிம்மதியாக வாழக் கூடிய நிலமை நாட்டில் இல்லை. மக்களை பொருள்களின் விலை உயர்வு வதைக்கின்றது. மக்களுக்கு பொருள்களின் விலைகளைக் குறைத்து நிம்மதியாக வாழ வழியேற்படுத்த வேண்டும்.

தமிழர் சமூக ஜனநாயகக் கட்சிக்கு வடக்கு - கிழக்கில் பிரதேச, கிராம மட்டத்தில் கிளைகள் அமைக்கப்பட்டு மக்களுடைய கட்சியாக விரிவடையச் செய்ய நடவடிக்கை எடுக்கப் படும் - என்றார். (ற-5)

## காலாவதியான பொருள்கள் விற்ற கடையை மூடுமாறு உத்தரவு

யாழ்ப்பாணம், ஓக.9
திகதி காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தகர் ஒருவர் சுகாதாரப் பரிசோதகர்களிடம் நான்காவது தடவையாக மாட்டிக் கொண்டார். அவருக்கு ரூபா 30 ஆயிரம் அபராதம் விதித்த நீதிவான் வர்த்தக நிலையத்தை நிரந்தரமாக மூடுமாறும் உத்தரவிட்டார்.

வவுனியா மாவட்ட சுகாதாரப் பரிசோதகர் நெடுங்கேணி பஸ் நிலையத்துக்கு முன்பாகவுள்ள வர்த்தக நிலையத்தைச் சோதனை செய்தபோது அங்கு காலாவதியான பொருள்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

பொருள்களைக் கைப்பற்றிய சுகாதாரப் பரிசோதகர்கள் வர்த்தகர்களுக்கு எதிராக வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு நீதிவான் எல். லெனின்குமார் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதிவான் மேற்கண்டவாறு தீர்ப்பளித்தார். (ற-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் விமானம் விற்பனை செய்யவே பாக். தளபதி இலங்கைக்குப் பயணம்

## இந்திய ஊடகம் கூறுகின்றது

கொழும்பு, ஓக. 9
பாகிஸ்தான் போர் விமானங்களை இலங்கைக்கு விற்பனை செய்யும் நோக்குடனே பாகிஸ்தான் விமானப் படைத் தளபதியின் இலங்கைப் பயணம் அமைந்துள்ளது என்று இந்திய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.



பாகிஸ்தான் விமானப் படைத் தளபதி எயார் சீவ் மார்ஷல் சொகைல் அமான் நேற்றுமுன்தினம் கட்டுநாயக்கா விமான நிலை யத்தை வந்தடைந்தார். இவரை இலங்கை விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் கஹறன் புலத்சிங்கள வரவேற்றார்.
பாகிஸ்தான் விமானப்படைத் தளபதி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பாதுகாப்புச் செயலர், முப்படைகளின் தளபதிகள் உள்ளிட்டோரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்துவார்.
இந்தநிலையில் இலங்கை விமானப்படைக்கு ஜே.எவ்-17 போர் விமானங்களை விற்பனை செய்வதற்கான முயற்சிகளை பாகிஸ்தான் முன்னெடுக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஏற்கனவே ஜே.எவ்-17 போர் விமா ணங்களை பாகிஸ்தானிடம் வாங்கும் இலங்கையின் திட்டத்தை இந்தியா தலையிட்டு இடைநிறுத்தியிருந்தது.
பாகிஸ்தான் விமானப்படைத் தளபதியின் இலங்கைப் பயணம் தொடர்பாக கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், இந்தப்பயணம் தற்போதைய ஒத்துழைப்பு மற்றும் கூட்டு தொடர்பாக மீளாய்வு செய்வதற்கும், இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை உயர்த்துவதற்கும் வாய்ப்பாக அமையும் என்று கூறப்பட்டிருந்தது.
இங்கு ஒத்துழைப்பை 'உயர்த்துவது' என்பது பாகிஸ்தானிடம் இருந்து ஜே.எவ்-17 போர் விமானங்களை இலங்கை கொள்வனவு செய்வதையே அர்த்தப்படுத்துவதாக இருக்கக்கூடும் என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது.
பாகிஸ்தானின் 400 மில்லியன் டொலர் நிதியில் சீன-பாகிஸ்தான் கூட்டுத் தயாரிப்பான ஜே.எவ்-17 போர் விமானங்களை இலங்கைக்கு விற்பதற்கு 2015 ஆம் ஆண்டு இறுதியிலும், 2016 ஆம் ஆண்டு தொடக்கத்திலும் தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.
மூலோபாய அடிப்படையில் தனது செல்வாக்குக்கு உட்பட்ட பகுதி என்பதால், இந்தியா குறுக்கே நின்றதால், இந்த முயற்சி தோல்வியடைந்தது.
காஷ்மீரில் ஒரு மாதமாக நீடித்து வரும் வன்முறைகளுக்கு பாகிஸ்தானே காரணம் என்று கருதுகின்றது இந்தியா. ஜே.எவ்-17 போர் விமானங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பாக இலங்கை - பாகிஸ்தான் இடையே உடன்பாடு புதுப்பிக்கப்பட்டால் இந்தியாவுக்கு கவலையை ஏற்படுத்தும் என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

## கிரிந்த துறைமுக அபிவிருத்தி சாத்திய ஆய்வு சீன நிறுவனத்திடம்

கொழும்பு, ஓக. 9
அம்பாந்தோட்டையில் உள்ள கிரிந்த துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது குறித்த சாத்திய ஆய்வு மற்றும் விரிவான வடிவமைப்பை மேற்கொள்வது தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் வாய்ப்பு சீன நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.
கிரிந்தவில் உள்ள மீன்பிடித் துறைமுகத்தை விரிவாக்குவது தொடர்பான சாத்திய ஆய்வை மேற்கொள்வதற்கு பல்வேறு நிறுவனங்களிடையே போட்டி காணப்பட்ட போதும், சீன நிறுவனமான, ஹே சுன் கோர்ப் நிறுவனம் அந்த வாய்ப்பைக் கைப்பற்றியுள்ளது.
கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சு இதற்கான வாய்ப்பை சீன நிறுவனத்துக்கு அளித்துள்ளது.
யால தேசிய பூங்காவின் வெளி எல்லையில் அமைந்துள்ள கிரிந்த துறைமுகம் அருகே கடற்படைத் தளம் ஒன்றும் அமைந்துள்ளது. (ற-5)

## மன்னாரில் எரிவாயு அகழ்வுக்கு கேள்விப் பத்திரம் கோரப்படும்

### பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 9
இலங்கை கடற்பரப்பில் இயற்கை எரிவாயு அகழ்வுக்கான சாத்தியங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு அடுத்த வாரம் அமைச்சரவையின் அனுமதி கோரப்படும் என்று பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு தெரிவித்தது.



மன்னார் கடற்பரப்பில், இரண்டு துண்டங்களில் எரிவாயு ஆய்வுக்காக பன்னாட்டு அளவில் கேள்விப் பத்திரங்கள் கோரப்படவுள்ளன. இது தொடர்பாக ஆறு பன்னாட்டு நிறுவனங்களுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது என்று பெற்றோலிய வளங்கள் அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.
மலேசியாவின் பெற்றோனஸ், நெதர்லாந்தின் றோயல்டச்ஷெல், இந்தியாவின் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கூட்டுத்தாபனம், பிரான்சின் டோட்டல், அமெரிக்க பல்தேசிய நிறுவனமான எக்சோன் மொபில் கோர்ப், அமெரிக்காவின் ஹலிபோர்ட்டன் ஆகிய நிறு வனங்களுடனேயே பேச்சு நடத்தப்பட்டுள்ளன.
வாய்ப்புகள் தொடர்பாக ஆராய்வதற்காக இந்திய நிறுவனத்தின் பிரதிநிதிகள் குழு அடுத்தவாரம் இலங்கைகு வரவுள்ளது என்றும் - அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.
எரிவாயு அகழ்வைத் துரிதமாக மேற்கொள்வதற்காக ஏற்கனவே உள்ள ஆய்வுத் தரவுகள் நிறுவனங்களிடம் கையளிக்கப்படவுள்ளது.
மன்னார் கடற்படுகையில் ஹைட்ரோகார்பன் படிமங்கள் தொடர்பான தரவுகளை ஏற்கனவே கெய்ன் இந்தியா நிறுவனம் 235 மில்லியன் டொலர் செலவில் திரட்டியுள்ளது. ஆர்வமுள்ள நிறுவனங்களுக்கு இந்த தரவுகளையும் கையளிக்கத் தயார் என்று அரசு தெரிவித்துள்ளது.
மன்னார் கடற்படுகையின் ஒரு பகுதியில் 12 பில்லியன் டொலர் பெறுமதியான இயற்கை எரிவாயு படிமங்கள் இருக்கின்றன என்று கெய்ன் இந்தியா நிறுவனத்தின் ஆய்வுகளில் கண்டறியப்பட்டது.
சி-1, சி-2 என்று பெயரிடப்பட்ட காவிரிப்படுகையிலுள்ள இரண்டு துண்டங்களை சிங்கப்பூரைத் தளமாகக் கொண்ட நிறுவனம் ஒன்றுக்கு எரிவாயு ஆய்வுக்காக வழங்கப்படவுள்ளது. இந்த நிறுவனம் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு அனுமதி அளிக்கும் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.
அதேவேளை, கிழக்கு கடற்பரப்பில் உள்ள ஜே.எஸ்-5 மற்றும் ஜே.எஸ்-6 ஆகிய இரண்டு துண்டங்களிலும், பிரெஞ்சு பல்தேசிய நிறுவனமான டோட்டலுடன், இணைந்து கூட்டு ஆய்வை மேற்கொள்வதற்கு அரசு ஏற்கனவே உடன்பாடு செய்துள்ளது. இங்கு ஆய்வுப் பணிகள் வரும் வாரங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ற-5)

## எதிர்வரும் வியாழக்கிழமை இலங்கையருக்கு சிக்கலாம்

### விமல் வீரவன்ச கூறுகின்றார்

கொழும்பு, ஓக. 9
இலங்கை மக்களுக்குச் சிக்கலான நாளாக நாளை மறுதினம் வியாழக்கிழமை இருக்கும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.
நீர்கொழும்பு பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
தற்போதைய அரசு பன்னாட்டுச் சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக செயற்படுகின்றது. அரசு பன்னாட்டுச் சமூகத்தின் தேவைக்கு அமைவாகச் செயற்படுவதாலேயே பொருளாதாரத்தில் சரிவை எட்டியுள்ளது.
பொதுமக்கள் மீது பெரும் சுமையை திணிப்பதற்காக நாடாளுமன்றில் எதிர்வரும் 11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ள வரி திருத்த சட்ட வரைவுக்கு சார்பாக கையை உயர்த்துபவர்கள் யார் என்று முழு நாடும் அறிந்து கொள்ளும்.
கையை உயர்த்தி வரி திருத்தத்துக்கு ஆதரவு தெரிவிப்பவர்கள் எதிர்வரும் தேர்தல்களில் மக்களால் புறக்கணிக்கப்படுவார்கள் - என்றார். (ற-5)

## ஹிருணிகாவுக்கு எதிராக குற்றச்சாட்டு பத்திரம் தாக்கல்

கொழும்பு, ஓக. 9
நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா உள்ளிட்ட 9 பேருக்கு எதிராகக் கொழும்பு உயர் நீதிமன்றில் சட்டமா அதிபர் திணைக்களத்தால் குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி தெமட்டகொட பகுதியில் இளைஞர் ஒருவரைக் கடத்திச் சென்றமை தொடர்பாகவே இந்தக் குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் 9 சந்தேகநபர்களுக்கு எதிராகவும் 29 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. (ற-5)

## கூட்டாட்சி அடிப்படை அரசியல் தீர்வை தமிழ்த் தலைவர்கள் வலியுறுத்தவில்லை

### அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல கூறுகின்றார்

கொழும்பு, ஓக. 9
வடக்கைச் சேர்ந்த தமிழ் அரசியல் தலைவர்கள் கூட்டாட்சி அடிப்படையிலான அரசியல் தீர்வையோ அல்லது பிராந்திய அடிப்படையிலான அதிகாரப் பரவலாக்கலையோ வலியுறுத்தவில்லை.
இவ்வாறு அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.
கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
பிரதமர் தலைமையிலான அரசியல் நிர்ணய சபையில் நான் செயலாளராக இருக்கின்றேன். மகிந்த ஆதரவு அணியினர் கூறுவதுபோல், அரசமைப்புத் தொடர்பில் இன்னமும் எந்தவொரு இறுதி முடிவுகளும் எடுக்கப்படவில்லை.
பௌத்த சாசனத்துக்கோ சிங்கள மக்களுக்கோ எதிராக எந்தக் கலந்துரையாடல்களும் இடம்பெறவில்லை. எமது அரசு ஒருபோதும் அரசமைப்பில் பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமையை நீக்காது.
அரசமைப்புத் தொடர்பில் மக்கள் கருத்தறியும் குழுக்களில் கலந்து கொண்டு, தமது யோசனைகளை முன்வைத்த வடக்கிலிருந்து வந்த அரசியல் தலைவர்கள் ஒருபோதும் கூட்டாட்சித் தீர்வையோ பிராந்திய அலகுகளையோ வலியுறுத்தவில்லை. அவர்கள் மாகாண சபைக் கட்டமைப்பையே வலியுறுத்தினர்.



கடந்த காலங்களில் தனித் தமிழீழம் மற்றும் தமிழ் மக்களுக்கான சுயாட்சி அதிகாரம் குறித்துக் கதைத்த வடக்கைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றம் வரவேற்கத்தக்கது - என்றார். (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் மக்களின் மீள்குடியமர்வு தவறாகச் சித்திரிக்கப்படுகின்றது

## அமைச்சர் ரிசாத் பதியூதீன் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 9

போருக்குப் பின்னரான முஸ்லிம் மக்களின் மீள்குடிமர்வைச் சில இனவாத ஊடகங்கள், நாட்டின் வனப் பிரதேசங்கள் அழிக்கப்படுகின்றன என்று தவறாகச் செய்தி வெளியிட்டு வருகின்றன.

இவ்வாறு கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் ரிசாத் பதியூதீன் குற்றம் சுமத்தினார்.

கலாபூசணம் எம்.இஸட் அஹ்மத்எழுதியஇலங்கை வானொலி முஸ்லிம் சேவை நூல் வெளியீட்டு நிகழ்வு, கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது. அதற்குத் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

> மதரசாக்கள் ஒழுக்கம் மற்றும் கல்வி என்பவற்றை போதிப்பதற்காகவே நிறுவப்படுகின்றன. அவற்றில் ஆயுதப் பயிற்சிகள் இடம்பெறு கின்றன என்று பொய் யான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படு கின்றன.

அவர் தெரிவித்ததாவது:

ஏனைய சமூகங்களுடன் இணைந்த வாழ வேண்டிய தேவை இருக்கின்றது. எனினும் செய்யாத குற்றங்களை முஸ்லிம் சமூகத்தின் மீது சுமத்தும் செயற்பாடுகள் தொடர்கின்றன.

மதரசாக்கள் ஒழுக்கம் மற்றும் கல்வி என்பவற்றை போதிப்பதற்காகவே நிறுவப்படுகின்றன. அவற்றில் ஆயுதப் பயிற்சிகள் இடம்பெறுகின்றன என்று பொய்யான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படு கின்றன. பள்ளிவாசல்கள் நிர்மாணிக்கப்படுவதைப் பிழையாகக் காட்ட சில ஊடகங்கள் முயற்சிக்கின்றன. இதனைத் தெளிவுபடுத்துவதற்கான ஊடகங்களோ அல்லது வழிமுறைகளோ இஸ்லாமியர்களிடம் இல்லை.

இணைந்து வாழவேண்டும் என்று எடுக்கப்படுகின்ற முயற்சிகளைப் பிழையாக விமர்சித்து நாட்டில் கலவரத்தைத் தூண்டும் செயற்பாடுகள் நல்லாட்சியிலும் தொடர்ந்து கொண்டிருப்பது வேதனையளிக்கின்றது - என்றார். (ந-5)

## ஆஸி. புகலிடத்துக்காக சிறுநீரகங்கள் விற்பனை

கொழும்பு, ஓக. 9

ஆஸ்திரேலியாவில் புகலிடம் கோரும் நோக்கில் இலங்கையர்கள் சிறுநீரகங்களைவிற்பனைசெய்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்குள் பிரவேசிப்பதற்காகவே இவ்வாறு சிறுநீரகங்கள் விற்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மூன்றாண்டு காலப் பகுதியில் 500 இலங்கையர்கள் ஆஸ்திரேலியா செல்வதற்காக சிறுநீரகங்களை விற்பனை செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆஸ்திரேலியாவில் புகலிடம் பெற்றுக் கொள்ள முயற்சிப்போர் பெரும் எண்ணிக்கையில் ஏமாற்றப்படுகின்றனர் என்று புகலிடக் கோரிக்கையாளர் நல ஆர்வலர் சந்திர ஹாசன் தெரிவித்தார்.

கொழும்பு வைத்தியசாலைகளில் வைத்து புகலிடக் கோரிக்கையாளர்களின் சிறுநீரகங்கள் அகற்றப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார். (ந-5)

## தனி இனமாக முஸ்லிம்களை தமிழர் அங்கீகரிக்க வேண்டும்

### *அமைச்சர் மனோ கணேசன் கருத்து*

கொழும்பு, ஓக. 9

இலங்கையில் தனியான இனமாகத் தங்களை அடையாளப்படுத்தும் முஸ்லிம் மக்களை அங்கீகரிக்க வேண்டிய கடப்பாடு தமிழர்களுக்குக் காணப்படுகின்றது.

இவ்வாறு தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

கலாபூசணம் எம்.இஸட் அஹ்மத்எழுதியஇலங்கைவானொலி முஸ்லிம் சேவை நூல் வெளியீட்டு நிகழ்வு கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது-

இலங்கை கடந்த காலங்களில் ஒரே மொழிக்கு, ஒரே மதத்துக்கு சொந்தமானது என்றதொரு தோற்றப்பாடு காட்டப்பட்டது. ஆனால் இன்று அவ்வாறல்ல. அந்தத் தோற்றப்பாடு ஜனநாயக ரீதியாக அழித்தொழிக்கப்பட்டுள்ளது.

ஒரே நாட்டில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்ற மூன்று மொழிகள் இருக்கின்றன. அது மட்டுமன்றி மூன்று பிரதான இனங்கள் இருக்கின்றன. ஆனால் இலங்கையில் 21 இனங்கள் வசிக்கின்றன என்று பதிவுசெய்யப்பட்டுள்ளது. நான்கு பிரதான மதங்கள் காணப்படுகின்றன. நாட்டின் எதிர்காலம் என்பது பன்மைத்தன்மை சார்ந்ததாகதான் இருக்க முடியும் என்ற கால கட்டம் இன்று வந்துவிட்டது. இன, மத, மொழி பாராது அனைவருக்கும் சமமான அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்.

முஸ்லிம் மக்கள் தம்மை ஒரு தனியான இனமாக அடையாளப் படுத்தியுள்ளனர். இதனை அங்கீகரிக்க வேண்டிய கடப்பாடு தமிழர்களுக்குக் காணப்படுகின்றது. அவ்வாறு அரவணைப்பதன் மூலமாகத் தான் உண்மையான ஐக்கியம் ஏற்படும் - என்றார். (ந-5)

# வேலை வாய்ப்புக்காக கொரியா சென்ற 6,000 பேர் தப்பியோட்டம்

## *அமைச்சர் தலதா அத்துக்கோரள தகவல்*

கொழும்பு, ஓக. 9

கொரியாவில் மீன்பிடித் தொழிலுக்காக சென்ற 6 ஆயிரம் இலங்கையர்கள் தொழில் செய்யும் இடங்களைவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர்.

இவ்வாறு வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் தலதா அத்துக்கோரள தெரிவித்தார்.

அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

கொரியாவுக்கு மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்காகச் சென்ற 6 ஆயிரம் இலங்கையர்கள் தாம் தொழில்செய்யும் இடங்களிலிருந்து தப்பிச் சென்று வேறு தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். இரு நாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் இது பாதக விளைவுகளை ஏற்படுத்தக் கூடும். கொரியாவுக்கு வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்லும் எவரும் வேறு தொழில்களில் ஈடுபட அனுமதிக்கப்பட மாட்டார்கள். தொழில் செய்யும் இடங்களிலிருந்து தப்பிச் சென்றவர்கள் குறித்துவிசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப் படும். இந்த நிலைமை[illegible] படுத்த புதிய திட்டமொன்[illegible] முறைப்படுத்தப்பட உள்ளது.

கடந்தஆண்டுஇஸ்ரேலுக்குதொழில் வாய்ப்புப் பெற்றுச் சென்றவர்களில் 13 பேர் பல்வேறு காரணங்களைக் காண்பித்து அரசியல் புகலிடம் கோரியுள்ளனர். அதனால் இலங்கையர்களுக்கு தொழில் வாய்ப்புக் கான நுழைவிசைவு வழங்குவது இடைநிறுத்தப்பட்டது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுச் சென்று அங்கு வேறு காரணங்களைக் காட்டி புகலிடம் கோருவோருக்கு புகலிடம் வழங்க வேண்டாம் என்று நாடுகளிடம் நாம் கோரி[illegible] யில் இவ்வாறு கோரிக்கை விடுவது பொருத்தமற்றது - என்றார். (ந-5)



முதலாம் நாள் உள்வீதியுலா

# இரண்டாம் திருவிழா

## குமரன் எழிலைக் காண கோடி கண்கள் வேண்டுமய்யா!

அலை கடல் என பக்தர்கள் வெள்ளம் திரண்டோடும் நல்லை வீதியிலே
வள்ளி, தெய்வானை சகிதம் வீதி வலம் வருவோனே
சித்தர்கள் வாழ்ந்து தடம் பதித்த நல்லை வீதியிலே
தன்னைநாடி, ஓடிவரும் பக்தர்களின் குறை தீர்ப்பவனே
வானவர்கள் துயர் களைய கானமயில் மீதேறி
சேனையோடு அசுரக்குடி சிதைத்தவனே
தொல்லைகள் நீக்கித் துயர் தீர்ப்பாய் வேலவனே
முல்லைச் சிரிப்பாலே அன்பர் துயர் தீர்ப்பவனே
நல்லைக்குமரன் எழிலைக் காண கோடி கண்கள் வேண்டுமய்யா
நல்லைநகர் நாதா நமக்கொரு தீர்வை வெகுவிரைவில் தா.

கலாவித்தகர் திருமதி. மலர்விழி கனகசபை, சண்டிலிப்பாய்.

## ஆறுதலைத் தா முருகா

நல்லூர் முருகனே நான் வணங்கும் தெய்வமே
எல்லா நலந்தனையும் ஈந்திடுவாய் – நல்லூரா
ஏறிய கொடி கண்டு இன்பமுறும் எந்தனுக்கு
ஆறுதலைத் தந்தே அருள்.

- வே.இராமா, கைதடி, நாவற்குழி.

## நம்பும் படி செய்!

தடைகள் தரித்திரங்கள் என்னை
முட மாக்கிய போதும் முருகாயுன்
கடைக்கண்பார்வை யொன்றே
காத்தருள் கின்ற தாய்யா என்னை
இடை விடாத துயர்களில் இருந்து
காத்து என்னறிவு ஆற்றல்களால்
நடைபெறுக கின்ற எல்லாமே நன்மைக்கே
என நம்பும் படி செய் நல்லூரா!

- இராம ஜெயபாலன்.

நல்லைக்கந்தனுக்கு
இன்று (09.08.2016) செவ்வாய்க்கிழமை
இரண்டாம் திருவிழா



திருவிழா சிறப்புற வாழ்த்துவோர் :
கமலக்கண்ணன் திருமணசேவை
இல.62, இராமலிங்கம் வீதி, பூங்கனிச்சோலையடி,
முடமாவடி
தொ.பே.: 077 607 0862 (சி.24217) (12.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# கொழும்பு ஆட்சியாளர் குறித்து எச்சரிக்கை மிகத் தேவை...

அரசியல் தீர்வு குறித்து வெறுமனே பேசிக் கொண்டு, அந்தப் போர்வையின் கீழ், பொறுப்புக் கூறலை மறக்கச் செய்வதற்கு அரசு முயன்று வருகிறது. அதற்கு, எந்த வகை சார்ந்தும் நாம் இடமளித்து விடக்கூடாது.

மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார் வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

- தமிழ் மக்கள் எதிர்பார்ப்பது போன்று அரசியல் தீர்வு கிடைக்கப் போவதில்லை.
- சிங்கள அரசியல் தலைமைகள் மட்டும் அன்றி சிங்கள மக்களும் பாதுகாப்புத் தரப்பினரை போர்க்குற்றங்களில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளனர்.
- நல்லாட்சிஅரசு என்று தனக்குத்தானே நாமம் சூட்டிய இப்போதைய அரசு பெரும்பான்மை இனத்தவர்களுடன் -- சகோதர இனத்தவர்களுடன் -- எம்மை முரண்பட வைத்து--
- எங்கள் பலத்தைத் திசை திருப்பி, அதனூடு பலவீனமான அரசமைப்பைத் தயாரித்து, அதனை எம்மீது சுமத்த முயற்சிக்கும்.

தென்னாபிரிக்காவில், அந்த நாட்டுக்கான அரசமைப்பு குறித்த முரண்பாடு முடிவுக்கு வந்த பின்னரே, உள்ளக விசாரணைப் பொறிமுறை ஆரம்பமாகியது--

என்று முதலமைச்சர் ஊன்றித் தொட்டுக் காட்டி உள்ளார்.

எமது மக்கள் விரும்புவது போன்று, அவர்கள் கேட்பது போன்று அரசியல் தீர்வு வழங்கப்பட்டால் மட்டுமே, (இன) நல்லிணக்கம் உண்டாவதற்கான வாய்ப்பு உருவாகும்-- என்றும் அங்கு அவர் அழுத்திக் கூறி இருக்கிறார்.

ஒட்டு மொர்த்தத்தில் இந்த நாட்டை ஆண்ட (சிங்கள) அரசுகள், தமக்கு நெருக்கடிகள் தோன்றும் போதெல்லாம்--


வெவ்வேறு வகை சார்ந்த வேளைகளில், தம்மால் உருவாக்கவல்ல அரசியல் மாய மான்களைக் கட்டவிழ்த்து விட்டு, தமிழ் மக்களை ஏய்க்காட்டும் அரசியல் செயற்பாட்டுக்கு இந்த நாட்டில் பஞ்சமே இருந்த தில்லையே!

இதனை எமது தமிழ் மக்கள், ஒவ்வொரு (கொழும்பு) அரசும் எவ்வாறு காலத்தைக் கடத்தித் தம்மை பேய்க்காட்டின என்பதை, 1956ஆம் ஆண்டு தொடக்கம் நன்கறிந்தவர்கள்.

ஆகையால், நல்லாட்சி அரசின் தமிழ் மக்கள் சார்ந்த நிலைப்பாடுகளையும், அவர்கள் உள்ளும் புறமும் மிக விசாலமாக அறிந்தவர்கள்.

எனவே, கொழும்பு ஆட்சியாளர்கள் குறித்து மிகுந்த எச்சரிக்கையுடன் அவர்கள் செயற்படுவார்கள் என்பதை இப்போதைய அரசு உள்ளார்ந்து உள்வாங்கிச் செயற்படட்டும்.

எதிர்பார்க்கலாமா, என்ன?



தில்லாலங்கடி

வணக்கம் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயா,

தங்களுக்கான இந்தப் பகிரங்கக் கடிதத்தைப் படிப்பதற்குத் தங்களுக்கு நேரம்கிடைக்குமோதெரியவில்லை. மேடைப் பேச்சுக்கள் தயாரிப்பதற்கு இரவிரவாக கண் விழித்திருக்கும் நேரத்தில் சிறிது நேரத்தை ஒதுக்கி இதனைப் படியுங்கள். இல்லாவிடில் மதியத்தில் நெடுந்துயில் கொள்வதற்கான நேரத்தில் சிறிது நேரத்தை வெட்டிக் குறைத்தாவது இதனைப் படித்து, எழுப்பப்படும்சந்தேகங்களுக்குப் பதில் தாருங்கள்.

இந்தக் கடித்தை உங்களால் நேரடியாகப் படிக்க முடியாவிட்டாலும், உங்களுக்கு மகுடி ஊதுபவர்கள், இதனைத் தங்கள் காதுகளில் எப்படியாவது போட்டு வைப்பார்கள் என்ற நம்பிக்கையில் கடிதத்துக்குள் செல்கின்றேன்.

தமிழ் மக்கள் பேரவையின் கூட்டத்தில் நீங்கள் பேசிய பேச்சை அச்சுப் பிசகாமல் வாசித்தேன். என்ன ஒரு பேச்சு ! பிரமாதம் !

உங்களின் பேச்சில் சில இடங்களை ஆழ ஊன்றி வாசித்த போது, கேள்விகள் சில மனதில் எழுந்தன. அந்தக் கேள்வி களையும் – சந்தேகங்களையும் உங்களிடத்தில் இந்தப் பகிரங்க மடல் ஊடாகக் கேட்கின்றேன்.

"சரியோ பிழையோ இயக்க இளைஞர்களின் தியாகமே எங்கள் குறைகளை உலகறிய வைத்துள்ளது என்பதை நாம் மறந்து விடலாகாது. வெறும் சிறுபான்மையினர் கிளர்ச்சியாகக் காணப்பட்ட எமது போராட்டம், வடக்கு-கிழக்கின் பாரம்பரிய பெரும்பான்மையினரின் போராட்டமாகப் பரிணாமம் பெற்றதென்றால், அதற்கு அவர்களே காரணகர்த்தாக்கள் என்பதை நாங்கள் மனதில் கொள்ள வேண்டும்" என்று சொல்லியிருந்தீர்கள்.

இங்கே மேலேழுந்தவாரியாக இயக்கம் என்ற சொல்லைப் பாவித்திருக்கின்றீர்கள். தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டமே தமிழ் மக்களின் குறைகளை உலகறியச் செய்தது.


> சில வேளைகளில் இப்போது உங்களுடன் கூட இருந்து மகுடி வாசிக்கும் இயக்க அரசியல்வாதிகள் கோபித்துக் கொள்வார்கள் என்பதற்காக, அந்தச் சொல்லாடலை நீங்கள் பயன்படுத்தாமல் விட்டிருக்க மாட்டீர்கள் என்பது எனது கணிப்பு. நீங்கள் அப்படிப்பட்டவரல்ல என்பதை இன்னமும் நம்பிக் கொண்டு, அந்தச் சொல்லாடல்பயன்படுத்தாமல் விட்ட தன் பின்னால் உள்ள இராசதந்திரத்தைச் சொன்னீர்களானால் நன்றாக இருக்கும்.

அப்படியிருக்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற சொல்லாடலை ஏன் தவிர்த்தீர்கள் ? சில வேளைகளில் இப்போது உங்களுடன் கூட இருந்து மகுடி வாசிக்கும் இயக்க அரசியல்வாதிகள் கோபித்துக் கொள்வார்கள் என்பதற்காக, அந்தச் சொல்லாடலை நீங்கள் பயன்படுத்தாமல் விட்டிருக்கமாட்டீர்கள் என்பது எனது கணிப்பு. நீங்கள் அப்படிப் பட்டவரல்ல என்பதை இன்னமும் நம்பிக்கொண்டு, அந்தச் சொல்லாடல் பயன்படுத்தாமல் விட்டதன் பின்னால் உள்ள இராசதந்திரத்தைச் சொன்னீர்களானால் நன்றாக இருக்கும்.

2014 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தங்களின் அலுவலகத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் கலந்துகொண்ட கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்தில் அப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் செயலர் சுரேஷ் பிரேமச்சந்திரன் உங்களைப் பார்த்து வினா எழுப்பியிருந்தார். "உங்களை எல்லாக் கட்சிகளும் இணைந்துதான் தேர்தலில் நிறுத்தினார்கள். நீங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் பொதுவானவர். ஆனால் நீங்கள் தமிழ் அரசுக் கட்சி சார்ந்தவராக மாத்திரம் செயற்படுகின்றீர்கள். ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயற்பட ஏன் மறுக்கின்றீர்கள்" என்று அவர் கேட்டிருந்தார். அதற்கு நீங்கள் கூறிய பதில் இப்போது உங்களுக்கு மறந்திருக்கலாம். "ஆயுத கலாசாரப் பின்னணி கொண்டவர்களுடன் நான் இணைந்து செயற்பட மாட்டேன்" என்று தெரிவித்திருந்தீர்கள்.

அப்படித் தெரிவித்த நீங்கள்தான், இப்போது ஆயுதம் ஏந்தியவர்களை மெச்சிப் புகழ்ந்திருக்கின்றீர்கள்.

"நான் இப்பொழுதுதான் அரசியல் சூழ்ச்சிகளைப் படித்து வருகின்றேன். ஒரு தேர்தலில் வென்ற பின் எதிர்த் தரப்பாளரை மேலெழும்ப விடக்கூடாது. வழக்கு மேல் வழக்கு வைத்து,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலமைச்சருக்கு ஒரு பகிரங்க மடல்

# சந்தேகங்களுக்கு விடை தருவாரா?

விசாரணை வைத்து அவர்களின் எதிர்ப்புச் சக்தியை மழுங்கடிக்க வேண்டும் என்பது நான் கற்ற ஒரு பாடம். எதிர்க் கட்சிகளிடம் அல்லது மாறுபட்ட கருத்துடையவர்களிடையே முரண்பாடுகளை ஏற்படுத்தி, அவர்களைத் தலைதூக்க முடியாமல் ஆக்குவது இன்னொரு யுக்தி. முடியுமானால் அவர்களைப் பொலிஸ் நிலையத்துக்கும் நீதிமன்றங்களுக்கும் அலைய விட வேண்டும். இது மற்றொரு பாடம்" என்று சொல்லியிருக்கின்றீர்கள்.

நீங்கள் சுத்திவளைச்சு சுப்பற்றை கொல்லைக்குள் போக முனைந்திருக்கின்றீர்கள். என்னத்தைச் சொல்ல வந்திருக்கின்றீர்கள் என்பதை அறியாத அளவுக்கு, அரசியலில் பாலபாடம் படிக்காதவர்கள் அல்ல மக்கள். மகிந்த அணியின் மீது நடத்தப்படும் விசாரணைகளை அரசியல் பழிவாங்கல் என்று நெத்தியடிபோல் சொல்லியிருக்கலாம்.

நாட்டில் இருக்கின்ற அத்தனை குடிமக்களுக்கும் தெரிந்த விடயம், மகிந்த ஆட்சிக் காலத்தில் மோசடிகள் நடந்தனவா? இல்லையா? என்பது. உப்புத் தின்றவன் தண்ணி குடித்தேதான் ஆகவேண்டும். மகிந்த அணியினர் கடந்த காலத்தில் எத்தகைய மோசடிகளைச் செய்தார்கள் என்பதுதான் தெரியாதே தவிர, அவர்கள் மோசடிகள் செய்தார்கள் என்பது பள்ளிக்குப் போகும் பாலபாடம் படிக்கும் சிறுவனுக்கும் தெரியும். அப்படிப்பட்ட வர்களை விசாரணை, பொலிஸ் நிலையம், நீதிமன்றம் என்று அலைக்கழிப்பதை "அரசியல் சூழ்ச்சி" என்று எடுத்துரைத்ததன் மூலம், மகிந்த அணியினர் மீது உங்களுக்கு ஏன் இந்தத் திடீர் பாசம் என்பது புரியவில்லை.

ஒரு காலத்தில் தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்த வாசுதேவ நாணயக்கார இப்போது மகிந்த அணியுடன் இரண்டறக் கலந்து இனவாதத்தின் உச்சத்தில் போய் நிற்கின்றார். அவர் உங்கள் சம்பந்தி என்பதற்காக நீங்கள், மகிந்த அணிக்கு விசுவாசமாக பேசியிருக்கமாட்டீர்கள் என்பது தெரியும். இருந்தாலும், உங்களின் பேச்சு மகிந்த அணிக்கு வக்காலத்து வாங்குவது போல் உள்ளது. தெளிவுபடுத்தினால் மக்களும் தெளிவு பெற்றுக்கொள்வார்கள்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அனுசரணைச் சக்தியாகவே நடந்து கொண்டு வந்திருக்கும் உங்கள் தமிழ் மக்கள் பேரவையை மனதாரப் பாராட்டுகின்றேன். எமது சமூகத்தின் புத்திஜீவிகள் பலரை உள்ளடக்கியது உங்கள் கட்சி" என்று பேசியிருந்தீர்கள்.



" மகிந்த அணியினர் கடந்த காலத்தில் எத்தகைய மோசடிகளைச் செய்தார்கள் என்பதுதான் தெரியாதே தவிர, அவர்கள் மோசடி செய்தார்கள் என்பது பள்ளிக்குப் போகும், பாலபாடம் படிக்கும் சிறுவனுக்கும் தெரியும். அப்படிப்பட்டவர்களை விசாரணை, பொலிஸ் நிலையம், நீதிமன்றம் என்று அலைக்கழிப்பதை "அரசியல் சூழ்ச்சி" என்று எடுத்துரைத்ததன் மூலம் மகிந்த அணியினர் மீது உங்களுக்கு ஏன் இந்தத் திடீர் பாசம் என்பது புரியவில்லை. "

தமிழ் மக்கள் பேரவை ஒரு போதும் அரசியல் கட்சியாகாது என்று வரிக்கு வரி தெரிவித்து வந்த நீங்களே, இப்போது அதனைக் கட்சி என்பது, காட்சி மாறுவதைக் காண்பிப்பது போல் உள்ளது. வாய் தவறி நீங்கள் அந்த வார்த்தையை உதிர்ந்து விட்டதாகவே நம்புகின்றேன். இருப்பினும் மனதில் அது சஞ்சலத்தை உண்டுபண்ணுகின்றது. வாய் தவறிச் சொன்னீர்களா அல்லது வருங்காலத்தைக் கணித்துச் சொன்னீர்களா என்பதைச் சொன்னால் நல்லாயிருக்கும்.

"அரசியல் தீர்வு பற்றிய கருத்தரங்கத்தில் என் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், எமது விவசாயத்துறை அமைச்சர் ஐங்கரநேசன், எமது எதிர்க்கட்சித் தலைவர் தவராஜா ஆகியோர் கலந்து கொண்டு கூட்டாட்சி பற்றியும் எமது எதிர்பார்ப்புக்கள் பற்றியும் உரையாற்ற உள்ளனர்" என்றும் உரையாற்றியிருந்தீர்கள்.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், அமைச்சர் ஐங்கரநேசன் இருவரும் நீங்கள் கீறிய கோட்டைத் தாண்டாதவர்கள். அவர்கள் உங்கள் அணியைச் சேர்ந்தவர்கள். ஆனால் தவராஜா ஈ.பி.டி.பி.யைச் சேர்ந்தவர். ஜனநாயகப் பண்புக்காக எதிர்க்கட்சியையும் இணைத்துக் கொண்டு நீங்கள் பயணிப்பதை வெளிக்காட்டுவதற்காகவே அவரையும் உங்கள் சார்பில் நீங்கள் அனுப்பி வைத்திருப்பீர்கள் என்று நம்புகின்றேன். என்னதான் பாம்மைப் பிடித்து வீட்டில் வளர்த்தாலும், அது தன்னுடைய குணத்தைக் காட்டத்தான் செய்யும். இது தங்களுக்குத் தெரியாதல்ல. அரசியல் தளமே இல்லாதவர்கள் எல்லோருமே இப்போது உங்கள் தயவில்தான் தொங்கிக் கொண்டிருக்கின்றார்கள். அப்படி பத்தோடு பதினொன்றாக இவரும் இருந்து விட்டுப் போகட்டும் என்ற உங்களின் பெருந்தன்மையை அறியாமல் இதனைக் கேட்பதாக எண்ண வேண்டாம்.

எதுவாக இருப்பினும் அடிக்கடி தவராஜாவுடன் நீங்கள் கூட்டுச் சேர்ந்து செயற்படுவதன் காரணம்தான் என்ன ?

உங்கள் பதிலுக்கு காத்திருக்கின்றேன். பதில் கிடைக்காவிட்டாலும், விரைவில் அடுத்த பகிரங்கக் கடிதத்தின் மூலம் சந்திப்போம்.

## பெண்களை வாழவிடுங்கள்

'தாய்க்குப்பின் தாரம்' என்று எமது முன்னோர்கள் கூறியுள்ளார்கள். (அந்தப் பெயரில் எம்.ஜி.ஆர். ஒரு திரைப்படத்தில் நடித்திருந்தார்.) எம்மவர்கள் இந்த அறிவுரையை எப்படிப்புரிந்து கொண்டார்களோ தெரியவில்லை. ஒரு மனிதனுக்கு இறுதிவரை அன்புகாட்டும் மனைவியை தாயாக மதிப்பவரும் உண்டு, தாசியாக மதிப்பவரும் எம்மிடையே உண்டு. கடந்த 28.07.2016 உதயனில் வந்த செய்தி கட்டியகணவனாலும் பெண்களுக்குப் பாதுகாப்பில்லை என்றசெய்தியை கூறுவதாக உள்ளது.

கட்டிய மனைவியிடம் நிறைபோதையில் வீரசாகசம் செய்யும் வீரக்கணவர்கள் எம்மத்தியில் நிறையப்பேர் உள்ளனர். இவர்கள் மனைவியைப் பிள்ளை பெறும் இயந்திரமாகவும், ஏவல்களை நிறைவேற்றும் வேலைக்காரியாகவும் எண்ணுகிறார்கள். அதிகபோதையில், அடிப்பார்கள், வதைப்பார்கள், மிதிப்பார்கள், இறுதியில் மண்ணெண்ணெயோ பெற்றோலோ ஊற்றி கொளுத்தவும் பார்ப்பார்கள்,குடும்பங்களில் பெண்களுக்கெதிரான வன்முறை இப்போதுதான் என்றல்லாது, காலம் காலமாக நடந்துவருகின்றது. குடும்பப் பெண்ணாக இருந்தால் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற எழுதப்படாத சட்டமாக இருக்கின்றது.

எமது வீரக்கணவர்களும் இரக்கம் உள்ளவர்களாக இல்லை. பொலிஸாரிடமும் இந்தப் பெண்களுக்குப் பாதுகாப்பில்லை. உற்றார், உறவினர், சமூகத்தினர், எவராலும் இவர்களுக்குப் பாதுகாப்பில்லை என்றால், இந்த அபலைப் பெண்களின் கதிதான் என்ன? சில பெண்கள் குடும்ப வன்முறையால் தற்கொலைக்கு ஆளாகியிருக்கின்றார்கள். இவர்களைப் பாதுகாக்க சட்டத்தில் இடம் இல்லையா? மகளிர் அமைப்புக்களுக்கும் பொது அமைப்புக்களுக்கும் கூடவா இவர்கள் துயரம் புரியவில்லை? (மாதர் தம்மை அடிமை செய்யும் மடமையைக் கொளுத்துவோம்) என்று பாடிய பாரதியாரின் எண்ணத்துக்கு அமைவாக செயற்பட முன்வருவோம். இனிமேலாவது குடும்ப வன்முறையில் இருந்து பெண்களைக் காக்கப் பொது அமைப்புகளும், அரச காவலர்களும் முன்வர வேண்டும் என்பது சமூகநலன் விரும்பிகளின் பொது அபிப்பிராயமாகும். உதவ முன்வருவார்களா?

**ந.மரியநாயகம்**
**கொழும்புத்துறை.**

## கண்ணகைபுரமும் கல்வாடி ஆறும்

அக்கராயன் பகுதியில் அமைந்துள்ள கண்ணகைபுரம் கல்வாடி ஆற்றுக்கு சமாதான காலத்துக்கு முன்பாக பெரிய மவுசு ஒன்று இருந்தது. இறந்தவர்களின் இறுதிக்கிரியைகள் அதாவது கீரிமலையைப் போன்று அஸ்தி கரைத்து நீராடிச் செல்லும் புனித இடமாக கருதப்பட்டது. ஆனால் தற்போது அந்த இடம் மண் அகழ்வின் கேந்திர நிலையமாக மாறிவிட்டது. இந்த ஆற்றுப்பகுதியில் நாளுக்கு குறைந்தது 60 லோட் மணலுக்கும் மேலாக அகழப்படுகின்றது. அதனால் அந்தப் பிரதேசத்தை அண்டிய கண்ணகைபுரம் கோணாவில் பிரதேசத்தின் வயல் பகுதி என்பவை மிகவிரைவில் நீரில் மூழ்கும் அபாயமும் உள்ளது. ஆனால் இந்தச்சட்ட விரோத மண் அகழ்வை எவரும் கண்டு கொள்ளாமல் இருப்பதுதான் வேடிக்கையும் கவலையும். தயவு செய்து சம்பந்தப்பட்டவர்களுக்கு அன்பான வேண்டுகோள். வீதியில் நின்று உள்ளே என்ன நடக்கிறது என்பதைப் பாராது, காற்சட்டையை சிறிது மடித்துவிட்டு ஆற்றுக்கு உட்பக்கம் சென்று பாருங்கள். அழிவைத் தடுங்கள். நாட்டைக் காப்பாற்றுங்கள்.

**எம்.புதியவன், அக்கராயன்.**

## அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையம் அமைப்பதற்கு 20பரப்புக் காணி கிடைக்கப் பெற்றதாக உதயன் பத்திரிகையில் செய்தி வெளிவந்துள்ளது. நெற் காணியை நிரப்பி கட்டடம் கட்டுவதற்கு சட்டத்தில் இடம் கொடுக்கப்படவில்லை. அவ்விதம் பொலிஸ் நிலையம் கட்டுவதற்கு அதிகாரிகள் உடன்பட்டால், பாமர மக்களும் வீதியோரமாக தங்கள் நெற்காணிகளை நிரப்பி வீடு கட்டுவதற்கு அனுமதி வழங்குவார்களா? பிரதேச செயலரே, பெரும்பாக உத்தியோகத்தரே. உங்களுக்கு இது சமர்ப்பணம்.

**வே.க.கிருபாகரன்,வட்டுக்கோட்டை**

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிற்சியாளரும் நானே போட்டியாளரும் நானே

ஜோர்ஜியா நாட்டைச்சேர்ந்த தாயும் மகனும் ஒலிம்பிக் துப்பாக்கி சுடும் போட்டியில் கலந்துகொள்ளவுள்ள சம்பவம் இம்முறை அரங்கேறவுள்ளது.
மூன்று முறை பதக்கங்களை வென்ற வீராங்கனையான நினோ சலுக்வடிஸ், தனது மகனான சொட்டின் மசாவரியனியுடன் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளார். 47 வயதான நினோ, ஒலிம்பிக் துப்பாக்கி சுடும் போட்டிகளில் அதிகமாகக் கலந்து கொண்ட வீராங்கனை என்ற பட்டியலில் இரண்டாவது இடத்தையும், மகனுடன் கலந்து கொள்ளும் தாயாகவும் இவர் ஒலிம்பிக் வரலாற்றில் பதிவை ஏற்படுத்தியுள்ளார்.
இது தொடர்பில் நினோ, 1988 ஆம் ஆண்டு ஒலிம்பிக் தொடரில் கலந்து கொண்டு முதற் தடவையாக தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை வென்றேன். இந்தப் போட்டிகள் மிகவும் கடுமையானவை இவற்றில் வெற்றிபெற கடின பயிற்சி மேற்கொண்டுள்ளேன். நான் போட்டிகளில் கலந்து கொள்வது எனது மகனுக்கு முன்மாதிரியாக அமையும் என எதிர்பார்க்கின்றேன். எனது மகனுக்கு ஓர் தாயாக மட்டுமல்லாமல் ஓர் பயிற்சியாளராகவும் இருப்பதுபெருமை தருகிறது. அவனது போட்டியாளரும் நானே. எனது சாதனைகளை நீ முறியடிக்க வேண்டும் என்று நான் அவனிடம் கூறி வைத்துள்ளேன். எனது மகன் சாதிப்பான் என்ற நம்பிக்கை என்னிடத்தில் மிகையாகவே உள்ளது என மேலும் தெரிவித்தார். (ம-ரி4)





மைக்கெல் பெல்ப்ஸ்

# 19ஆவது தங்கப்பதக்
# வென்றார் மைக்கெல்
## மலைக்க வைக்கும் சாதனை

அமெரிக்க நீச்சல் வீரரான மைக்கெல் பெல்ப்ஸ் தனது ஒலிம்பிக் தொடர்களில் தனது 19 ஆவது தங்கப்பதக்கத்தை நேற்றுமுன்தினம் பெற்றார். ஆண்களுக்கான குழு நிகழ்வான 4 வீரர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் நீச்சல் போட்டியில் அமெரிக்கா வென்றதையடுத்து இவர் தனது 19ஆவது தங்கப்பதக்கத்தைப் பெற்றார். இந்தப் போட்டியில் பிரான்ஸ் இரண்டாவது இடத்தையும், ஆஸ்திரேலியா மூன்றாவது இடத்தையும் தட்டிச்சென்றது. இந்தத் தங்கப்பதக்கம் ஒலிம்பிக் தொடர்களில் மைக்கெல் பெல்ப்ஸின் 19 ஆவது தங்கப்பதக்கமாகும். தவிர 2 வெள்ளி, 2 வெண்கலம் என அவர் இதுவரை 23 ஒலிம்பிக் பதக்கங்களைக் குவித்துள்ளார். ஒலிம்பிக்கில் அதிக பதக்கங்களை குவித்தவர்களின் வரிசையில் முதலிடத்தில் உள்ளவர் இவரே. நீச்சல் உலகில் ஜாம்பவானாகத் திகழும் பெல்ப்ஸ், ஒலிம்பிக் தொடரில் கால் பதித்தது சிறிது விசித்திரமான பின்னணியைக் கொண்டது. தனது 10 வயதில் கவனக்குவிப்பற்ற நோயினால் அவதிப்பட்ட பெல்ப்ஸ், அந்த நோயி
லிருந்
கவனத்
பாடசா
கொள்
போட்டி
வைத்த
படிப்ப
னைகள
77 பல
திருக்கி

# 10 மீ. துப்பாக்கி சுடுதல்; தங்கப்பதக்கம் சீனாவிடம்

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற 10 மீற்றர் துப்பாக்கி சுடுதலில் பெண்கள் பிரிவில் தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றியது சீனா.
சீனாவின் சார்பாக களமிறங்கிய செசாங் மெங்குவி ஒட்டுமொத்தமாக 199.4 புள்ளிகளைப் பெற்று தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார். ரஷ்யாவின் விட்டலினா 197.1 புள்ளிகளைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும், கிரீஸின் அன்னா கொரகாஹ்கி 177.7 புள்ளிகளைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-ரி4)

# பெண்களுக்கான ஹொக்கித் தொடரில் ஸ்பெய்னை நொறுக்கியது நெதர்லாந்து

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்கள் பிரிவு ஹொக்கி ஆட்டமொன்றில் நெதர்லாந்தை வீழ்த்தியது ஸ்பெய்ன்.
இந்த இரு அணிகளும் 'ஏ' பிரிவில் இடம்பெற்றன. ஆட்டம் முழுவதையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த நெதர்லாந்து 5:0 என்ற கோல் கணக்கில் மிகமிக இலகுவான வெற்றியைப் பதிவுசெய்தது. நேற்றைய ஹொக்கி ஆட்டங்களில் ஆகச் சிறந்த வெற்றியாக நெதர்லாந்தின் வெற்றி பதிவானது. ஏனைய ஆட்டங்களில் நியூசிலாந்து, தென்கொரியாவை 4:1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. சீனா-ஜேர்மனி அணிகளுக்கு இடையிலான ஆட்டம் 1:1 என்று சமநிலையில் முடிவடைந்தது.
'பி' பிரிவு ஆட்டங்களில் பிரித்தானியா, ஆஸ்திரேலியாவை 2:1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. ஜப்பான்-இந்தியா அணிகளுக்கு இடையிலான ஆட்டம் 2:2 என்று சமநிலையில் முடிவடைந்தது. (ம-ரி4)






# தனது சாதனையை தானே முறிய

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்கள் கூடைப்பந்தாட்டமொன்றில் தனது சாதனையை தானே முறியடித்தது அமெரிக்க அணி.
செனகல் நாட்டுடன் இடம்பெ
இந்த ஆட்டத்தில் 121:56 எ
புள்ளிகளின் அடிப்படை
அமெரிக்கா வெற்றியீட்டிய
ஒலிம்பிக் வரலாற்றில் பெண்

# ஆயிரம் உளவாள

ஒலிம்பிக்கில் கலந்து கொண்டுள்ள அமெரிக்க வீரர்கள் மற்றும் ஊழியர்களைப் பாதுகாக்க, ஆயிரத்துக்கும் மேற்பட்ட அமெரிக்க உளவாளிகள் ரியோவில் மையம் கொண்டுள்ளதாக
தகவல் வெளியாகி
31 ஆவது ஒலிம்பி
ரியோ டி ஜெனிரோ
வருகிறது.
இந்தத் தொடரை



# ...ங்க்கத்தை
# ... பெல்ப்ஸ்
## ...ன

...லிருந்து விடுபடுவதற்காகவே நீச்சலில் முழுக் கவனத்தையும் செலுத்தினார். இதனையடுத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ள ஆரம்பித்தார். பின்னர் மாநில அளவுப் போட்டிகளில் தனக்கான இடத்தைத் தக்க வைத்தார்.

படிப்படியாக பரந்து விரிந்த இவரது சாதனைகள் தற்போது 23 ஒலிம்பிக் பதக்கங்கள், 77 பன்னாட்டுப் பதக்கங்கள் என்று குவிந்திருக்கின்றன. (ம-ரி4)



## ...முறியடித்தது அமெரிக்கா

...ள இடம்பெற்ற ...121:56 என்ற ...டிப்படையில் ...ற்றியீட்டியது. ...ில் பெண்கள் பிரிவில் 114 புள்ளிகள் குவித்தமையே (அமெரிக்கா) முன்னைய சாதனையாக இருந்தது. தற்போது இந்தச் சாதனையை அமெரிக்கா தானே முறியடித்தது. (ம-ரி4)

# பழுதூக்கலில் உலக சாதனை படைத்தார் சீனாவின் லோங்



ரியோ ஒலிம்பிக் தொடரில் ஆண்களுக்கான 56 கிலோ எடைப்பிரிவில் உலக சாதனையுடன் தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றியது சீனா.

சீனாவின் சார்பாக களமிறங்கிய குஜிங் லோங் ஒட்டுமொத்தமாக 307 கிலோ பழுவைத்தூக்கி உலக சாதனையுடன் தங்கம் வென்றார். வடகொரியாவின் யுன்ஷால் 303 கிலோ பழுவைத்தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும், தாய்லாந்தின் சின்பியட் 289 கிலோ பழுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.

சீனாவுக்கு ஏற்கனவே தங்கப் பதக்கம் கிடைத்த போதிலும் அந்த நாட்டுக்குச் சாதனையுடன் தங்கம் கிடைத்தது இந்தப் போட்டியிலேயே ஆகும். (ம-ரி4)

## ரியோவிலிருந்து வெளியேற்றப்பட்டனர் வில்லியம்ஸ் (அமெரிக்கா) சகோதரிகள்



ரியோ ஒலிம்பிக் தொடரில் பெண்கள் இரட்டையர் ரென்னிஸ் தொடரிலிருந்து அமெரிக்காவின் வில்லியம் சகோதரிகள் அதிர்ச்சிகரமாக வெளியேற்றப்பட்டனர்.

நேற்று அதிகாலை (இலங்கை நேரப்படி) நடைபெற்ற இந்த ஆட்டத்தில் செரீனா வில்லியம்ஸ், வீனஸ் வில்லியம்ஸ் (அமெரிக்கா) இணையை எதிர்த்து லூசி சபரோவா மற்றும் பர்போரா (செக்குடியரசு) இணை மோதியது. ஆட்டத்தின் ஆரம்பம் முதலே ஆவேசத்தை வெளிப்படுத்திய செக்குடியரசு இணை முதல் செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது. ஆட்டத்தில் மொத்தம் மூன்று செற் என்பதால் இரண்டாவது செற்றையும் கைப்பற்றி நேர்செற் வெற்றிபெற செக்குடியரசு இணை முனைப்புக் காட்டியது. இரண்டாவது செற்றையும் 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய செக்குடியரசு 2:0 என்ற நேர் செற் கணக்கில் அமெரிக்காவை வெளியேற்றியது.

பன்னாட்டு ரென்னிஸ் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ளவரான செரீனா வில்லியம்ஸையும், வலிமையான வீராங்கனையான வீனஸ் வில்லியம்ஸையும் கொண்ட அமெரிக்கா, ரென்னிஸ் தொடரில் பெண்கள் இரட்டையர் பிரிவில் தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதிலும் முதல் சுற்றுடன் பதக்கக் கனவு முடிவுக்கு வந்தமை அதிர்ச்சியை ஏற்படுத்தியது. (ம-ரி4)

## வீட்டுக்கு அனுப்பப்படுகிறார் கென்ய தடகள முகாமையாளர்

ஒலிம்பிக் போட்டிகளின்போது வீரர்களிடத்தே மேற்கொள்ளப்படும் ஊக்கமருந்துச் சோதனை தொடர்பான முடிவுகளை அவர்களுக்கு முன்கூட்டியே அறிவிப்பதற்கு இணங்கிய கென்யாவின் தடகள அணியின் முகாமையாளரான மைக்கல் றொட்டிச், கென்ய தடகள சம்மேளனத்தினால் பதவி விலக்கப்பட்டார்.

ரியோ ஒலிம்பிக் தொடருக்காக மேற்கொள்ளப்பட்ட ஊக்கமருந்துச் சோதனை தொடர்பாக அதிக கவனம் காணப்பட்டதோடு, கடந்த சில மாதங்களாக, கென்யாவின் ஊக்கமருந்துச்சோதனை தொடர்பாகவும் அதிக கவனம் செலுத்தப்பட்டது. பல வீரர்கள், ஊக்கமருந்துப் பாவனை காரணமாகச் சிக்கியிருந்தனர். இதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையிலேயே றொட்டிச், வீரர்களிடத்தே மேற்கொள்ளப்படும் ஊக்கமருந்துச் சோதனை தொடர்பான முடிவுகளை அவர்களுக்கு முன்கூட்டியே அறிவிப்பதற்கு இணங்கியமை வெளிப்பட்டது. அவர் தனது குற்றத்தை ஏற்றுக்கொண்டமையை அடுத்து பதவி விலக்கப்பட்டார். (ம-ரி4)

## நீச்சலில் சாதிப்பாரா மத்தியூ அபயசிங்க

ரியோ ஒலிம்பிக் தொடரில் இன்று நடைபெறவுள்ள ஆண்களுக்கான 100 மீற்றர் நீச்சல் போட்டியில் இலங்கையின் சார்பாக மத்தியூ அபயசிங்க களமிறங்குகிறார்.

இலங்கைக்கு இதுவரை ஒரு பதக்கமேனும் கிடைக்கவில்லை. இந்த நிலையில் நம்பிக்கை வீரரான மத்தியூ அபயசிங்கவின் மூலம் இலங்கையின் பதக்கப்பட்டியல் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அண்மையில் முடிவடைந்த தெற்காசியப் போட்டியில் அபயசிங்க மூன்று தங்கப்பதக்கங்களைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (ம-ரி4)



கோப்புப் படம்

# ...ளிக்ளைக் களமிறக்கியது அமெ.

...வெளியாகியுள்ளது.

...ு ஒலிம்பிக் தொடர் பிரேஸிலின் ...ஜெனிரோ நகரில் நடைபெற்று ...

...தொடரை சீர் குலைப்போம் என ஐ.எஸ். அமைப்பினர் ஏற்கனவே அறைகூவல் விடுத்திருந்ததால் கிட்டத்தட்ட ... ஆயிரம் பொலிஸாரும் படை வீரர்களும் ஒலிம்பிக் கிராமத்துக்கு பாதுகாப்பு வழங்குகின்றனர்.

இந்த நிலையில் அமெரிக்க வீரர்கள் மற்றும் ஊழியர்களைப் பாதுகாக்க, ஆயி... அமெரிக்க உளவாளிகளை அந்த நாடு அனுப்பியுள்ளது. (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு வியாழ மாற்றம் எப்படி? கடகம்

குருப் பெயர்ச்சி, ஒகஸ்ட் 2ஆம் திகதி, தமிழுக்கு ஆடி 18 ,ஆடி அமாவாசை கூடிய நன்னாளில் காலை 9.24 மணிக்கு சிம்ம ராசியில் இருந்து கன்னி ராசிக்கு குரு மாறுவதால் ஏற்படுகிறது. கன்னி ராசிக்கு மாறும் குரு உங்கள் ராசிக்கு எந்த இடத்தில் இருக்கிறார். அதனால் உங்கள் ராசிப்படி உங்களுக்கு ஏற்படும் நன்மை–தீமைகளைப் பற்றிப் பார்ப்போம். அதிக ஆதாயம் அடையும் ராசியினர் – இடபம், சிம்மம், விருச்சிகம், மகரம், மீனம் இவர்கள் ராசிக்கு குரு 2,5,7,9,11 என முழு சுப பார்வை செலுத்துவதால் இந்த ராசியினருக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.



## புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம் வரை

குரு. சந்திர சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (20.9.2016 முதல் 24.11.2016 வரை): ஆரோக்கியத் தொல்லை அகலும். அலைச்சல் கூடினாலும் ஆதாயம் உண்டு. மனக்குமுறல் மாற மாற்றினத்தவர்கள் ஒத்துழைப்புச் செய்வர். பணப் பிரச்சினைகள் அகலும். பற்றாக்குறை மாறும். தாய்வழி ஆதரவு கிடைக்கும். புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

குரு. செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (25.11.2016 முதல் 21.2.2017 வரை மற்றும் 2.6.2017 முதல் 1.9.2017 வரை): பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும். அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைத்து உதிரி வருமானங்களும் வரும். அயல்நாடு சென்று படிக்க விரும்புபவர்களுக்கு அனுகூலமான பலன் கிடைக்கும். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். மங்கள காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். பூர்வீக சொத்துக்களில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**மங்கையருக்கான மகத்தான பலன்கள்!**

கடக ராசியில் பிறந்த பெண்களுக்கு இந்தக் குருப் பெயர்ச்சி, அக்கறை செலுத்தாத காரியங்களில் கூட ஆதாயம் கிடைக்க வைக்கும். கணவன்–மனைவிக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடு அகலும். ஒற்றுமை பலப்பட விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. புகுந்த வீட்டில் உள்ளவர்கள் உங்களைப் போற்றிக் கொண்டாட வேண்டுமானால் அமைதியைக் கடைப்பிடிக்க வேண்டும். குடும்ப ரகசியங்களை வெளியில் சொல்வதன் மூலம் கூடுதல் பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியிருக்கும். இந்தக் குருப் பெயர்ச்சி உங்கள் திறமையை வெளிப்படுத்தி பாராட்டுதல்களை வாங்கிக் கொடுக்கப் போகிறது. உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். குருவின் வக்ர காலத்தில் பூமி வாங்கும் யோகம் உண்டு. திசைமாறிய தென்முகக் கடவுளை வழிபாடு செய்வது நல்லது.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!**

இந்தக் காலத்தில் வியாபார விரோதங்கள் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது நல்லது. வேலைப்பளு அதிகரிக்கும். மனச்சோர்வு, உடல் உபாதை போன்றவற்றை எதிர்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும். உங்களுக்கு 6,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குருபகவான் என்பதால், உத்தியோக மாற்றங்கள் எதிர்பார்த்தபடி வந்து சேரும். பிரச்சினைகள் தீர சட்ட ஆலோசனை கேட்டுக் கொள்வது நல்லது. தொழில் செய்பவர்களுக்கு இடமாற்ற சிந்தனைகள் மேலோங்கும். பழைய கடன்களைத் தீர்த்தாலும் புதிய கடன்கள் உருவாகும். வீண் பழிகளும், விரயங்களும் ஏற்படாமலிருக்க வியாழனை வழிபடுவது நல்லது. குரு அதிசாரத்தில் வரும்பொழுது நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள்.

**செல்வம் தரும் சிறப்பு வழிபாடு!**

ராசிநாதன் சந்திரன் என்பதால் பௌர்ணமியன்று கிரிவலம் வருவதன் மூலமும், பெண் தெய்வ வழிபாட்டின் மூலமும் பெருமைகளைக் காணலாம்.

(தொடரும்)

# அம்மாவே அகிலத்தை ஆள்பவள்

அன்ரனி பீற்றர்

அம்மா என்ற சொல் பல வகையான கருத்துண்மைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள ஒரு சக்தி வாய்ந்த சொல்லாகும். அம்மா என்றால் அன்பு, அறிவு, சக்தி, செல்வம், தாய்மை, பெண்மை என்றும், எல்லாவற்றுக்கும் மூல காரணம் என்றும் கொள்ளப்படுகின்றது. அவ்வாறான மேன்மை பொருந்திய அந்தப் பாத்திரத்தின் ஆளுகைக்குள்ளே அனைத்தும் அடங்குகின்றன. கடவுளையே அம்மையப்பன் என்றும், பூமியை அன்னை பூமியென்றும், நாட்டைத் தாய்நாடு என்றும், மொழியைத் தாய் மொழியென்றும்,மற்றைய எல்லாவற்றிலும் முதலாவதைத் தாய்மூலம் என்றும் குறிப்பிடுவதை நாம் அறிவோம். ஆனால் அதனுள்ளே பொதிந்துள்ள அர்த்தங்களை எல்லோரும் விளங்கிக் கொள்வதே அறிந்து கொள்வதோ, ஏற்றுக் கொள்வதோ குறைவு. இது எம் அறியாமை என்று கூடக் கூறலாம்.

ஒரு குடும்பத்தில் அல்லது சமுதாயத்திலோ அம்மா என்ற பாத்திரம் மிகவும் மதிப்புக்குரிய முக்கியமான ஒரு பாத்திரமாகும். ஏனென்றால், திருமண பந்தத்தின் மூலம் கணவன்–மனைவியாக ஒன்றித்து வாழ்ந்து அந்த அன்புவாழ்வு மூலமாகக் குழந்தைகளைப் பெற்றெடுக்கின்ற பொழுது ஆண், பெண்ணாக இருந்தவர்கள், கணவன்–மனைவியாகி, பெற்றோர்களாகி தாய், அம்மா என்ற தகுதி நிலையைப் பெண்ணானவள் பெற்றுக் கொள்ளுகின்றாள். எனவே கருவில் சுமந்த காலம் முதல் பிள்ளையைப் பெற்றது தொடக்கம் அம்மா குடும்பத்தலைவியாகின்றாள். குழந்தை பிறந்தது முதல் 05 வயது வரை பிள்ளை தாயிடமிருந்தே உண்மைகளைக் கற்றுக் கொள்கின்றது. இந்தக்காலங்களில் பிள்ளை கற்றுக் கொள்வது அதிகம். அவை யாவும் 'பசுமரத்தாணிபோல்' அவர்களின் மனதினை ஆட்கொண்டுவிடும். அதன் பின்னரான காலப்பகுதிகளில் கற்றுக் கொண்டவைகளின் விளைவே விரிவு படுத்தப்படுகின்றது என்று உளவியலாளர்கள் கூறுகின்றார்கள். இவற்றைப் பின்நோக்கிப் பார்க்கின்ற பொழுது அறிவியலாளர்கள் கருத்துக்கள் ஒத்துச் செல்வதையும் காணலாம்.

நான் இங்கே சொல்லவருவது முக்கியமும் முதன்மையும் பெறுகின்ற அம்மாக்களின் பங்களிப்புக்களைப் பற்றியதே. ஒரு தாயின் எண்ணங்கள் வார்த்தைகள், அறிவு செயற்பாடுகள் உண்மையுடனான உறவு நிலை. பிறர் நேயப்பண்பு, சமூக நேசிப்பு இவைகளின் பிரதி பலிப்பானது அன்னையின் பாலுடனும் உணவுடனும் அறிவுரைகளுடனும், நடத்தைகளுடனும் பிள்ளையைச் சென்றடைகின்றது. இவைகளின் சாதக, பாதகங்களே பிள்ளையிடம் வெளிப்பட்டு அவனுடையது அல்லது அவளுடைய தாகின்றது.

நாம் படித்தவர்கள், அறிவுள்ளவர்கள் எதையும் பெறுப்பேற்று நடத்துபவர்கள். எமது பிள்ளைகள் எமது அறிவுரைப்படிதான் நடப்பார்கள் என்று பெற்றோர்கள் பெருமை கொள்ளலாம். அவ்வாறு பெற்றோர்கள் நடந்து பிள்ளை பிழையான வழியில் சென்று விட்டதென்றால் சூழல் சகபாடிகளின் செல்வாக்கு மாற்றியுள்ளது என்று கூறலாம். அப்படியான காரணங்கள் ஒரு சிலவாகவே இருக்கும். "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" என்ற சினிமாவின் தத்துவப் பாடல் அன்னையின் வளர்ப்பே பிள்ளையின் வழியாக வருகின்றது. பண்பற்ற வார்த்தைகள், செயற்பாடுகள், நடத்தைகள், அறிவுரைகள், வழிப்படுத்தல்கள், பிள்ளை பிழையான வழியைத் தெரிந்தெடுக்க வழிகாட்டுகின்றது. மாறாக அன்பு, அரவணைப்பு, உண்மை பேசுதல், இரக்கம் காட்டுதல், கொடுத்துப் பரிமாறுதல், உதவி செய்தல் இத்தகைய பெற்றோரின் பண்புகள் பிள்ளைகளிடம் நல்லவழியைக் காட்டும். இதற்கு ஒரு சிறிய உதாரணமாக ஓர் ஆலயத்தல் தாய் செய்ததைப் பார்த்து பிள்ளை தான் செய்தது மட்டுமல்லாமல் கடவுளைத் தொட்டு தானும் நெற்றியில் ஒற்றிக் கொண்டு தாய்க்கும் சேர்த்து செய்கின்றது. இரண்டு வயதுக் குழந்தை என்பதைப் பார்க்கும்போது தாயானவளின் அன்பு, அரவணைப்பு வழிப்படுத்தல் பெருமைக்குரியதாக இருந்தது.

முற்காலத்தவர் பெற்றோரை மாதா, பிதா என்று பெருமதிப்புடன் வணங்கி மரியாதை செலுத்தினார்கள். மாதா என்பது அம்மாவைக்குறிக்கும் ஒரு வார்த்தை. அம்மாவே அகிலத்தை ஆள்பவள் என்று ஏற்கனவே கூறியுள்ளேன். இன்றைக்கு நாம் போர் முடிந்தும் போரின் கெடுபிடிகளுக்குள் சிக்கி சமாதானம் இல்லாதவர்களாக அவஸ்தைப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சமாதானம் வேண்டாமென்றால் அம்மாக்களின் (மாதாக்களின்) பங்களிப்பு அவசியமானதாக இருக்கின்றது. சமாதானம் என்ற சொல்லிலே முதலாவது எழுத்தையும் கடைசி இரண்டு எழுத்துக்களையும் நீக்கினால் வருவது மாதா என்பதே. இன்று எமது மண்ணிலே போரின் கோரத் தாண்டவத்தால் மாதாக்கள் கணவனை, பிள்ளைகளை இழந்து கண்ணீர் வடிக்கின்றார்கள்.

*கட்டுரையாளர்: முன்னாள் ஆசிரிய ஆலோசகர்.*



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெற்றிபெற வேண்டும் கைதிகளின் போராட்டம்?

எம்.ஐ.முபாறக்

ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து தமிழர் வாழ்வில் புது நம்பிக்கைஒளிவீசத்தொடங்கியுள்ளது என்றே சொல்ல வேண்டும். மகிந்த அரசுடன் ஒப்பிடுகையில் இந்த அரசு சிறுபான்மை இன மக்களுக்கு ஓரளவு சாதகமாக இருப்பதை அவதானிக்கலாம்.

தமிழர்களில் ஓரிரு பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதைத் தொடர்ந்து நீண்ட காலப் பிரச்சினையான கைதிகளின் பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும். அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப் பட்டது.அந்தக் கோரிக்கையை முன்வைத்து கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 12 ஆம் திகதி நாடு முழுவதும் உள்ள சிறைகளில் உள்ள அரசியல் கைதிகள் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் குதித்தனர்.

அவர்களுக்கு ஆதரவாக வெளியிலும் போராட்டங்கள் நடத்தப்பட்டன. அதே ஆண்டு நவம்பர் மாதம் 7 ஆம் திகதி இது தொடர்பில் முடிவு ஒன்று அறிவிக்கப்படும் என ஜனாதிபதி அறிவித்ததைத் தொடர்ந்து ஒக்ரோபர் 17 ஆம் திகதி போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது. அரசு கூறியது போல், நவம்பர் 5 ஆம் திகதி தீர்மானம் ஒன்றை அறிவித்தது.

அந்தத் தீர்மானத்தின்படி, தண்டனை வழங்கப்பட்ட கைதிகள், நீதிமன்ற விசாரணைகளை எதிர்கொண்டு வரும் கைதிகள் மற்றும் விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகள் என கைதிகள் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர்.

அவற்றுள் விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 62 கைதிகளை பிணையில் விடுதலை செய்வது என்றும்-32 கைதிகள் முதற்கட்டமாக விடுதலை செய்யப்படுவர் என்றும்-அரசு அறிவித்தது.இந்தத் தீர்மானத்தை எதிர்த்து அனைத்துக் கைதிகளும் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படவேண்டும் என்றுகோரிமீண்டும்உணவுத்தவிர்ப்புப் போராட்டத்தில் இறங்கினர்.

இந்த நிலையில்,வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஜனாதிபதியைச் சந்தித்து, கைதிகளின் விடுதலையை வலியுறுத்தினார்.இது தொடர்பில் மீண்டும் தீர்மானம் ஒன்று எடுக்கப்படும் என ஜனாதிபதி உறுதியளித்தார்.

இதற்கிடையில் தமக்குப் பொது மன்னிப்பு வழங்க வேண்டும். அல்லது புனர்வாழ்வளிக்கப்பட்டாவது தாம் விடுதலை செய்யப்படவேண்டும் எனக் கோரி, அந்தக் கைதிகள் ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்தனர்.



அந்தக் கடிதம் தொடர்பில் ஜனாதிபதி சட்டமாதிபருடன் பேச்சு நடத்தி, ஒரு தீர்மானத்துக்கு வந்தார். நீதிமன்ற விசாரணைகளை எதிர்கொண்டு வரும் 85 கைதிகளுக்குப் புனர்வாழ்வளித்து அவர்களை விடுதலை செய்தல் என்பதே அந்தத் தீர்மானமாகும்.

நவம்பர் மாதம் 16 ஆம் திகதி அந்தத் தீர்மானம் அறிவிக்கப்பட்டதும்,அரசியல் கைதிகள் அந்தத் தீர்மானத்தை ஏற்று ஒரு மாதத்துக்கும் மேலாக முன்னெடுக்கப்பட்டு வந்த அவர்களது உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தைக் கைவிட்டனர்.

அந்தத் தீர்மானம் அறிவிக்கப்பட்டு 10 நாள்களுக்குள் அவர்களுக்கான புனர்வாழ்வளிப்பு நடவடிக்கை தொடங்கப்படும் என அரசு அறிவித்தது.

இந்தத் தீர்மானம் காரணமாக கைதிகளின் போராட்டம் வெற்றி பெற்றது என்றே அப்போது கருதப்பட்டது. ஆனால், அரசு அறிவித்த தீர்மானத்தின்படி எதுவும் நடக்கவில்லை. இதனால்,நேற்றுக் கைதிகள் மீண்டும் அடையாளப் போராட்டம் நடத்தினர். கைதிகளின் உறவினர்களும் கடந்த வருடப் போராட்டத்தைப் போன்று, இந்தப் போராட்டத்தை ஊக்குவித்து சிறைச்சாலைகளுக்கு வெளியே போராட்டங்களை நடத்தினர்.

இந்தப் போராட்டத்துக்கு அரசு இனியாவது உரிய பதிலை வழங்க வேண்டும்.இந்த விடயத்தை இனியும் அரசால் இழுத்தடிக்க முடியாது.கைதிகளின் விடுதலை என்பது இப்போது சர்வதேசம் வரைப் பேசப்படுகின்றது. அவர்களின் விடுதலையை வலியுறுத்தி சர்வதேச மட்டத்தில் இன்று தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இது சர்வதேச ரீதியில் பேசு பொருளாக மாறியுள்ளதால் அரசு இந்த விவகாரத்தை இனியும் இழுத்தடிக்க முடியாது.

நல்லாட்சி என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு ஆட்சியைக் கைப்பற்றிய மைத்திரி-ரணில் கூட்டு ஓரிரு விடயங்களில் தடம் புரண்டாலும்,அனேகமான விடயங்களில் அந்த அரசு நல்லாட்சி என்ற கருத்திட்டத்துக்கு உட்பட்டு செயற்படுவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

அரசமைப்புத் திருத்தம்,சுயாதீன ஆணைக்கு குழுக்கள் மீள அமைப்பு போன்ற மகிந்தவின் ஆட்சியில் நினைத்துப் பார்க்க முடியாத பல மாற்றங்களை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது.இந்த அனைத்து மாற்றங்களும் நல்லாட்சியின் ஆணி வேர்களாக இருக்கின்றன.

அந்த வகையில்தான், இந்தக் கைதிகளின் போராட்டமும் அமைந்துள்ளது. அந்தப் போராட்டத்தை மதித்து இந்த அரசு ஏதாவது ஓர் ஏற்பாட்டின் கீழ் அவர்களை விடுதலை செய்வதுதான் ஜனநாயகமாகும்.

மகிந்தவின் ஆட்சியில் பல முறை போராட்டங்கள் நடத்தியும், கோரிக்கைகள் விடுத்தும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.இந்த ஆட்சியிலும் அப்படி நடந்துவிடக் கூடாது என்று கைதிகள் விரும்புகின்றனர்.

கைதிகளின் விடுதலை தொடர்பிலான மகிந்த தரப்பின் குற்றச்சாட்டுக்கள், விமர்சனங்களையெல்லாம் கணக்கில் எடுக்காது, மக்களுக்குத் தேவையான நல்லாட்சியைத் தொடர்ந்தும் உறுதிப்படுத்துவது அரசின் கட்டாய கடமையாகும். அதைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என்பதே மக்களின் விருப்பம்.

ஆகவே, இந்தப் போராட்டத்தை மதித்து கைதிகள் விடுதலை செய்யப்பட்ட வேண்டும் என்று ஒட்டுமொத்த தமிழர்களும் விரும்புகின்றனர்.

> வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஜனாதிபதியைச் சந்தித்து கைதிகளின் விடுதலையை வலியுறுத்தினார்.இது தொடர்பில் மீண்டு[ம்] தீர்மானம் ஒன்[று] எடுக்கப்படும் எ[ன] ஜனாதிபதி உறு[தி]யளித்தா[ர்]. இதற்கிடையில் தம[க்]குப் பொது மன்னி[ப்பு] வழங்க வேண்டு[ம்]. அல்லது பு[ன]ர்வாழ்வளி[க்]கப்பட்டாவது தா[ம்] விடுதலை செய்யப்[பட] வேண்டும் என[க்] கோரி அந்தக் கைதிகள் ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்கிரியால் ஏற்பட்ட தொல்லை



ஓர் ஊரில் ஒரு நொண்டி இருந்தான். அவன் அடுத்த ஊருக்குப் போய் ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டான்.

மறுநாள் தன் மனைவியைக் கூட்டிக் கொண்டு நடைப் பயணமாகத் தன்னுடைய ஊருக்குத் திரும்பினான். இருட்டி விட்டதால் இரவில் ஒரு சத்திரத்தில் மனைவியோடு தங்கினான்.

அந்தச் சத்திரத்தில் தங்கிருந்த போக்கிரி ஒருவன் அவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

காலையில் எழுந்து நொண்டியும் அவன் மனைவியும் புறப்படத் தயாரானார்கள். அப்பொழுது அந்த போக்கிரி, அவர்களைத் தடுத்து நிறுத்தி, "அவள் என் மனைவி; நீ எப்படி அவளைக் கூட்டிக் கொண்டு போகலாம்?" என்று கேட்டான்.

நொண்டியோ பயந்து, "நேற்று இவளை நான் கலியாணம் செய்துகொண்டு இன்று என்னுடைய ஊருக்கு அழைத்துப் போகிறேன். நீ வந்து உன் மனைவி என்று சொல்லுகிறாயே! இது என்ன அநியாயம்?" என்று கேட்டான்.

போக்கிரியோ அவனை விடுவதாக இல்லை. அந்த ஊர்த் தலைவரிடம் போய், நொண்டி முறையிட்டான். அவர் போக்கிரியிடம் "அவள் உன் மனைவி என்று சொல்வதற்கு சாட்சி உண்டா? ஆதாரம் என்ன?" என்று கேட்டார்.

"சாட்சியும் இல்லை ஆதாரமும் வேண்டாம் அவள் என் மனைவியேதான்" என்று வாதாடினான் போக்கிரி. தலைவர் என்ன செய்வது என்று திகைத்தார். பிறகு அந்தப் பெண்ணைப் பார்த்து "உன் கணவன் யார்?" என்று கேட்டார்.

அவர் கேட்டதும் எதுவும் அவளுக்குப் புரியவில்லை. அவள் நொண்டிக் கணவனையும், போக்கிரியையும், தலைவரையும் மாறி மாறிப் பார்த்து. திரு திருவென்று விழித்தாள்.

நொண்டி உடனே தலைவரிடம் " ஐயா அடுத்த ஊரில் இருக்கும் அவளுடையதாய் தந்தையரை வரவழைத்துக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். அவள் செவிட்டு ஊமை அதனால் அவள் எதுவும் புரியாமல் விழித்துக் கொண்டிருக்கிறாள்" என்றான்.

அவன் கூறியதை உண்மை என்று நம்பி மனைவியைக் கூட்டிக்கொண்டு போகுமாறு சொன்னார் தலைவர்.

ஊர்ப் பெயரைக் கெடுத்து வம்பு செய்த போக்கிரியைச் செம்மையாக உதைத்து அனுப்பினார்.



## கடுகதி

கடுகதி நான் கடுகதி நான்
காலமில்லாத கடுகதி நான்
காலை மாலை எனக்கில்லை
கவலைகள் ஏதும் இங்கில்லை
காலையிலே நான் எழுவேனே
கடுகதியாய் நான் செல்வேனே
காகிதச் சேவையும் எனக்குண்டு
கட்டுப் பொதிகளும் நான் சுமப்பேன்
கன்னியர் காளையர் பலர் வருவாரே – பின்
காதலராகிச் சிலர் செல்வாரே
கடமையுணர்வும் எனக்குண்டு
கடுகதியாய் நான் வந்தடைவேன்
கள்ளம் கபடம் எனக்கில்லை
காடுகள் எல்லாம் என் சொந்தம்
காப்புறுதியும் எனக்குண்டு
காலதேவனை வென்றிடுவேன்
கண்ணின் மணிகளாம் குழந்தைகளே
கடுகதியில் ஏற வாருங்கள்.
கடல் கடந்து ஈழம்
கடுகதியில் நம் சென்றடைவோம்



# வரலாற்றில் இன்றைய தினம்

1173 - இரண்டு நூற்றாண்டுகளை எடுத்த, பைசா கதீற்றலின் (தற்போதைய பைசா சரிந்த கோபுரம்) அமைப்பு வேலை தொடங்கப்பட்டது.

1907 - முதலாவது ஆண் சாரணர் பாசறை தெற்கு இங்கிலாந்து, பிறவுண் சீ தீவில் நிறைவடைந்தது.

1925 - இந்தியாவின் லக்னோவுக்கு அருகில் காகோரியில் ரயில் கொள்ளை ஒன்று இடம்பெற்றது.

1942 - ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்த இந்தியத் தலைவர் மகாத்மா காந்தி பிரித்தானியப் படைகளால் கைது செய்யப்பட்டார்.

1965 - மலேசியாவிலிருந்து, சிங்கப்பூர் விலக்கப்பட்டது. விருப்பமின்றிச் சுதந்திரமடைந்த ஒரேஒரு நாடாக இன்றுவரை சிங்கப்பூரே உள்ளது.

1971 - பிரித்தானியப் படைகளால் வட அயர்லாந்தில் மேற்கொள்ளப்பட்ட, டிமோர்சியஸ் எனும் பெயரிலான நடவடிக்கையில் நூற்றுக் கணக்கானோர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டதுடன் ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்தனர்.

1974 - வோட்டர் கேட் விவகாரத்தால் றிச்சாட் நிக்ஸன் அமெரிக்காவில் பதவி விலகிய முதல் ஜனாதிபதியானார். உப ஜனாதிபதி ஜெரால்ட் போர்ட் ஜனாதிபதியானார்.

1992 - 1991 ஜனவரி 11 இலிருந்து காணாமற்போன 422 பேர் தொடர்பான விசாரணையின்போது காணாமற்போன 47 பேரை ஆணைக்குழு சந்தித்தது.

- வட-கிழக்குப் போரை நிறுத்தக் கோரி கொழும்பில் முஸ்லிம் முன்னணியினர் ஆர்ப்பாட்டம்.

1993 - 38 வருட தேசியத் தலைமையை ஜப்பானின் தாராள ஜனநாயகக் கட்சி இழந்தது.

1995 - தீர்வுத் திட்டத்துக்கு ஆதரவு வழங்க ஐக்கிய தேசியக் கட்சி நிபந்தனை. நாடு பிளவுறாதிருக்க உத்தரவாதம் கேட்கிறது.

- தீர்வுத் திட்டம் தமிழருக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை எனக் குரு முதல்வர் வண.எஸ்.இமானுவல் அடிகளார் தெரிவிப்பு.

2006 - சமாதானத்தை ஏற்படுத்த றோட்டரிக் கழகம் தன்னாலான பங்களிப்பை வழங்கி வருவதாக மாவட்ட ஆளுநர் ஜி.டி. பொபி சேனவீர உதயனுக்குத் தெரிவிப்பு.

- குண்டு வீச்சில் மக்கள் சாவதை அரசு நியாயப்படுத்த முடியாதென முன்னாள் விமானப்படைத் தளபதியும், தற்போதைய விமானப்படைத் தளபதியின் தந்தையுமான ஏயர் மார்ஷல் ஹரி குணதிலகா தெரிவிப்பு.

2014 - மைக்கல் பிறவுண் எனும் 18 வயது ஆபிரிக்க அமெரிக்கர் மிஸோரி பேர்குசனில், பேர்குசன் பொலிஸ் அதிகாரியால் சுட்டுக்கொல்லப்பட்டதையடுத்து, நகரில் எதிர்பார்ப்பாட்ட மும் அமைதியின்மையும் ஏற்பட்டது.




# வர்ணம் தீட்டுவோம் வாங்க....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பௌத்த மன்னரை மதம் மாற்றிய மாணிக்கவாசகர்

அராலியூர் கலாபூசணம் வி.செல்வரத்தினம் ஜே.பி.



தமிழ் நாட்டிலிருந்து ஈழநாட்டுக்கு ஒரு சிவனடியார் யாத்திரையாக வருகை தந்திருந்தார். அவர் எங்கு சென்றாலும் அங்கே பொன்னம்பலம், பொன்னம்பலம் என்று சொல்லி நடராஜப் பெருமானின் பெருமையைக் கூறிக் கொண்டேயிருப்பார். இதனைக் கேட்ட பௌத்தர்கள் ஆத்திரம் அடைந்தனர். அப்போது இலங்கையில் பௌத்தர்களே ஆதிக்கம் செலுத்தி வந்தனர். சைவ சமயமாகிய பிறசமயப் பெருமையை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

அதனால் இந்த சிவனடியார் மீது மதத்துவேச புகார் கூறி தங்கள் மன்னனிடம் அழைத்துச் சென்றனர். சிவனடியார் பௌத்தமன்னனின் முன் நிற்கும்போது, பொன்னம்பலம் என்றே கூறி நடராஜரின் பெருமையைக் கூறிக் கொண்டு இருந்தார். அங்கே உடனிருந்த பௌத்த பிக்குமார்கள் இந்த மனிதன் பொன்னம்பலத்தின் மீது பித்தாகிப் போயிருக்கிறார், இவரின் பித்தத்தைப் போக்க வேண்டுமானால், நாமே சிதம்பரத்துக்குச் சென்று புத்தமதத்தின் பெருமையை அந்தத் தலத்திலேயே நிலை நாட்ட வேண்டும் என்று மன்னனிடம் கூறினார்கள்.

இதனை ஏற்று சிவனடியாரை அழைத்துக் கொண்டு, பௌத்த தலைமைக் குரு -பௌத்த மன்னன் ஆகியோர் இலங்கையிலிருந்து சிதம்பரத்துக்குப் போனார்கள். அவர்கள் மன்னனின் ஊமை மகளையும் அழைத்துச் சென்றார்கள்.

அந்த நேரம் சிதம்பரத்தில் தங்கியிருந்த மாணிக்கவாசகர் சுவாமிகளை பௌத்த குருவுடன் வாதிடும்படி, இறைவன் தில்லை வாழ் அந்தணர்களின் கனவில் தோன்றி, மாணிக்கவாசகரைக் கொண்டு பௌத்தர்களை வெல்லுமாறு பணித்தருளினார். உடனே தில்லை வாழ் அந்தணர்கள், மாணிக்க வாசகரை அழைத்து பௌத்தர்களுடன் வாதிடும் பொறுப்பைக் கொடுத்தார்கள்.

பின் பௌத்த குருவுக்கும் மாணிக்க வாசகருக்கும் இடையில் விவாதம் தொடங்கியது. மாணிக்கவாசகர் நேர்மையாக சைவத்தைப் பற்றி வாதிட்டுக் கொண்டிருக்க, அவருக்கு மறுமொழி தரமுடியாத பௌத்தகுரு, தன் கல்வித் திறமையை குறுக்கு வழியில் துஷ்பிரயோகம் செய்து, விதண்டாவாதமாக வாதிட்டார். பௌத்த குருவின் பொய்மையைக் கண்ட மாணிக்கவாசகர் தில்லையம்பலக் கூத்தனைப் பிரார்த்தித்தார். மறுகணம் விதண்டாவாதம் பேசிய பௌத்த குருவின் நாவிலிருந்து கலைமகள் நீங்கி விட்டாள். உடனே பௌத்த குரு வாய் பேச முடியாத ஊமையாகி விட்டார்.

அதைக் கண்டு திகைத்த பௌத்த மன்னன் "பேசியவரை ஊமையாக்கிய தாங்கள் பிறவி ஊமையான என் மகளைப் பேசவைத்தால், நாங்கள் அனைவரும் சைவர்களாகி விடுகிறோம்"-என்றான்.

மாணிக்கவாசக சுவாமிகள் உடனே பிறவி ஊமையாகிய அந்தப் பெண்ணைப் பல கேள்விகள் கேட்க, அந்தப் பெண் வாய் திறந்து பதில் கூறினாள். அனைவரும் கண்ணீர் மல்க மெய்யுருகி இறையருளைப் போற்றினர். பின் மாணிக்கவாசகர் கருணை கூர்ந்து பௌத்த குருவுக்கும் பேச்சுத்திறனைப் பெற்றுக் கொடுத்தார். அந்தக் கணமே, அரசனும், பௌத்த் குருவும் சைவ சமயத்தை நாடிச் சென்றார்கள். பின் ஈழம் சென்று அங்கே சைவத்தைப் பரப்பினர். அரசனின் குமாரியுடன் தாம் உரையாடியதை 'திருச்சாழல்' எனத் தொகுத்தார் மாணிக்க வாசகப்பெருமான்.

இந்த அற்புத திருவிளையாடலை மாணிக்கவாசகர் மூலம் நிகழ்த்திய இறைவனுக்கு, மாணிக்க வாசகருடைய தீந்தமிழின் பேரில் சுவை ஏற்பட்டது. எனவே இறைவன் அந்தணவுருவுடன் மாணிக்க வாசகரை அணுகி, தாம் பாண்டி நாட்டினர் என்று கூறி திருவாசகம் முழுமையையும் மாணிக்க வாசகர் சொல்ல, ஏடும் ஏழுத்தாணியும் கொண்டு எழுதி முடித்தார். பின் அடியில் மாணிக்கவாசகர் சொல்ல அழகிய சிற்றம்பலம் உடையான் எழுதியது என்று கையொப்பம் இடப்பட்டிருந்தது.

பின் அந்தணர் உருவில் இருந்த இறைவன் மாணிக்கவாசகரிடம் வந்து பாவையைப் பாடிய வாயால் கோவையைப் பாடுவீராக என்றார்.

ஞானப்பழமாய் கனிந்திருந்த மாணிக்க வாசகர் கோவையைப் பாடினார். மாணிக்க வாசகர் பாடப்பாட அந்தணர் தாமே அதனையும் ஏடும் எழுத்தாணியும் கொண்டு எழுதி திருவாசகத்தையும், திருக் கோவையையும் எழுதிய ஏடுகளையும் ஆலயத்தினுள் உள்ள சிற்சபையின் பஞ்சாட்சரப் படியில் மறைவாக வைத்து விட்டுச் சென்று மறைந்தருளினார்.

தில்லை வாழ் அந்தணர்கள் அவ் ஏடுகளை மாணிக்கவாசக அடிகளுக்குக் காட்டி, இந்தப் பாடல்களின் பொருள் கூற வேண்டினர்.

மாணிக்கவாசக சுவாமிகளும் அவர்களை அழைத்துத் தில்லைக்கூத்தப் பெருமானைக் காட்டி,இவரே பொருள் எனக் கூறி, அம்பலக் கூத்தனின் அடிமலரில் இரண்டறக் கலந்தருளினார்.

மேலும், மாணிக்கவாசகர் தில்லையம்பதிக்கு எழுந்தருளி நடராஜப் பெருமானை வணங்கி, கண்டபத்து, குலாப்பத்து, மூன்று அகவல்கள், குயில்பத்து, கோத்தும்பி, திருப்பூவல்லி, திருத்தோணோக்கம், திருத்தெள்ளேணம், திருப்பொற்சுண்ணம், திருப்பொன்னூசல், திருவுந்தியார், அன்னைப் பத்து, கோயில் பதிகம், கோயில் மூத்த திருப்பதிகம், எண்ணப் பதிகம், ஆனந்த மாலை, திருப்படையெழுச்சி, யாத்திரைப் பத்து முதலிய தேவாரங்களைப் பாடியருளினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிதானமும், பொறுமையும் மகிழ்ச்சியான பயணத்தை வழங்கக் கூடியன

வீதி-விதிகள் தொடர்பான அறிவுறுத்தல்கள், அறிவித்தல் பலகைகள், நெடுஞ்சாலைகளின் வீதி சமிக்ஞை இடுகைகள் என்பன தெளிவாகக் காணப்பட்ட போதும், வீதி விபத்துக்கள் குறைந்த பாடாக இல்லை. சிலர் புனரமைக்கப்பட்ட வீதிகளைக் குறை சொல்வதுடன், தமது தவறுகளையும், அலட்சியப்போக்குகளையும் கண்டுகொள்வதாகத் தெரியவில்லை. விபத்தை எதிர்கொள்ளும் எவரும் விபத்து ஏற்பட வேண்டும் என்ற எண்ணத்துடன் செயற்பட்டவர்கள் அல்ல. மாறாக, பயணிப்பதில் ஏற்பட்டுள்ள துரிதப்போக்கு வீதி ஒழுங்கைக் கடைப் பிடித்தலைப் பின்தள்ளியுள்ளது. இவற்றில் இன்னுமொரு மனதை வருத்தும் விடயம், பலர் வீதி ஒழுங்கு தொடர்பான அறிவின்றி வீதியில் வாகனம் செலுத்துவதுதான். வாகன அனுமதிப் பத்திரத்துக்காக விண்ணப்பிக்கும் பலர், சாரதி பயிற்சிப் பாடசாலைகள்மூலம் விண்ணப்பிக்கின்றனர். ஆனால் சிலர் நேரடியாக போக்குவரத்துத் திணைக்களமூடாக பதிவை மேற்கொள்கின்றனர். அனைவரும் பொதுப்பரீட்சைக்குத் தோற்றியபோதும், சாலை விதி முறைகள் என்பது ஏட்டுச்சுரைக்காயாகவே உள்ளது. எவ்வாறாயினும் சாரதி அனுமதிப்பத்திரம் பெறும் அனைவருக்கும் வாகனம் செலுத்தவது தொடர்பான அடிப்படை அறிவூட்டல் செயற்பாடுகள் அவசியமாகின்றன.

இரண்டு விநாடிகள் காத்திருப்பதால், இழப்புகள் ஏதும் ஏற்படப்போவதில்லை. இருந்தும் காத்திருக்கவும், கட்டுப்பாடான வேகத்தில் பயணிக்கவும் பலர் பின்நிற்கின்றனர். பயணிக்கும்போது வழிவிடும் உணர்வு மிகக்குறைவு, பாதசாரிகளின் அவதானமும், பாதுகாப்பும் அவர்கள் கைகளில் உள்ளன. ஒவ்வொருவரும் ஒவ்வொரு தேவைகளுடன் பயணிப்பர். சகவழிப்போக்கருடன் போட்டியிடுவதற்கு அல்ல என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்..? நிதானத்துடன் பயணிப்பது கட்டாயம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். "மற்றவர்களுக்கு வாகனம் செலுத்தத்தெரியாது என்ற நினைப்புடன் பயணிக்க வேண்டும்" என்று சொல்வார்கள். இதை உணர்ந்தும், புரிந்தும் கொள்ள வேண்டும்.

இந்த நிலையிலேயே சாலை விதிகளுடன், வாகனத்தின் நிலையும் விபத்துக்களில் செல்வாக்குச் செலுத்தக்கூடியது. வாகனங்களைச் சுத்தமாகப் பேணுவதுடன், வாகனப் பாகங்களின் தரத்தைப் பேணவேண்டும் என்பது கட்டாயம். பிறேக், ரயர், என்ஜின் என்பவற்றின் செயற்பாடுகளைப் பரிசோதித்து வாகனங்களை இயக்குவது சிறந்தது. எரிபொருள், ஒயில் என்பவற்றின் பயன்பாடு, தொடர்பிலும் ஒயிலின் சீரான மாற்றீடு தொடர்பிலும் வாகன செலுத்துனர் கவனம் செலுத்த வேண்டும். வாகனத்தில் உள்ள சிறிய பாதிப்பும், எமது அலட்சியப் போக்கும், வீதியில் பெரிய விளைவுகளை ஏற்படுத்தும்.

இன்று ஏற்படுகின்ற வீதி விபத்துக்கள் யாவும் மனிதர்களின் அலட்சியம் காரணமாகவே இடம்பெறுகின்றன என்பதைச் சொல்லத் தேவையில்லை. மிதமிஞ்சிய வேகம் வீதிகளில் பயணிப்பவர்கள் அனைவரையும் பாதிக்கின்றது. வீதிகளில் பயணிப்பதை அச்சம் தருகின்றதொரு நிகழ்வாக மக்கள் எண்ணும் அளவுக்கு நிலைமை மோசமான கட்டத்தை எட்டியுள்ளது.




சாலை விதிகளைப் பேணுவது கட்டாயம் என்பதைவிட, பயணிக்கும் எமக்குப் பாதுகாப்பானவை என்பதை உணர வேண்டும். ஒவ்வொரு சாலைப் பயணமும் புது அனுபவமாகவே அமைகின்றன. பொலிஸாருக்காகத் தலைக் கவசத்தை அணியாமல் எமக்காக, எம்மைப் பாதுகாக்க அணிவது சிறந்தது. ஆக, தேவையான இடத்தில் வேகமும், வேகத் தணிப்பும், அது சார்ந்த நிதானமும், பொறுமையும், மகிழ்ச்சியான பயணத்தைத் தரும் சாலையில் மாத்திரமன்றி வாழ்க்கையிலும் தான் சிந்தியுங்கள்.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** எதிலும் நேர்மை மிக்கவராகச் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அளப்பரிய வளர்ச்சி ஏற்படும். பணவரவு அதிகரிக்கும். உறவினர்களுக்கு உதவுவீர்கள். சுற்றுலா செல்ல பயணத் திட்டம் உருவாகும்.

**இடபம்:** மனதில் குழப்பம் உருவாகி மறையும். தொழில், வியாபாரத்தில் மிதமான பணவரவு கிடைக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர். தாயின் அன்பும், ஆசியும் நம்பிக்கையளிக்கும்.

**மிதுனம்:** உற்சாகமுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய முயற்சியில் ஈடுபட்டு இலாபம் காண்பீர்கள். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். உடல் நலனில் அக்கறை கொள்வீர்கள்.

**கடகம்:** அவமதித்தவரும் அன்பு பாராட்டுகிற நிலை உருவாகும். தொழில், வியாபாரத்தில் புதிய சாதனை படைப்பீர்கள். வருமானம் பெருகும். பிள்ளைகள் விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**சிங்கம்:** நண்பரின் குறை சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத குறுக்கீடு வரலாம். இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்களுக்கு ஓரளவு சலுகை கிடைக்கும். வாகனப் பயணத்தில் மிதவேகம் தேவை.

**கன்னி:** குடும்பப் பிரச்சினையை, பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாக நேரிடும். உறவினர்களால் உதவி உண்டு.

**துலாம்:** பேச்சில் நிதானம் தேவை. தொழில், வியாபாரத்தில் சுமாரான ஆதாயம் கிடைக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு கூடும். அரசு வகையில் ஆதாயம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** உறவினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்புக் கிடைக்கும். எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**தனுசு:** பரந்த மனப்பான்மையுடன் செயற்படுவீர்கள். நண்பர்களின் அன்பும், உதவியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். பிள்ளைகளின் நற்செயல் பெருமை தேடித்தரும்.

**மகரம்:** எவரிடமும் தற்பெருமை எண்ணத்துடன் பேசவேண்டாம். தொழில், வியாபாரத்தில் இடையூறு குறுக்கிடலாம். இலாபம் சுமாராக இருக்கும். பெண்கள், கணவருடன் விவாதத்தில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.


**கும்பம்:** பிறரது விமர்சனத்தை பொருட்படுத்த வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வருமானம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், பணிச்சுமையைச் சந்திப்பர்.

**மீனம்:** நீண்டநாள் விருப்பம், தற்போது நிறைவேறும். அதிக உழைப்பினால் தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பிள்ளைகள் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.




நான் வந்துட்டேன்னு சொல்லு. ஸ்கூல் போகாமல் திரும்பி வந்துட்டேன்னு சொல்லு.

யாராவது என் அம்மாவை பேஸ்புக்கில பார்த்தீங்கன்னா, நான் இன்னும் வாஸ்பேஷன்ல தான் இருக்கேன் என்டு சொல்லுங்க... பிளீஸ்



“மன்னா, எதிரி நாட்டு மன்னர் ஓலை அனுப்பியுள்ளார்.”



“அரண்மனைக்கு நாம் ஏற்கனவே ‘கொங்றீற்’ போட்டாச்சு. ஓலை வேண்டாம். திருப்பி அனுப்பிவிடும்.

**முனுசாமி:** ஏன் அந்தப் பையனை ரீச்சர் போட்டு அடிக்கிறாங்க?

**ராமசாமி:** கரும் பலகையிலை எழுதி போட்டத ரீச்சர் அழிச்சதும், இவன் கொப்பியில எழுதினதை அழிச்சிட்டானாம்.

**முனுசாமி:** ?????

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2 | | | | 7 | | |
| | | | | 9 | 7 | | | 3 |
| | | 4 | 3 | | | | | 5 |
| | 5 | | 6 | | 4 | | | |
| | | | | | | 1 | | 7 |
| 4 | | | | | | | 3 | |
| | 3 | | 1 | | | | | |
| | | | | | 5 | 8 | 6 | |
| 9 | 2 | | | 6 | 8 | | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை.

சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 2 | 8 | 5 | 9 | 1 | 3 | 4 | 6 |
| 6 | 1 | 3 | 8 | 4 | 7 | 2 | 5 | 9 |
| 4 | 5 | 9 | 2 | 3 | 6 | 1 | 8 | 7 |
| 3 | 6 | 4 | 7 | 1 | 8 | 9 | 2 | 5 |
| 9 | 7 | 1 | 4 | 2 | 5 | 8 | 6 | 3 |
| 2 | 8 | 5 | 3 | 6 | 9 | 4 | 7 | 1 |
| 8 | 9 | 6 | 1 | 5 | 4 | 7 | 3 | 2 |
| 5 | 4 | 2 | 9 | 7 | 3 | 6 | 1 | 8 |
| 1 | 3 | 7 | 6 | 8 | 2 | 5 | 9 | 4 |




பொலிவூட்டில் நடிகர்களுக்கு இணையான சம்பளத்தை எட்டிப் பிடித்துள்ளனர் பொலிவூட் நடிகைகள். இதில் முதலாவது இடத்தில் இருப்பவர் தீபிகா படுகோன். அவர் தற்போது நடித்து வரும் ‘ராணி பத்மாவதி’ படத்தில் நடிக்க 12 கோடியே 65 லட்சம் ரூபா சம்பளமாகப் பெற்றிருக்கிறார். ஹொலிவூட் படமான ‘டிரிபிள் எக்ஸ்’ படத்தில் நடிப்பதை தொடர்ந்து சம்பளத்தில் நான்காவது இடத்தில் இருந்த தீபிகா முதல் இடத்துக்கு வந்துவிட்டார்.
‘குயின்’ படத்துக்கு பிறகு கங்கணா ரனவத்தின் சம்பளம் 10 கோடிக்கு மேல் உயர்ந்து விட்டது. தனது அடுத்த படத்துக்கு அவர் 11 கோடி சம்பளம் பெறுகிறார். தமிழ்ப் படமான ‘தாம்தூம்’ படத்தில் நடிக்க கங்கணா வாங்கிய சம்பளம் 10 லட்சம் ரூபா என்பது குறிப்பிடத்தக்கது.
9 முதல் 10 கோடி சம்பளத்துடன் கரீனா கபூர் மூன்றாவது இடத்தில் இருக்கிறார். 8 முதல் 9 கோடி சம்பளத்துடன் பிரியங்கா சோப்ரா 4வது இடத்தில் இருக்கிறார். நவீன நடிகையர் திலகம் வித்யா பாலன் 6 முதல் 7 கோடி வரை வாங்கி 5வது இடத்தில் இருக்கிறார். அனுஷ்கா சர்மா, ஆலியா பட், [illegible] அடுத்த 5 இடத்தை பிடித்திருக்கிறார்கள். தென்னிந்தியாவில் நயன்தாரா 3 கோடியுடன் முதல் இடத்தில் இருக்கிறார். பொலிவூட் முன்னணி நடிகர்கள் 10 கோடி முதல் 30 கோடி வரை சம்பளம் பெறுகிறார்கள். அவர்கள் இடத்தை இப்போது நடிகைகள் பிடித்து வருகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவையான பொருள்கள்

3 கப் தேங்காய்ப் பால்
1/4 கப் அரிசி மா
11/2 கப் கோதுமை மா
1/4 கப் சோள மா
1/2 கப் சக்கரை
1 தேக்கரண்டி உப்பு
சிவப்பு வர்ணம் (உணவுக்காகப் பயன்படுத்துவது)
ரோஸ் எசன்ஸ் (தேவையானால்)



# அடுக்குப் பலகாரம்

*செய்முறை*

ரோஸ் எசன்ஸ், சிவப்பு வர்ணம், தவிர எல்லாப் பொருள்களையும் ஒன்றாகக் கலந்து கொள்ளவும்.

கலவையை இரண்டாகப் பிரித்து, ஒரு கலவையில் சிவப்பு வர்ணம், ரோஸ் எசென்ஸ் இரண்டையும் கலந்து கொள்ளவும். இன்னொரு கலவை வெள்ளையாகவே இருக்கட்டும்.

இது வேகவைக்கும் முறையில் செய்யக் கூடிய பலகாரம். ஆகையால் வேகவைக்கக்கூடிய தட்டில் கொஞ்சம் மாஜரின் அல்லதுஎண்ணெய்பூசிஅடுப்பில்வைக்கவும். இப்பொழுது வெள்ளையான கலவையில் இருந்து 2 மேசைக்கரண்டி அள்வு எடுத்து சூடாகியுள்ள தட்டில் ஊற்றவும். இதனை 6 முதல் 8 நிமிடங்களுக்கு விட்டு விடவும். பிறகு இதே அளவுபோல் சிவப்பு வர்ணக் கலவையை ஊற்றி வேகவிடவும். மீதமுள்ளகலவையையும்இதேபோல் மாற்றி மாற்றிச் செய்யவும். நீங்கள் விரும்பிய நிறம் பாவிக்கலாம். அடுக்குப் பலகாரம் தயார்.

## மீண்டும் சூடேற்றி உண்ணக் கூடாத உணவுகள்

**முட்டை:** அளவுக்கு அதிகமான வெப்பத்தில் இருக்கும்போது முட்டை, நச்சுத்தன்மையை பெற்றுவிடும். எனவே மீண்டும் சுட வைத்த, அவித்த முட்டைகள் அல்லது பொரித்த முட்டைகளை விட்டு விலகியே இருங்கள். இவை உங்கள் வயிற்றை பதம் பார்த்து விடும்.

**செலரி:** கீரையை போலவே செலரியையும் மீண்டும் சுட வைக்கக்கூடாது. அதற்குக் காரணம் இதிலுள்ள நைட்ரேட் வீதமே. பொதுவாக, சூப் மற்றும் அதை போன்ற உணவுகளில் தான் மக்கள் செலரியை சேர்ப்பார்கள். அதனால் மீண்டும் சுட வைக்கும் போது செலரியை நீக்கி விடுவது நல்லதாகும்.

**பீட்ரூட்:** நைட்ரேட்டின் அளவு அதிகமாக உள்ளதால், பீட்ரூட் நல்லதாக கருதப்படுகிறது. ஆனால் அதையே மீண்டும் சுட வைக்கும் போது, அது பலனளிக்காமல் போய் விடுகிறது.

## நாளை

ஆடி-26

புதன்கிழமை 10.08.2016
திதி: ஸப்தமி மு.ப.10.05 வரை
நட்சத்திரம்: சுவாதி பி.ப.03.07 வரை
ராகுகாலம்: 12.04-01.34 வரை
சுபநேரம்: 04.34-06.04 வரை



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 1000 | 700 | 700 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 400 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 700 | 700 | – |
| பாரை | 550 | 600 | 500 | 800 | 600 | 600 | 450 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 1000 | 500 | 700 |
| சீலா | 300 | 400 | 400 | 600 | 500 | 600 | 480 |
| விளை | 650 | 500 | 400 | 600 | 600 | 600 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 500 | 400 | 500 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 200 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | 500 | 600 | – | – |
| ஓரா | 400 | 350 | – | – | 500 | 400 | 400 |
| திரளி | 300 | 250 | 200 | 150 | 300 | – | 340 |
| நகரை | 250 | 350 | – | 250 | 400 | 150 | 370 |
| சூடை | 150 | 250 | 100 | 200 | 200 | 200 | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | – | – | – | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 400 | 400 | – |
| மதனம் | 150 | 200 | 180 | 400 | 300 | – | 300 |
| கொய் | 100 | 150 | 60 | 70 | 100 | 100 | – |
| பாலை | 400 | 200 | 250 | 400 | 500 | 400 | – |
| வாழை | 100 | 150 | 200 | 400 | 400 | 200 | – |



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 50 | 80 | 120 | 40 | 40 | 30 | 30 |
| கத்தரி | 80 | 80 | 60–120 | 100 | 60–80 | 80 | 90 | 80 |
| கரட் | 120 | 140 | 120–200 | 160 | 120–140 | 180 | 110 | 100 |
| மரவள்ளி | 100 | 90 | 80 | 80 | 80–100 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 50 | 40 | 60 | 30 | 40–60 | 100 | 100 | 100 |
| பாகல் | 100 | 120 | 150 | 160 | 100–120 | 160 | 240 | 200 |
| கருணைக்கிழங்கு | 150 | 120 | 140 | – | 80–100 | – | 120 | 180 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 85 | 90 | 80 | 90 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 60 | 80 | 80 | 90 | 70 | 100 | 90 | 70 |
| பூசணி | 60 | 60 | 60 | 80 | 60–70 | 100 | 70 | 100 |
| தக்காளி | 80 | 60 | 60 | 80 | 60–70 | 150 | 120 | 70 |
| வாழைக்காய் | 100 | 100 | 60 | 120 | 80–100 | 80 | 70 | 70 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 20 | 40 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 35 | 30 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 300 | 300 | 450 | 300 | 260 | 600 | 400 | 400 |
| புடோல் | 60 | 60 | 60 | 50 | 60 | 80 | 70 | 60 |
| கோவா | 120 | 120 | 100 | 140 | 120 | 80 | 90 | 120 |
| வெண்டி | 60 | 50 | 50 | 60 | 40–50 | 80 | 70 | 30 |
| போஞ்சி | 180 | 120 | 160 | 180 | 200–220 | 160 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 | 140 | 100–120 | 200 | 90 | 120 |
| தேங்காய் | 40 | 20 | 40 | 20–30 | 20–30 | 40 | 15–25 | 25 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 85 | 90 | 90–100 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 80 | 120 | 100 | 120 | 100–120 | 200 | 120 | 100 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 15 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 200 | 180 | 240 | 160 | 180 | 200 | 200 | 170 |
| இராசவள்ளி | 160 | 200 | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 100 | 150 | 150 | 120 | 100–120 | 400 | 200 | 120 |

## இது புதுசு





புதிய வடிவமைப்பில் தொலைக்காட்சி ஸ்ராண்டுகள் விற்பனை செய்யப்படுகின்றன. மரத்தால் ஆன இவை 6 ஆயிரம் ரூபா முதல் 25 ஆயிரம் ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரத்துக்குப் பங்களித்த யாழ். பெண்ணுக்கு வெள்ளி விருது

கொழும்பு, ஒக.9




இலங்கைப் பொருளாதாரத்துக்கு ஆற்றிய விசேட பங்களிப்புக்காக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு வெள்ளி விருது வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி தயானா சந்துரு என்பவருக்கே கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு சினமன் கிரான்ட் ஹோட்டலில் இந்த விருது வழங்கப்பட்டது.

நாட்டின் பொருளாதாரத்துக்குப் பங்களிப்பு வழங்கும் பெண் தொழில் முனைவோரைக் கௌரவிக்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான சம்பிக்க ரணவக்க, ரவி கருணாநாயக்க, பைசர் முஸ்தபா, ரிசாத் பதியுதீன், சுஜீவசேன சிங்க, சந்திராணி பண்டார ஆகியோர் கலந்துகொண்டனர்.

இலங்கைப் பொருளாதாரத்துக்குப் பெண்கள் ஆற்றும் விசேட பங்களிப்பைப் பாராட்டி 10 பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு இதில் விருதுகள் வழங்கப்பட்டன.

(த-422)

# 77ஆவது ஆண்டு நிறைவடைகையில் நவீன வளர்ச்சியில் இலங்கை வங்கி

**வணிகம்**

இலங்கையின் முதற் தர தேசிய வங்கியாக 1939 ஆம் ஆண்டு ஓகஸ்ட் முதலாம் நாள் உதயமாகியதுதான் நாளைய உலகை வெற்றி கொள்ளும் நவீனத்துவ வளர்ச்சியின் அடையாளமாக இன்று திகழ்ந்து கொண்டிருக்கும் இலங்கை வங்கி.

இது தோற்றம் பெற்ற காலத்தில் ஏறத்தாழ பதினாறு வங்கிகள் இயங்கிக் கொண்டிருந்தன. இவை அனைத்தினது சேவைகளும் அந்தக்காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழ்ந்த பெருந்தோட்டத்துறைக்கு வழங்கப்பட்டன. இதனால் கிராமியத் துறையை 80 வீதம் மேற்கொண்டிருந்த நாட்டில் இந்த வங்கிகளின் சேவைகள் கிராமியத்துறையைச் சென்றடையவில்லை. இதனைக் கருத்திற்கொண்ட அரசு 1961ஆம் ஆண்டு இலங்கை வங்கியை அரசுடைமை ஆக்கி அரச வங்கியாக மாற்றியது. இதனைத் தொடர்ந்து இலங்கை வங்கியின் கிளைகள், நகரங்கள் பட்டினங்கள் எனக் கிராமங்களுக்குக்கூட விஸ்தரிக்கப்பட்டு திறக்கப்பட்டன. இலங்கை வங்கியின் சேவைகள் விவசாயத்துறை, கைத்தொழில்துறை, வியாபாரத்துறை, சேவைத்துறை எனப் பலதரப்பட்டவர்களுக்கும் கிடைக்கலாயிற்று. இதனால் லட்சோபலட்சம் மக்கள் பயன் பெறலாயினர். எண்பதுகளில் இலங்கை வங்கி தேசத்தின் வங்கியாளர் என்னும் வர்த்தக நாமத்துக்கு உரியதாயிற்று. இது இன்று இலங்கையின் முதற்தர வங்கியாக தலைநிமிர்ந்து நிற்கிறது. இது குறித்து இலங்கை வங்கியின் இந்து மன்றச் செயலாளர் வீ.ஆர்.சுதாகரன் தெரிவித்ததாவது:

இலங்கையிலுள்ள அனைத்து நிதி நிறுவனங்களிலும் ஆகக் கூடுதலான சொத்துக்கள் (ட்ரில்லியனுக்கு மேல்) ஆகக் கூடுதலான வைப்புக்கள் (ட்ரில்லியனுக்கு மேல்) ஆகக் கூடுதலான கடன் வசதிகள் அதி உச்ச லாபம் என்பவற்றைக் கொண்ட தாக விளங்குகின்றது. இதனுடைய லாபத்தில் கணிசமான அளவு பகுதியை தனது சமுதாய நிறுவனப் பொறுப்பை வெளிப்படுத்தும் பல்வேறு நலனோம்புத் திட்டங்களையும் முன்னெடுத்துவருவது இதன் இன்னோர் சிறப்பம்சமாகும்.

ஆரம்ப நாள்களில் மனித சக்தியை முழுக்க முழுக்க நம்பியிருந்த நம் வங்கி காலத்திற்கு காலம் உலகியல் ரீதியில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப தன்னை இசைவுபடுத்தி அந்த மாற்றங்களை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடிந்தது. பூகோளமயமாதல், தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி என்பவற்றின் சவால்களையும் இலகுவாக இலங்கை வங்கி வெற்றி கொண்டது. இன்று வைப்புப் புத்தகங்களில் இருந்து டிஜிற்றல் வங்கியியல் வரையிலான தொழில்நுட்ப வளர்ச்சியை இன்று இலங்கையர்கள் பயன்படுத்தவும் அதன்மூலம் பயன்பெறவும் வழி சமைக்க முடிந்தது. அது மட்டு மன்றி தொழில்நுட்பத்தின் சமகால வளர்ச்சியின் அடையாளங் களாகத் திகழும் சீமாட் சோன் இணைய வழிவங்கிச் சேவை, மொபைல் வங்கிச் சேவை, சூழலுக்கு பாதுகாப்பான வங்கிச் சேவை போன்ற பல்வேறு சேவைகளை அறிமுகம் செய்து வங்கித் துறையில் புரட்சி யாளனாக விளங்குகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை, 77 ஆண்டுகள் துடிப்புடன் செயற்பட்டு நின்று நிலைப்பது என்பது சாதாரண ஒரு விடயம் அல்ல. இதனால் இந்த வேளையில் இரு சாராரை நினைவு கூர வேண்டியது எமது கடமை ஆகும்.

01.எமது முதுகெலும்பாகத் திகழும் எமது பெறுமதி சார் வாடிக்கையாளர்கள்.

02.வங்கிக்காக தம்மை முழுமையாக அர்ப்பணித்த ஓய்வூதியம் பெற்ற மூத்த வங்கியாளர்கள்.

வாடிக்கையாளர்கள் இன்றேல் நாம் இல்லை. இதனால் நாம் சிறந்த சேவைகளை அவர்களின் எதிர்பார்ப்புக்கு இணங்க வழங்கி வருகின்றோம். எமது நம்பிக்கை, நாணயம் என்பவற்றுக்கு மதிப்பளித்து எமக்கு பக்க பலமாக விளங்குகின்ற எமது பெறுமதிவாய்ந்த வாடிக்கையாளர்களை நாம் தலைவணங்கி நன்றி கூருகின்றோம்.

அதேவேளை, இலங்கை வங்கி இந்த அசுர வளர்ச்சியை அடைந்திருக்கின்றது என்றால் அதற்கு அச்சாணியாக விளங்கியவர்கள் எமது மூத்த வங்கியாளர்களே. அவர்களின் அர்ப்பணிப்பான சேவை களும் செயற்பாடுகளும் மதிப்பிட முடியாத பெறுமதிகளாகும். இன்று இலங்கை வங்கியில் கடமை புரியும் 8000க்கு மேற்பட்ட ஊழியர்கள் தொழில் திருப்தியுடன் கடமை புரிகின்றனர் என்றால், இதற்குக் காரணம் அவர்களின் வழிகாட்டல்கள், ஆற்றுப்படுத்தல்கள் வென்றெடுத்துத் தந்த சலுகைகள் என்பனவே அடிப்படை. இந்தவேளையில் இலங்கை வங்கி இந்து மன்றத்தின் செயலாளர் என்ற வகையில் வங்கியின் இரு கண்களாக விளங்குகின்ற வாடிக்கையாளர்கள் வங்கி ஓய்வூதியர்களின் சுபீட்சத்துக்கு இறையருளை வேண்டி நிற்கின்றேன் – என்றார்.




(து)

## பங்குச் சந்தை தகவல்கள்

CSE
COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை— யாழ் கிளை
147-2/3, K.K.S Road Jaffna - 212221455

| 8/8/2016 | | | |
|---|---|---|---|
| www.cse.lk | | | |
| [illegible] | | [illegible] | [illegible] |
| ASPI | -10.20 | 6,506.93 | 6,517.13 |
| S&P SL20 | 0.03 | 3,531.39 | 3,531.36 |
| வியாபாரப்புரள்வு | | 372,917,216 | 1,054,766,784 |
| உள்நாடு:- கொள்வனவு | | 237,170,848 | 636,860,224 |
| விற்பனை | | 278,548,672 | 803,875,264 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 135,746,352 | 417,906,560 |
| விற்பனை | | 94,368,520 | 250,891,536 |



| அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|
| டிஸ்டிலரீஸ் | DIST.N | 265 | 195,175 | 51,754,320 |
| ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | JKH.N | 146.4 | 150,217 | 22,075,240 |
| லயன் ப்ரெவரி சிலோன் | LION.N | 380 | 54,544 | 20,726,805 |
| [illegible] | TJL.N | 39.4 | 399,342 | 15,694,158 |
| சம்பத் வங்கி | SAMP.N | 248 | 59,878 | 14,852,134 |
| சைலன்றோன் லூப்ரிக்கன் | LLUB.N | 163 | 90,733 | 14,815,520 |
| அலுமக்ஸ் | ALUM.N | 18.9 | 770,551 | 14,429,461 |
| ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் | HHL.N | 92 | 123,810 | 11,389,417 |
| அக்சஸ் இஞ்சினியரிங் | AEL.N | 23.6 | 432,736 | 10,370,637 |
| ராயல் செராமிக்ஸ் | RCL.N | 118.8 | 73,445 | 8,738,777 |

அறிவித்தல்கள் -
பங்குலாபம்
தங்கொட்டுவ போர்சலைன் (DPL) பங்கு ஒன்றுக்கு Rs.0.25
விதுலங்கா (VLL)- பங்கு, ஒன்றுக்கு Rs.0.10
கண்டி ஹோட்டல் (KHC) - [illegible]

| சந்தைக் குறிகாட்டிகள் | |
|---|---|
| கம்பனிகள் | 294 |
| [illegible] | 225 |
| [illegible] | 13.4 |
| [illegible] | 1.5 |
| பங்குலாப விளைவு | 3 |

## நுட்பம்



# மனிதர்களைப் போன்ற குட்டிச் சிலைகள்

ஒளிப்படங்களை முப்பரிமாண குட்டிச் சிலையாக மாற்றும் தொழிநுட்பம் ஒன்று புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது.

தென் கொரிய தலைநகர் சியோலில் இந்த புதிய தொழிநுட்பத்தை பயன்படுத்தி ஒளிப் படங்களை முப்பரிமாண குட்டி சிலைகளாக வடிவமைக்கின்றனர்.

தற்போது பொதுவாக செல்பிகளுக்கு அடிமையாகிக் கிடக்கும் மக்களை இந்த புதிய தொழிநுட்பம் கவர்ந்திழுக்கும் விதமாக அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தொழிநுட்பத்தில் ஓர் அறையில் அமைக்கப்பட்டுள்ள 100 கமராக்கள் பல முறை படமெடுக்கிறன. பிறகு இந்த ஒளிப் படங்கள் கணினிக்கு சென்று குட்டி சிலையாக வடிமைக்கத் தேவையான வேலைப்பாடுகள் செய்யப்பட்டு முப்பரிமாண சிலை வடிவமைக்கப்படுகிறது.

இதன் விலை 100 டொலரில் இருந்து 300 டொலர் வரை விற்கப்படுகிறது. விலை அதிமாக இருந்தாலும் வாடிக்கையாளர் இதனை விரும்பி வாங்கிச் செல்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# பீட்சா ஏ.ரி.எம்.

அமெரிக்காவின் வடக்கு பகுதியில் உள்ள ஒகியோவின் சின்சினாட்டி சேவியா பல்கலைக்கழக வளாகத்தில், பீட்சா ஏ.ரி.எம். இயந்திரம் நிறுவப்படவுள்ளது

பொதுவாக ஏ.ரி.எம். மையங்களில் பணம் விநியோகிக்கப்பட்டு வருகிற நிலையில், இனி விரைவில் சுடசுட பீட்சா விற்பனை ஆக உள்ளமை அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

பிரான்ஸ் நிறுவனத்துடன் இணைந்து சேவியர் பல்கலைக்கழகம் இந்த மையத்தை அமைக்கிறது.

இங்கு வைக்கப்படும் ஏ.ரி.எம். இயந்திரத்தில் 70 டொலர் செலுத்தி பீட்சா பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸ்

செய்யப்பட்டவர்கள் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் தனியாக விசாரணை நடத்தி அதன் அறிக்கையை நீதிமன்றில் முற்படுத்துமாறும், மூன்று மாதங்களுக்குள் சந்தேகநபர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் சுன்னாகம் பொலிஸாருக்கு நீதிமன்றம் கடந்த தவணை பணித்திருந்தது.

நேற்று இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது விசாரணையின் முன்னேற்ற அறிக்கை எதுவும் நீதிமன்றின் முன்வைக்கப்படவில்லை.

இதையடுத்து சந்தேகநபர்களான பொலிஸாரை மூன்று வராங்களுக்குள் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு பதில் நீதிவான் ரி.கருணாகரன் உத்தரவிட்டார்.

சுன்னாகம் பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரியான சிந்தக்க பண்டார உள்ளிட்ட பொலிஸார் சிலரே இந்தக் கொலைக்குக் காரணமானவர்கள் என்று சாட்சிகள் நீதிமன்றில் தெரிவித்திருந்தனர். இதனடிப் படையிலேயே விசாரணை செய்து அவர்களைக் கைது செய்யுமாறு நீதிமன்றம் பணித்திருந்தது. நேற்றைய விசாரணையின்போது யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் சார்பில் பிரதம பொலிஸ் பரிசோதகர் ஒருவர் நீதிமன்றில் நேற்று முன்னிலையானார். ஆனால், நீதிமன்றில் அறிக்கை எதுவும் முன்வைக்கப்படவில்லை.

சுமணனின் இறப்புக்கு அவர் மின்சாரத்தால் தாக்கப்பட்டதும் வேறு வகைகளில் பொலிஸார் மேற்கொண்ட மோசமான சித்திரவதைகளுமே காரணமாக இருக்கலாம் என்றும் –

சித்திரவதையின் பின்னர் சுமணனைப் பொலிஸார் தமது ஜீப்பில் ஏற்றிச் சென்றதைத் தாங்கள் கண்டனர் என்றும் –

அதன் பின்னர் அவர் கிளிநொச்சியில் இருந்த குளம் ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார் என்று ஊடகங்களில்செய்திவெளியாகியதைத் தாம் அறிந்தனர் என்றும் –

அச்சம் காரணமாக இதுவரை அதனை யாரிடமும் கூறவில்லை என்றும் –

சுமணனுடன் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் சிலர் கடந்த 25ஆம் திகதி நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சி நடந்துகொண்டிருந்த 2011 ஆம் ஆண்டு நவம்பர் 21ஆம் திகதியை அண்மித்து இவர்கள் கைது செய்யப்பட்டனர். மாவீரர் தினம் கடைப்பிடிக்கிறார்கள் என்ற சந்தேகத்தில் தான் இவர்கள் கைது செய்யப்பட்டபோதும் இவர்கள் மீது பின்னர் திருட்டுக் குற்றஞ் சாட்டப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் முன்னர் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகவும் தற்போது கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகவும் உள்ள சிந்தக்க பண்டார உள்ளிட்ட பொலிஸ் குழுவினரால் சித்திரவதை செய்யப்பட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டது. காலில் ஆணி ஏற்றியும் மின்சாரத்தால் தாக்கியும் வேறு வகைகளிலும் சித்திரவதை செய்ததாக நீதிமன்றில் சுட்டிக்காட்டப்பட்டது. அவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் ஏனைய 4 பேருக்கும் எதிராக திருட்டுக் குற்றச்சாட்டு நீதிமன்றில் வழக்காகவுள்ளது. சுமணின் இறப்பில் குற்றஞ்சாட்டப்படும் பொலிஸ் அதிகாரி சிந்திக்க பண்டார தற்போது கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகப் பணியாற்றி வருகிறார்.

வழக்கு விசாரணை எதிர்வரும் 26ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

(உ-4)

## தமிழ்க்

முன்னெடுக்கின்றனர். முஸ்லிம் தலைவர்களின் கொள்கை மாற்றம் காரணமாகச் சில பிரதேசங்களில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க முடியாதுள்ளது.

முஸ்லிம் மக்களின் இன ஒற்றுமையை – சகோதரத்துவத்தை வெற்றிகொள்ள முடிந்தால் நாம் தொடர்ச்சியாகப் பயணிக்க முடியும். நாம் பார்த்த ஒரு விடயம் தான், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் சகோதரர்கள் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்ளாமல் அவர்கள் சார்பு மக்களுக்குச் செய்த சேவைகளை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்.

முஸ்லிம் மக்களாகிய நாம், அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்வதோடு எம் மக்களின் குறைகள் தொடர்பில் ஆராய்ந்து ஒன்றாக இணைந்து செயற்பட்டு அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். முஸ்லிம் தலைவர்களுக்கு இடையில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும். அதன் மூலம் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் – என்றார்.

(த-5)

## ஜனாதிபதியின்

குறிப்பிட்டார். அவர் தெரிவித்ததாவது:

பாதயாத்திரையை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளுக்கு மாறாக முன்னெடுக்கவில்லை. பாதயாத்திரையின் ஊடாகச் சுதந்திரக் கட்சியின் கொள்கையைக் காப்பாற்றியுள்ளோம். நல்லாட்சி என்றார்கள். ஜனநாயக நாடு என்றார்கள். நாட்டின் தலைவர் தொடர்பில் யார் வேண்டும் என்றாலும் எந்தவிதமான கருத்துக்களையும் கூற முடியும் என்றும் குறிப்பிட்டார்கள். பாதயாத்திரையில் பங்கேற்போர் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமாயின், வாழ்க்கை முழுவதும் அதனை முன்னெடுக்க வேண்டிய தேவை ஏற்படும். எனினும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமாயின் அது ஜனாதிபதியின் கொள்கைக்கு மாறான விடயமாகவே அமையும் – என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச, கிறிஸ் நிறுவனம் ரக்பி விளையாட்டுக்காக வழங்கிய நிதியை மோசடி செய்த குற்றச்சாட்டுக்காக ஜூலை 11 ஆம் திகதி பொலிஸ் நிதி மோசடிப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

நிதி மோசடிக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட அவர், ஜூலை 19 ஆம் திகதி கொழும்பு புறக்கோட்டை நீதிவான் லங்கா டி ஜயரத்னவினால் பிணையில் விடுதலை செய்யப்பட்ட நிலையில் நேற்று மீண்டும் புறக்கோட்டை நீதிமன்றத்தில் முன்னிலையாகினார்.

நிதி மோசடிச் சட்டத்தின் கீழ் நாமல் ராஜபக்சவுக்கு எதிராகப் பொலிஸ் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணை அறிக்கை, சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகப் பொலிஸ் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவு நீதிமன்றத்தில் தெரியப்படுத்தியது.

வழக்குத் தொடர்பில் மேலும் சிலரின் வாக்குமூலத்தைப் பதிவு செய்ய வேண்டியுள்ளதாகவும் மேலும் நான்கு பேரை இந்த வழக்கில் சந்தேக நபர்களாகப் பெயரிடுமாறும் பொலிஸார் நீதிமன்றத்தில் கோரியுள்ளனர்.

விடயங்களை விசாரணை செய்த புறக்கோட்டை நீதிவான் லங்கா டி ஜயரத்ன, ஒக்ரோபர் 31 ஆம் திகதிக்கு முன்னர் இந்த விசாரணைகளின் முன்னேற்றங்கள் குறித்த அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு, பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவினருக்கு உத்தரவிட்டார்.

(த-5)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



### இரவீந்திரன் ஹேமாவதி (சாளி)


| உதிப்பு (மலேசியா) | உதிர்வு (நவாலி) |
| --- | --- |
| 2002 . 03 . 24 | 2013 . 08 . 13 |

ஆண்டுகள் மூன்று சென்றதுவோ
அகலுமா உங்கள் பிரிவின் சோகம் உங்கள் நினைவின் பாசம்
எங்கள் நினைவை விட்டு மறையாது

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### தம்பிப்பிள்ளை மயில்வாகனம்



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 14 . 02 . 1926 | 07 . 08 . 2016 |

அளவெட்டி வடக்கு, செட்டிச் சோலையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை மயில்வாகனம் 07.08.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை – இளையாச்சி தம்பதியரின் அன்பு மகனும் அளவெட்டி தெற்கு, தம்மளையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா – பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற கண்ணம்மாவின் அன்புக் கணவரும் செந்தில்வாசன் (பொறியியலாளர் – ஆஸ்திரேலியா), சந்திரவதனா, செல்வநேசன்(ஜேர்மனி), விமலயோகினி (ஜேர்மனி) காலஞ்சென்ற பார்த்திபராஜ ஆகியோரின் அன்புத் தந்தையும் கௌசல்ஜா(கணக்காளர் – ஆஸ்திரேலியா), முருகதாஸ்(ஓய்வு பெற்ற கிராமஅலுவலர் – அளவெட்டி மத்திJ/216), லதா(ஜேர்மனி), சுரேந்திரன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் மகிழன்(B.Sc ஆசிரியர் – பாரதிபுரம் மகாவித்தியாலயம் , கிளிநொச்சி), கிருஷ்ணா(போக்குவரத்து முகாமைத்துவம் – சமுத்திர பல்கலைக் கழகம், கொழும்பு), காவிஜாகண்ணம்மா(ஆஸ்திரேலியா), பவித்திரன், பிரியங்கா, பிரவீந் (ஜேர்மனி), கௌதமன், அபிலாஷ், அஸ்விந்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ் சென்ற நாகலிங்கம் மற்றும் இராசம்மா, இராசரத்தினம்(பண்டிதர் – இருபாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, பண்டிதர் நாகலிங்கம் மற்றும் இராசலட்சுமி(இருபாலை), காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் இராசரத்தினம், தனபாக்கியம், சிவபாக்கியம், அன்னம்மா, பர்வததேவி மற்றும் கயிலாயதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.08.2016 புதன்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கேணிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செட்டிச்சோலை,
அளவெட்டிவடக்கு, அளவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஞானமலர் (மாலா) சுவாமிநாதன்



பிறப்பு 1949.06.07 இறப்பு 2016.08.07

நவாலியைப் பிறப்பிடமாகவும் கச்சாய் வடக்கு கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானமலர் சுவாமிநாதன் கடந்த (2016.08.07) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுவாமிநாதனின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் – ஞானப்பூ தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை – ஜெயசீலி தம்பதியரின் அன்பு மருமகளும் பாஸ்கரதயாளன்(சாரதி), சுகிர்தசீலா, உதயகுமார்(தேங்காய் வியாபாரி), சுகிர்தலூசியா, காலஞ்சென்ற உதயபிரதீபன் மற்றும் சுகிர்தயசிந்தா(பட்டதாரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுமதி, யோண்ரூசோ(மின் இணைப்பாளர்), வெலஸ்ரீனா, அன்ரனிராஜி(ராஜி ரெக்ஸ் – கொடிகாமம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் திசாளினி, தினுசன்(டோகா), நிதர்சனா, கம்சாயினி, கன்யூட், சஜீன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (2016.08.09) செவ்வாய்க்கிழமை மு.ப 11 மணிக்கு கச்சாய் தூயபேதுறுவானவர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு கச்சாய் தூய பேதுறுவார் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கச்சாய் வடக்கு,
கொடிகாமம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## பொன்னையா அம்பிகாபதி

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் புகையிரதநிலைய வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா அம்பிகாபதி 07.08.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா – அன்னம் தம்பதியரின் அன்பு மகளும் தருமலிங்கம்(கனடா) காலஞ்சென்றவர்களான பரஞ்சோதி அம்மா, நாகம்மா, பாலகிருஸ்ணன், துரைரத்தினம் மற்றும் வசந்தமலர், சுகிர்தமலர் ஆகியோரின் சகோதரியும் ரமேஸ், சபேசன், மகேசன், ரஜனி, ரமணி, சந்திரராஜா, சந்திரகுமார், சந்திரன், ரஞ்சி, ஜெயா, அகல்யா, பவித்திரா ஆகியோரின் மாமியும் சண்முகப்பிரியா, மயூரப்பிரியா ஆகியோரின் பெரிய தாயாரும் கவின்யாவின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2016) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணிக்கு கொக்குவில் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொக்குவில் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாராட்டி வாழ்த்துகிறோம்

லயன்
சுப்பிரமணியம் முரளிதரன்
(SLAS, Bsc Hons, MA, LLB
ATTORNEY AT LAW)

யாழ். மாவட்ட மேலதிக செயலாளராக (காணி) கடமையாற்றி வருபவரும் எமது மல்லாகம் தெல்லிப்பழை அரிமாக்கழக உறுப்பினருமான லயன். சு. முரளிதரன் அவர்கள் (03.08.2016) அன்று உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக பதவிப்பிரமாணம் செய்தமையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மல்லாகம், தெல்லிப்பழை அரிமாக்கழகம்



பாராட்டி வாழ்த்துகிறோம்



திரு. சுப்பிரமணியம் முரளிதரன்
(Bsc,MA Population Development Studies) LLB)

முன்னாள் சண்டிலிப்பாய் பிரதேச செயலர், இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தரும், யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருமான (காணி) திரு. சுப்பிரமணியம் முரளிதரன் (Bsc,MA Population Development Studies) LLB) அவர்கள் (03.08.2016) புதன்கிழமை உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் மேற்கொண்டதையிட்டு அவர்கள் சேவையில் மேலும் பதவி உயர்வுகள் பெற்று சீரும் சிறப்புடன் வாழப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சாவல்கட்டு,
ஆனைக்கோட்டை.

சாவல்கட்டு
பொதுஅமைப்புக்கள்



பனை அபிவிருத்திச் சபை
PALMYRAH DEVELOPMENT BOARD

சிறைச்சாலைகள்மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு
Ministry of prison Reforms, Rehabilitation, Resettlement and Hindu Religious Affairs

**Vacancy Announcement (Temporary Basis)**

Applications are invited from citizens of the Democratic Socialist Republic of Sri Lanka for the following post of Palmyrah Development Board

Employee Category:
**Management Assistant (Technological)**

**Qualifications**

**1. Educational**

a) Having passed G.C.E.(O/L) examination in six subjects in one sitting with credit passes for four subjects including
   i) Sinhala /Tamil
   ii) Mathematics

b) Having achieved the performance level required to follow a tertiary education course by passing the required number of subjects other than the "General Paper" at the G.C.E. (A/L) Examination.

**2. Vocational:**

Having successfully completed a Diploma or Certificate Course not below the N.V.Q. Level 5, conducted by a Recognized Institute of Technological Training in the relevant field.

Applicants should forward their curriculum vitae with the copies of certificates and testimonials together with the names and address of two non-related referees under registered post to reach Chairman, Palmyrah Development Board, National Housing Secretariat Authority Building, 1st Floor, Kandy Road, Jaffna on or before 15th August,2016. Late applications will not be considered.

Please mark the post applied for on the top left hand corner of the envelope.

Chairman
Palmyrah Development Board
Jaffna.


# கடிதத்தின் அசல் பிரதியையே நாம் கிழித்து எறிந்தோம்

## சு.கவின் குருணாகல் மாவட்ட உள்ளூராட்சி உறுப்பினர்கள் தெரிவிப்பு



கொழும்பு, ஓக.9

நாம் கிழித்தது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்கவின் கையொப்பத்துடனான கடிதத்தின் அசல் பிரதியையே.

இவ்வாறு குருணாகல் மாவட்ட உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் தெரிவித்தனர்.

குருணாகலில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

நாம் கிழித்தது எமக்கு வந்த நகல் பிரதி என சிலர் கருத்துத் தெரிவித்திருந்தனர். அதில் எந்தவித உண்மையும் இல்லை. நாம் தெளிவாகச் சொல்கின்றோம். எமக்கு அனுப்பும் ஒழுக்காற்று விசாரணைக்கான கடிதத்தையும் கிழித்து எறி வோம். கட்சியிலுள்ள துமிந்த திஸாநாயக்கவுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணையை முன்னெடுத்து விட்டு, ஏனையவர்களுக்கான ஒழுக்காற்று விசாரணை குறித்து கவனம் செலுத்த வேண்டும் - என்றனர்.

சு.க.வின் வேட்பாளர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்கு அனுப்பப்பட்ட கடிதத்தை ஊடகங்களின் முன்னால் கிழித்து எதிர்ப்புத் தெரிவித்தமை தொடர்பில் இவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

# பவுசர் மோதி காயமடைந்த முதியவர் சாவு

தென்மராட்சி, ஓக. 9

கைதடிச் சந்தியில் பவுசரினால் மோதுண்டு காயமடைந்த முதியவர் கடந்த சனிக்கிழமை சாவடைந்துள்ளார். முதியவரை மோதிய பவுசர் சாரதியைப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியுள்ளனர். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கைதடிப் பகுதியில் கடந்த மூன்றாம் திகதி காலை சைக்கிளில் வந்த கைதடி மேற்கைச் சேர்ந்த கந்தையா குமாரச்சந்திரன் என்னும் முதியவர் பவுசர் மோதிக் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இவர் கடந்த ஆறாம் திகதி சனிக்கிழமை மாலை சிகிச்சை பயனின்றி சாவடைந்துள்ளார். (த-5-9)

# மாற்றுக் காணிகளுக்கான உறுதிப்பத்திரம் 58 பேருக்கு

வடமராட்சி கிழக்கு கரையோரப் பகுதியில் வாழ்ந்த மக்களில் 58 பேருக்கு மாற்றுக் காணிகளுக்கான உறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

இயற்கை இடர்கள் குறிப்பாக சுனாமி காரணமாகக் கடற்கரையோரத்தில் குடியிருந்த மக்கள் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தப்பட்டனர். கடற்கரையில் இருந்து 300 மீற்றருக்கு அப்பால் இந்த மக்கள் குடியமர்த்தப்பட்டனர்.

குடியமர்த்தப்பட்ட மக்களில் 58 பேருக்கு மாற்றுக்காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் தெரிவித்தார். (த-5-17)


கடைவாடகைக்கு உண்டு

யாழ். வேம்படி மகளிர் கல்லூரிக்கு எதிரில் கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு - 077 9687677



வாடகை அடிப்படையில்
வான் பெறுவதற்கான கேள்வி விலை
கோருதல் மாகாணக் கல்வித்
திணைக்களம்,வட மாகாணம்

மாகாணக் கல்வித் திணைக்களப் பாவனைக்கு உற்பத்தி ஆண்டு 1998 அல்லது அதற்கு பிற்பட்ட வாகனங்கள் (வான்) மூலதன வேலைகளை மேற்பார்வை செய்வதற்கு 05 மாவட்டங்களுக்கு ஒவ்வொன்றும் மற்றும் மாகாணத்திற்கு ஒன்றுமாக மொத்தம் 06 வாகனங்கள் (Van) தனித்தனியாக வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு ஆர்வமுடைய வாகன உரிமையாளர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

இவ் விடயம் தொடர்பில் மேலதிக விவரங்களினை மாகாணக் கல்வித் திணைக்களம் மருதனார்மடம், சுன்னாகம் எனும் முகவரியில் அமைந்துள்ள எமது அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிட்டு 09.08.2016-21.08.2016 வரை அலுவலக நேரத்தில் நிதிக்கிளையில் ரூபா 500.00 (மீள்பெறாத தொகையினை) செலுத்தி கேள்விப் பத்திரத்தினைப் பெற்று 2016.08.22 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னராக எமக்குக் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ பதிவுத்தபாலிலோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் (பிரதம கணக்காளர், மாகாணக் கல்வித் திணைக்களம், வட மகாணம்) 021 2242804

தலைவர்/மாகாணக்கல்விப் பணிப்பாளர்,
திணைக்கள பெறுகைக்குழு,
மாகாணக்கல்வித் திணைக்களம், வடமாகாணம்,
மருதனார்மடம், சுன்னாகம்.



தவறிவிட்டது

திரு.சோ. ஈழநேசன் என்பவருடைய மோட்டார் சைக்கிள் ஓட்டும் அனுமதிப்பத்திரமும் , காப்புறுதி அட்டையும், ஒரு சிறிய கறுப்பு நிற பேர்சுடன் 06.08.2016 அன்று மட்டுவில் அல்லது மீசாலையிலிருந்து கைதடியூடாக மாவிட்டபுரம் செல்லும் போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள். தந்துதவவும் சன்மானம் வழங்கப்படும்.

077 454 6869,021 222 8711



சேவை விவரம்

மிளகாய், தானியங்கள், உறைப்பில்லாமல் சரக்குத்தூள், கோப்பி, சீயாக்காய், ஈரஅரிசி,ஈரஉழுந்து, தேங்காய் எண்ணை, நல்லெண்ணை, மஞ்சள், மாசி என்பன அரைத்தல், மிளகாய் வறுத்தல், உழுந்து உடைத்தல், பயறு வறுத்து பாதியாக்குதல், கச்சான் கோது நீக்குதல், மா அவித்தல், வறுத்தல் மேலும் அனைத்து வேலைகளும் ஒரே இடத்தில் செய்து தரப்படும்.

அரிசிமா (75/-), ஆட்டாமா (100/-), அவித்தமா(100/-) மேலும் தேங்காய் எண்ணை, நல்லெண்ணை என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: பிருந்தா அரைக்கும் ஆலை 246, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Tele : 077 9912304
(சத்திரச்சந்தியில் இருந்து கொட்டடிக்கு போகும் வழியில் இடப்பக்கமாக சிறிசினராம் கடைக்கு அருகில்)
* வேலைக்கு ஆள்கள் தேவை.



VACANCY
Receptionist (Female)

யாழில் உள்ள பிரபல நிறுவனத்திற்கு பெண் வரவேற்பாளர் உடன் தேவை.

Salary 15,000/=

தொடர்பு: 076 5450539



Great Way

எமது நிறுவனத்திற்கு நிர்வாகரீதியானஉத்தியோகத்தர்களும் சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்களும் முகாமைத்துவம் சம்பந்தமான வேலைகளுக்கான வெற்றிடம் உள்ளன.

10ஆம்,11ஆம் திகதிகளில் காலை 9 மணிமுதல் 12 மணி வரை நேர்முகப் பரீட்சை (Intreview) நடைபெற உள்ளது.

No-28
3ஆம் குறுக்குத்தெரு.
யாழ்ப்பாணம்.
077 077 1377, 076 864 3505


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வற்' அதிகரிப்பு வாக்கெடுப்பு மைத்திரிக்கு அக்கினிப் பரீட்சை

## இப்படிச் சொல்கிறார் உதய கம்மன்பில

கொழும்பு, ஓக. 9

'வற்' வரி விதிப்பு தொடர்பிலான வாக்கெடுப்பு ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் ஓர் அக்கினிப் பரீட்சையாகவே அமையும், என்று நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அதேநேரம் 'வற்' வரி விதிப்புத் தொடர்பான வாக்கெடுப்பின்போது எதிர்க்கட்சியும் மக்களின் நலன் கருதி அரசிற்குச் சார்பாக வாக்களிக்கக் கூடாது எனவும் அவர் தெரிவித்தார்.

புறகோட்டை பாகொடையில் அமைந்துள்ள தூய்மையான ஹெல உறுமயக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றினார் அவர்.

"ஜனாதிபதி மக்கள் மீது அதிக சுமையைச் செலுத்தும் 'வற்' வரி விதிப்பை அனுமதிக்கப்போவதில்லை, அவ்வாறாயின் அவரின் தலைமைத்துவத்தின் கீழ் இருக்கும் சுதந்திரக் கட்சியினரும் 'வற்' வரிவிதிப்புக்கு ஆதரவாகக் கையுயர்த்தக் கூடாது. இந்த நிலையில் ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் 'வற்' வரி விதிப்புத் தொடர்பிலான வாக்கெடுப்பு ஓர் அக்கினிப் பரீட்சையாகவே அமையும்" என அவர் மேலும் தெரிவித்தார். (உ-21)

## பெண் பணியாளர் படுகாயம்

வெடிபொருள் வெழித்ததால்கண்ணிவெடிஅகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தின் பெண் பணியாளர் ஒருவர் படுகாயமடைந்தார். அவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை முகமாலைப் பகுதியில் இடம்பெற்றது.

கிளிநொச்சி-முறிப்புப் பகுதியை சேர்ந்த கண்ணம்மா என்பவரே இதில் படுகாயமடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

முகமாலைப் பகுதியில் வெடி பொருள்களை அகற்றும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக வெடிபொருள் ஒன்று வெடித்த தாகவும், இதனாலேயே அவர் படுகாயமடைந்தார் எனவும் கூறப்பட்டது. காயமடைந்த அவர் உடனடி யாக யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

எவ்வகையான பொருள் வெடித் தது என்பது கண்டுபிடிக்கப்பட வில்லை என்றும், அது தொடர்பான ஆய்வுகள் இடம்பெறு கின்றன எனவும் ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தினர் தெரிவித்தனர். (த-21)

## வான்முட்டும்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மலர்கள் மழை போல் பொழிய சரியாக முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றப்பட்டது.

நேற்று அதிகாலை தொடக்கம் நண்பகல் வரை பக்தர்கள் அடியளித்தும் அங்கப் பிரதிஷ்டை செய்தும் கற்பூரச்சட்டி எடுத்தும் தமது நேர்த்தியைப் பூர்த்தி செய்தனர். காலைப் பூசைகள் முடிவடைந்த பின்னர் சுவாமி உள்வீதி உலா இடம்பெற்றது. (த-5-17)

## போராளிகளுக்கு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் அமைச்சரவையின் கவனத்துக்குக் கொண்டு வந்து சம்பந்தப்பட்டவர்களுக்குத் தண்டனை பெற்றுக் கொடுக்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான நடவடிக்கைகளைச் செய்யவும் முடியும் என்று குறிப்பிட்டார். (த-5)

## பன்னாட்டுக்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன் தினம் கருத்துக்கள் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன என்று கொழும்பு ஊடகம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

தேசிய அரசு தீர்வு தொடர்பில் சிந்தித்து அதற்கமைய நகர்ந்து கொண்டுள்ளது. வடக்கு மாகாண முதல்வரின் செயற்பாடுகளும் அவர் முன்வைக்கும் கருத்துக்களும் மிகவும் பாரதூரமானது. எவ்வாறு இருப்பினும் தேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும்போது புதிய நகர்வுகளைக் கையாளும்போதும் தேசிய பாதுகாப்புக்கு அமையவே தீர்வுகள் சாத்தியமாகும்.

அடுத்த ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவாக் கூட்டத் தொடர் ஆரம்பமாகும் முன்னர் நாம் சகல பிரச்சினைகளையும் முடிவுக்கு கொண்டு வந்துவிடுவோம். இதனால் பன்னாட்டுக் கடிவாளத்தில் இருந்து இலங்கை விடுபடும் – என்றார். (த-5)

## பசிலுக்குப்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் வாழ்வின் எழுச்சித் திணைக்களத்துக்குச் சொந்தமான சுமார் 36 மில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட நிதியை அரசியல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்டு பசில் ராஜபக்ச ஜூலை மாதம் 18 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். அவரது பிணை மனு நேற்று அழைக்கப்பட்டபோது கருத்துக்களைத் தெரிவித்த அரச சட்டத்தரணி, பசில் ராஜபக்சவின் பிணை வேண்டுகோள் சம்பந்தமாக ஆட்சேபனைகள் சமர்ப்பிக்கப்படமாட்டாது என்று தெரிவித்தார். அதனை ஏற்றுக் கொண்ட நீதிபதி, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சவை பிணையின் கீழ் விடுதலை செய்யுமாறு உத்தரவு பிறப்பித்தார். (த-5)

## ஐரோப்பிய

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் வழங்கும்படி பலகட்டப் பேச்சுகளை இலங்கை அரசு ஐரோப்பிய ஒன்றியத்துடன் மேற்கொண்டு வந்தது. இதற்காக உடன்படிக்கையும் கடந்த ஜூன் மாத இறுதியில் பிரஸ்சல்ஸில் கைச்சாத்திடப்பட்டது. அதன்போது ஜி.எஸ்.பி. வரிச் சலுகையை மீள இலங்கைக்கு வழங்க 58 நிபந்தனைகளை ஐரோப்பிய ஒன்றியம் விதித்தது.

இதில் முக்கியமான விடயம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி தேசிய பாதுகாப்புக்கு உரித்தான புதிய சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதாகும். இல்லாவிட்டால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் முக்கிய சில சரத்துகளை நீக்குமாறு பணிப்புரை வழங்கப்பட்டது.

அடுத்த மாதம் மீண்டும் ஜி.எஸ்.பி. வரிச்சலுகை இலங்கைக்கு கிடைக்கும் என்று அரசு திட்டவட்டமாக அறிவித்து வரும் சூழலிலேயே ஐரோப்பிய ஒன்றியம் இவ்வாறு அழுத்தத்தைக் கொடுத்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்தக் கோரிக்கையை அரசு கட்டாயம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்.

இதன் காரணமாக இந்த மாத இறுதியில் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலான புதிய சட்டம் தொடர்பில் அரசு விளக்கமளிக்குமென இராஜதந்திர வட்டாரங்களில் மேலும் அறிய முடிகின்றது. (த-5)

## லசந்த

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன் பின் சில வாரங்களில் லசந்த கொலைசெய்யப்பட்டார். ஊடகவியலாளர் லசந்த இறப்பதற்கு முன்னர் அவருக்கு வந்த கொலை அச்சுறுத்தல் தொடர்பாக என்னிடம் தெரிவித்திருந்தார்" இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்தார். (உ-21)



## மரண அறிவித்தல்கள்

### செல்வி முருகேசு கேதீஸ்வரி
(கேதா)



பிறப்பு 13 . 10 . 1960 — இறப்பு 07 . 08 . 2016

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் இல. 870, திருநகர், கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட செல்வி முருகேசு கேதீஸ்வரி (கேதா) கடந்த (07.08.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு-பார்வதி தம்பதியரின் அன்பு மகளும் ராஜேஸ்வரி(லண்டன்), யோகராஜா (ஆஸ்திரேலியா),யோகேஸ்வரி (ஓய்வு பெற்ற குடும்பநல உத்தியோகத்தர்)ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராசலிங்கம்(லண்டன்), கலாதேவி(ஆஸ்திரேலியா), பசுபதிப்பிள்ளை (மாகாணசபை உறுப்பினர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் மைதிலி, நிருத்திகா, நிரஞ்சினி, பிரஹான் ஆகியோரின் சிறிய தாயாரும் வித்தியா, லோஷிகா, அபிநயா, சுதாகரன் ஆகியோரின் அன்பு மாமி யும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (10.08.2016) புதன் கிழமை மு.ப. 10.00 மணியளவில் நல்லடக்கம் செய் யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### விநாசித்தம்பி செல்லையா



மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி செல்லையா நேற்று (08.08.2016) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி - செளந்தரப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கதிர்காமு - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், கலாரஞ்சினிதேவி (நோர்வே), சத்தியசீலன் (நோர்வே), சாரதா ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேந்திரா (நோர்வே), சிவாஜினி (நோர்வே), வடிவேல் (M/A- யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனும், யசிகதன், மிதுரா-சிந்து, மாதுளன், சஜித்-பிறேமிளா, சஜித்தா, சஜனுகா, வேதினி, சஞ்சய், டனுசாந் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான வள்ளிப்பிள்ளை, செல்லம்மா, கந்தையா மற்றும் அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.08. 2016) புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 78, பருத்தித்துறை வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 844 9388

## சின்னத்தம்பி கந்தசாமி



பிறப்பு 22 . 05 . 1947 — இறப்பு 08 . 08 . 2016

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், சுதுமலை தெற்கு மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தசாமி நேற்று (08.08.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சிதம்பரம் தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வள்ளியம்மை தம்பதியரின் அன்புமருமகனும் சின்னம்மாவின் அன்புக்கணவரும் சுகந்தினி, ஜெயந்தினி, சாந்தினி, மயூரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் நந்தகுமார், பரமகுலராசா, கிருபாகரன், விசித்திரா ஆகியோரின் அன்புமாமனும் சுஜிந்தன், பவதாரணி, சாருஜன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2016) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 3 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

எச்சாட்டி வைரவர் கோயிலடி,
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காவது டெஸ்ட் நெருக்கடியில் பாக்.


ENGLAND CRICKET VS PCB

இங்கிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் நான்காவது ஆட்டம் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.
முடிவடைந்த மூன்று ஆட்டங்களில் முதலாவதில் பாகிஸ்தானும், ஏனைய இரு ஆட்டங்களில் இங்கிலாந்தும் வெற்றி பெற்றன. இங்கிலாந்து 2:1 என்ற அடிப்படையில் முன்னிலையில் உள்ளது. இதனால் இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றால் மட்டுமே பாகிஸ்தானால் தொடரை குறைந்தபட்சம் சமநிலைப்படுத்த முடியும். ஆட்டம் சமநிலையில் முடிந்தால் இங்கிலாந்து கிண்ணத்தைக் கைப்பற்றும். (ம)

## இந்தியா-தீவுகள் மூன்றாவது டெஸ்ட்



இந்தியா-மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.
முடிவடைந்த முதல் இரண்டு ஆட்டங்களில் அடிப்படையில் இந்தியா 1:0 என்று முன்னிலை வகிக்கிறது. முதலாவது ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெற்றது. இரண்டாவது ஆட்டம் சமநிலை கண்டது. இதனால் இந்த ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெற்றாலோ, அல்லது சமநிலையில் முடித்தாலோ கிண்ணம் அந்த அணியிடம் செல்லவே வாய்ப்புக்கள் அதிகம். தொடரில் தனது இருப்பைத் தக்கவைக்க வேண்டுமாயின் வெற்றிபெற வேண்டிய கட்டாயம் மேற்கிந்தியத் தீவுகளுக்கு உள்ளது. (ம)




# இந்தியாவை வீழ்த்தமுடியும்; ஜெசன் கோல்டர் நம்பிக்கை

இந்தியா, மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில், இந்த ஆட்டத்தில் இந்தியாவை வீழ்த்த முடியும் என்று நம்பிக்கை தெரிவித்தார் தீவுகளின் தலைவரான ஜெசன் கோல்டர்.
மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் தொடர்பாக நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே கோல்டர் இவ்வாறு தெரிவித்தார்.
இந்திய அணி பலம் வாய்ந்ததாக உள்ளது. தொடர் ஆரம்பமாகும் போது இந்தியாவை எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்ற அச்சம் என்னிடத்தில் இருந்தது. முதல் டெஸ்ட் ஆட்டத்தில் இந்தியா எம்மை மிக இலகுவாக வீழ்த்தியது. ஆனால் இந்தத் தோல்வியை நான் அறிந்திருந்தேன்.
ஆனால் இரண்டாவது ஆட்டத்தில் எமது வீரர்கள் சிறப்பான போராட்டக் குணத்தை வெளிப்படுத்தினர். தோல்வியின் பிடியிலிருந்து அணியைக் காத்து ஆட்டத்தை சமநிலைப்படுத்தினர். இந்தப் போராட்டம் நம்ப முடியாமல் இருந்தது.
குறிப்பாக சேஸ், பந்துவீச்சில் சிறப்பாகச் செயற்பட்டதுடன் துடுப்பாட்டத்திலும் சதத்தைப் பதிவுசெய்தார். இந்தச் சமநிலைக்குப் பின்னர் நாளை (இன்று) ஆரம்பமாகும் டெஸ்ட் ஆட்டத்தை வெற்றியுடன் முடிக்க முடியும் என்ற நம்பிக்கை மிகையாகவே ஏற்பட்டுள்ளது. அனைவரும் ஒருமித்த போராட்டத்தை வெளிப்படுத்தினால் நிச்சயம் இந்தியாவை வீழ்த்த முடியும் என கோல்டர் மேலும் தெரிவித்தார். (ம)

## வேகப்பந்து வீச்சாளருக்கு அலிஸ்டர் குக் புகழாரம்

பாகிஸ்தானுக்கு எதிராகக் கிடைத்த வெற்றிக்கு வேகப்பந்து வீச்சாளர்கள்தான் முக்கிய காரணமெனத் தெரிவித்த இங்கிலாந்தின் அணித் தலைவர் அலிஸ்டர் குக், வேகப்பந்து வீச்சாளர்களை மிகையாகப் பாராட்டியுள்ளார்.
இங்கிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் 141 ஓட்டங்களால் வெற்றிபெற்ற இங்கிலாந்து தொடரில் 2:1 என்ற அடிப்படையில் முன்னிலை வகிக்கிறது. முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 297 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் சகல இலக்குகளையும் இழந்து 400 ஓட்டங்களைப் பெற்றது. இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 103 ஓட்டங்களைப் பெற வேண்டும் என்ற கட்டாயத்தில் இரண்டாவது இன்னிங்ஸுக்காக களமிறங்கிய இங்கிலாந்து, சரிவிலிருந்து மீண்டு 445-6 என்ற நிலையில் இருந்தபொழுது ஆட்டத்தை இடைநிறுத்தி, ஐந்தாம் நாள் நிறைவடைய 85 பந்துப்பரிமாற்றங்கள் இருந்த வேளையில் பாகிஸ்தானை துடுப்பெடுத்தாட அழைத்தது.
இங்கிலாந்தின் வேகப்பந்து வீச்சாளர்கள் அபாரமாகச் செயற்பட்டு பாகிஸ்தானை 201 ஓட்டங்களில் சுருட்டினர். அண்டர்சன், புரோட், வோக்ஸ், பின் ஆகிய நால்வரும் தலா இரு இலக்குகளைக் கைப்பற்றினர். இத்தகைய பின்னணியிலேயே இங்கிலாந்தின் தலைவரான குக்கிடமிருந்து வேகப்பந்துவீச்சாளர்களுக்கு பாராட்டுக் கிடைத்துள்ளது.
நாள் முடிவடைய 85 பந்துப்பரிமாற்றங்கள் மீதமிருந்தன. பாகிஸ்தான் தற்போதுள்ள போர்மில் ஆட்டம் சமநிலையில் முடியவே அதிக வாய்ப்புள்ளதாகக் கருதினேன். ஆனால் எனது கணிப்புத் தவறு என்று எமது வேகப்பந்து வீச்சாளர்கள் நிரூபித்துவிட்டனர். 15 பந்துப்பரிமாற்றங்கள் மீதமிருக்கையில் பாகிஸ்தானைச் சுருட்டியது அபாரமானது. வேகப்பந்து வீச்சாளர்கள் மட்டுமல்ல இரு இன்னிங்ஸ்களிலும் அரைச்சதம் விளாசிய மொயின் அலியும் பாராட்டுக்குரியவரே என குக் மேலும் தெரிவித்தார். (ம)



வவுனியா கற்குழி மருதநிலா விளையாட்டுக் கழகத்துக்கு வன்னி பட்டறை அமைப்பால் சில விளையாட்டு உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ம)


## ஒஸ்கர் பிஸ்டோரியஸ் தற்கொலை முயற்சி?



தென்னாபிரிக்க சிறையில் தண்டனை அனுபவித்து வரும் தடகள வீரர் ஒஸ்கர் பிஸ்டோரியஸ் தனது மணிக்கட்டினை வெட்டிக்கொண்டு தற்கொலைக்கு முயன்றார் எனத் தகவல் வெளியானது.
இரு கால்களையும் இழந்த நிலையில் பாரா ஒலிம்பிக் தொடரில் கலந்துகொண்ட தென்னாபிரிக்க வீரர் பிஸ்டோரியஸ் தங்கப் பதக்கம் வென்றிருந்தார். இந்தச் சம்பவத்தின் பின்னரே தென்னாபிரிக்காவெங்கும் அவர் அதிகம் அறியப்பட்டார்.
2013ஆம் ஆண்டு காதலர் தினத்தன்று தனது காதலி ரீவா ஸ்ரீன் கேம்பினை சுட்டுக்கொன்ற வழக்கில், கடந்த ஜூலையில் அவருக்கு 6 வருடசிறைத் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து சிறைத் தண்டனை அனுபவித்துவரும் அவர், நேற்றுமுன்தினம் தனது மணிக்கட்டை வெட்டிக்கொண்டு தற்கொலைக்கு முயன்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.
ஆனால் இந்தத் தகவல்களை மறுத்துள்ள பிஸ்டோரியஸ், தான் படுக்கையிலிருந்து விழுந்ததாலேயே காயம் ஏற்பட்டது என்று கூறியுள்ளார். (ம)

# ஆஸ்திரேலியாவின் ஆட்டங்கள் பன்னாட்டுத் தரத்தில் இல்லை

## டெரன் லீமன் காட்டம்



இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணியின் துடுப்பாட்டம் பன்னாட்டுத் தரத்தில் இல்லை எனத் தெரிவித்தார் அந்த அணியின் தலைமைப் பயிற்சியாளரான டெரன் லீமன்.
ஆஸ்திரேலிய அணியின் ஆட்டம் மிகவும் மோசமாக அமைந்தது. இது பன்னாட்டுத் தரத்திலான ஆட்டம் அல்ல. டெஸ்ட் ஆட்டங்களின் முதல்தர அணி என்பதற்கான அடையாளங்கள் ஆஸியின் ஆட்டத்தில் பிரதிபலிக்கவில்லை. இந்தத் தொடருக்கு தயாரானதை குறைகூற முடியாது. ஆனால் நாங்கள் நினைத்ததைச் செயற்படுத்தவில்லை. இலங்கைக்கு ஈடுகொடுக்கவில்லை. சுழலைச் சமாளிக்கவில்லை.
எமது வீரர்களின் கால் நகர்த்தல்கள் மந்த கதியில் மோசமாக அமைந்தன என லீமன் மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவரங்கால் மத்தி. அரையிறுதியில்

யாழ்ப்பாணம், ஓக. 9
கச்சாய் வொலிகிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

வொலிகிங்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தக் காலிறுதியாட்டத்தில் சீமா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் மோதியது. மூன்று செற்களைக் கொண்டதாக காலிறுதி அமைந்தது. முதல் செற்றை 25:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது ஆவரங்கால் மத்தி. 25:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் இரண்டாவது செற்றைக் கைப்பற்றியது சீமா. அரையிறுதியை முடிவு செய்யும் மூன்றாவது செற்றை 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஆவரங்கால் மத்தி கைப்பற்றியதையடுத்து, அந்த அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)

## அரியாலையின் துடுப்பாட்டத் தொடர்;
## கரவெட்டி ஞானம்ஸ் வி.க. சம்பியன்




யாழ்ப்பாணம், ஓக. 9
அரியாலை சனசமூக நிலையத்தின் 67ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட மென்பந்து துடுப்பாட்டத் தொடரில் கரவெட்டி ஞானம்ஸ் அணி கிண்ணம் வென்றது.

அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் அணியை எதிர்த்து பொற்பதி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து, 54 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சேந்திரன் 26 ஓட்டங்களையும், பிரகாஸ் 14 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பொற்பதி அணியின் சார்பில் அஜந்தன் அதிகபட்சமாக 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

55 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பொற்பதி அணி, 5 பந்துப் பரிமாற்றங்கள் வரை முழுமையாகத் தாக்குப்பிடித்த போதிலும், 50 ஓட்டங்களையே பெற்றது. இதனால் 3 ஓட்டங்களால் வெற்றிபெற்றுச் சம்பியனானது கரவெட்டி ஞானம்ஸ் அணி. (ம-23)

## விக்கினேஸ்வராவின் கால்பந்தாட்டத்தில் சென். அன்ரனிஸ் கிண்ணம் வென்றது



யாழ்ப்பாணம், ஓக. 9
புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் மன்னார் சென். அன்ரனிஸ் அணி சம்பியனானது.

விக்கினேஸ்வராவின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கிளிநொச்சி உதய தாரகை அணியை எதிர்த்து மன்னார் சென். அன்ரனிஸ் அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரு அணியும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்தமையால், சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது மன்னார் சென். அன்ரனிஸ் அணி. ஆட்டநாயகனாக ஆமோஸ், தொடராட்ட நாயகனாக சுதர்சன், கோல்காப்பாளராக ஜோன்சன் (மூவரும் சென். அன்ரனிஸின் வீரர்கள்) ஆகியோர் தெரிவானார்கள். (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஓக. 9
கச்சாய் வாகையடி வொலிகிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில், இரவு 7 மணிக்கு உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நிர்வேலி காமாட்சி அம்பாள் அணி மோதவுள்ளது. (ம-23-108)

## நவசக்தியின் தொடரில் ஆதிசக்தி முன்னேற்றம்



யாழ்ப்பாணம், ஓக. 9
நவசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத்தில் வல்வை ஆதிசக்தி அணி முன்னேற்றம் கண்டது.

நவசக்தியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் வல்வை ஆதிசக்தி அணியை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் அணி மோதியது. ஆட்டம் ஆரம்பமாகி, 5ஆவது நிமிடத்தில் ஆதிசக்தி அணியின் குகன் தனது அணிக்கான முதல் கோலைப் பதிவுசெய்தார். 8 ஆவது நிமிடத்தில் பொம்மர்ஸ் அணியின் சுதன் பதிலடி கொடுக்க முதல் பாதியின் முடிவில் இரு அணிகளும் 1:1 என்றிருந்தன.

இரண்டாம் பாதியின் 7 ஆவது நிமிடத்தில் ஆதிசக்தி அணியின் சண்முகதாஸ் தனது அணியின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார்.

அடுத்த ஐந்து நிமிடங்களில் மீண்டும் பதிலடி கொடுத்தது பொம்மர்ஸ். நிர்ணயிக்கப்பட்ட நிமிடத்தில் இரு அணிகளும் தலா இரு கோல்களைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது ஆதிசக்தி அணி. (ம-422)

## யாழ். பல்கலை சம்பியனானது

யாழ்ப்பாணம், ஓக. 9
அரியாலை சனசமூக நிலையம் நடத்திய வலைப்பந்தாட்டத் தொடரில் யாழ். பல்கலைக் கழக அணி சம்பியனானது.


அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது.

ஜொலிஸ்ரார் அணியை எதிர்த்து யாழ். பல்கலைக் கழக அணி மோதிய இந்த ஆட்டத்தில், யாழ். பல்கலைக் கழக அணி 52:9 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)



## மரண அறிவித்தல்

### இளையதம்பி தம்பாப்பிள்ளை



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 . 01 . 1935 | 06 . 08 . 2016 |

யாழ்.சுன்னாகம் மலப்பையை பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி தம்பாப்பிள்ளை 06.08.2016 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - நல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவகுமார்(சுவிஸ்), சுதர்சினி(நோர்வே), சாந்தினி(ஜேர்மனி), சிவாஜினி(லண்டன்), ரஜனி(கனடா), ரோகினி(லண்டன்), சதீஸ்குமார்(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம், காசிப்பிள்ளை மற்றும் திருவிளங்கம், சரஸ்வதி, யோகாம்பிகை, மகாலிங்கம் ஆகியோரது சகோதரரும் சிவாயினி(சுவிஸ்), திருமுருகன் (நோர்வே), ராம்ராஜ்(லண்டன்), உருத்திரன்(ஜேர்மனி), செல்வராசா(கனடா), சிவரூபன் (லண்டன்), ரமா(கனடா) ஆகியோரது மாமனாரும் சுஞ்சேயன், சிந்துஜன், சர்மி, மயூரிகா, புவனா, மிருஸா, அபினேஸ், யாழினி, தமிழினி, கஸ்தூரி, சிந்தூரி, கோகுலன், மைத்தி, சுஜன்,கவிசா, சாருஜன், சுவேதா ஆகியோரின் தாத்தாவும் மகிழன், பபிசா ஆகியோரின் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மடத்தடிவீதி, நகுலன்கடை,**
**உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

சிவகுமார்(சுவிஸ்) 0041 78721 2375
சாந்தினி(ஜேர்மனி) 0049 17754 70847
ராம்ராஜ்(லண்டன்) 0044 78170 63682
00 94 770 237 973 இலங்கை
00 94 21 205 4607
சிவரூபன் (லண்டன்) 044 771 744 3275

# கரீபியன் பிரீமியர் லீக் தல்லாவாஸ் சம்பியன்



மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்றுவந்த கரீபியன் பிரீமியர் லீக் தொடரில் ஜமைக்கா தல்லாவாஸ் அணி சம்பியனானது. நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் (இலங்கை நேரப்படி) கெய்ல் தலைமையிலான ஜமைக்கா தல்லாவாஸ் அணியும், எம்ரிட் தலைமையிலான கயானா அமேசன் வொரியஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தல்லாவாஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அமேசன் வொரியஸ் அணி 16.1 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சொகைல் ரன்வீர் 42 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் தல்லாவாஸ் அணியின் சார்பில் இமட் வசிம் 3 இலக்குகளையும், சகிப் அல் கசன், வில்லியம்ஸ் இருவரும் தலா இரு இலக்குகளையும், ரசல் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

வற்சன், கெய்ல், சங்கக்காரா, பவல், ரசல், சகிப் அல் ஹசன் போன்ற துடுப்பாட்ட வரிசையைக் கொண்டுள்ள ஜமைக்கா தல்லாவாஸ் அணிக்கு 120 பந்துகளில் 94 ஓட்டங்கள் என்பது கடின இலக்கு அல்ல. பதிலுக்குக் களமிறங்கிய தல்லாவாஸ் அணி 43 பந்துகள் மீத மிருக்க ஓர் இலக்கை மாத்திரம் இழந்து இலகுவாகச் சம்பியனானது. கெய்ல் 54 ஓட்டங்களைப் பெற்றார். ஆட்டநாயகனாக இமட் வசிமும், தொடராட்ட நாயகனாக ரசலும் தெரிவானார்கள். (ம)

**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE
அரச, தனியார் ஊழியர்கள் மற்றும் தொழில்தேடுவோருக்கானது
ஷாம்சனின் நேரடி உரையாடற்பயிற்சி முறையான ஆங்கில பாடநெறி
சனி, ஞாயிறு பிரிவு ஆரம்பம் 13.08.2016 சனிக்கிழமை
மாலை 03.00 - 05.00
3 மாதங்களில் நீங்கள் சுயமாக ஆங்கிலம் பேசுவதற்கான 100 வீத பிரக்டிகல் பேச்சுப்பயிற்சி
பாடப்புத்தகங்கள் சான்றிதழ், Video DVD அனைத்தும் இலவசம்.
SAAMSON
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

## வடமாகாண G.C.E. (O/L) (க.பொ.த.(சா/த)) மாணவர்களுக்காக

# கொழும்பு அருள் கல்வி வட்டத்தினரால் நடத்தப்படும்

## முற்றிலுமான இலவசக் கருத்தரங்கு

### நேரசூசிகை

| திகதி | இடம் | நேரம் |
|---|---|---|
| 11.08.2016 வியாழன் | ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் | காலை 8.30 - பி.ப. 3.00 |
| 12.08.2016 வெள்ளி | வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி | காலை 8.00 - பி.ப. 3.00 |
| 13.08.2016 சனி | யாழ்.வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (பெண்களுக்கு மட்டும்) | காலை 6.30 - பி.ப 3.30 |
| 14.08.2016 ஞாயிறு | யாழ். வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (ஆண்களுக்கு மட்டும்) | காலை 6.30 - பி.ப. 3.30 |
| 15.08.2016 திங்கள் | யாழ். வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (இருபாலாரும்) | காலை 6.30 - பி.ப. 3.00 |
| 16.08.2016 செவ்வாய் | உருத்திரபுரம் மகா வித்தியாலயம் | காலை 8.00 - பி.ப.3.00 |
| 17.08.2016 புதன் | கற்சிலைமடு அரசினர் கலவன் பாடசாலை (அ.த.க) | காலை 8.00 - பி.ப. 3.00 |
| 18.08.2016 வியாழன் | வவுனியா நகரசபை மண்டபம் | காலை 8.00 - பி.ப. 3.00 |
| 19.08.2016 வெள்ளி | மன்னார் நகர சபை மண்டபம் | காலை 8.00 - பி.ப.3.00 |

| பாடம் | ஆசிரியர்கள் |
|---|---|
| கணிதம் | 1. வே. தேவசேனாதிபதி LLB, சட்டத்தரணி<br>2. K. வசந்தன் (Trained Teacher Colombo)<br>3. S. மணிமாறன் (Trained Teacher Colombo)<br>4. M.லிங்கேஸ்வரன் B.Sc,PGDE Teacher St. John's College Jaffna. |
| விஞ்ஞானம் | 1. வே. சுந்தரேஸ்வரன் Rtd.D.G.M, தேசிய லொத்தர் சபை<br>2. V. பிரேம்குமார். P.H.I யாழ்ப்பாணம் |
| தமிழ், வரலாறு | 1. S. நடராஜா B.A (Hons)<br>2.K. திவாகர் B.A (Hons) |

- ★ நூல்கள் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்
- ★ அனைத்துப் பாடமும் அடங்கிய Tutes முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்
- ★ புதிய விஞ்ஞான வினாவிடைக் கொத்து - இலவசமாக வழங்கப்படும்

"அனைவரும் கலந்துகொண்டு பயன் பெறவும்"

இலவசக் கருத்தரங்கின் முழு அனுசரணையாளர் :

**சட்டத்தரணி வே. தேவசேனாதிபதி LLB**

**தொ.இல.077 113 3400, 011 232 7524**

தொடர்பு : 1) பே. இளமுருகன் B.Sc. - 077 907 3593,
2) ஆ. முருகானந்தன் - 071 856 1252,
3) கே.சக்திதரன் AD - 077 842 9649,
4) எஸ். ஐங்கரன் - 077 718 7779

ஊடக அனுசரணை : உதயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.